# THE

# ANALYSIS OF SENTENCES.

## (TAMIL)

F.A:40

# வாக்கியலக்ஷணம்.

160

136

BY

THOMAS JESUDASA KAVIROYER,

EDITED BY

W. E. GANAPATHI PILLAI,

PALAMCOTTAH.

SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞான முனிவர் நூல் நிலையம்
திருநெல்வேலி
TIRUNELVELI.

TINNEVELLY RY. STN.,

PRINTED AT THE ARYAPRAKASINI PRESS.

1897.

0-12-0

# PREFACE.

The Tamil Grammar, as it now exists, consists of five parts, viz. Orthography, Etymology, Subject of Composition (பொருள்), Prosody and Rhetoric. From this division it is evident that no systematic treatment of the construction, nature and import of sentences has been made, although there are certain general rules scattered about for the combination of words. The supply of that want has been a standing desideratum, which this work endeavours to meet. Alive to the defect, the Author who was Tamil Pundit in English Institutions at Palamcottah for a great many years jotted down many points of Grammar which occurred to him in the course of his professional duties, and planned the present work on the model of "Morell's Analysis of Sentences".

Some grammarians of the present day would perhaps take exceptions to certain rules and principles contained in the book as being at variance with the recognized standards laid down by the ancient writers on Grammar. But, as is the case with all languages, Tamil is progressive and is undergoing constant change for the better. New rules on grammatical points hence become necessary to meet those changes.

That this was foreseen and provided for by the great Pavananthi, that prince of grammarians, is clear from the following stanza:

> "பழையன கழிதலும், புதியன புகுதலும்
> வழுவல கால வகை யினானே".

The Author of this work, the late THOMAS JESUDASA KAVIROYER, intended publishing it and had proof copies printed; but before he could fulfil his object he unhappily died.

I have, as a labour of love, undertaken to edit and publish it as his posthumous work. Excepting a few verbal, no alterations have been made, and the little work is issued as the Author left it. May it live, prove useful and keep his memory green.

*W. E. G.*

Some extracts of opinions and reviews of the work b y competent and learned men are appended:—

i. Dr. Sargent:—"Thomas Jesudasa Kaviroyer may be said to be a grammarian born. His first impressions, however, were all derived from the Tamil style of the old grammarians, who expended much labour on the powers of letters and the Etymological inflexions and modifications of words. One writer followed another in much the same groove expressing himself as having culled the choicest flowers in Tamil Grammar and presenting the garland to the young learner.

"In examining the existing grammatical systems, Thomas Kaviroyer came in contact with English notions of grammar and the combined investigation and contrast resulted in the production now offered to Tamil scholars. The Analysis of Sentences will open a new line of thought in this department of education and is calculated to impart a practical knowledge of Tamil highly serviceable to the student.

"I have much pleasure in recommending this Analysis of Tamil sentences to the favourable consideration of students and the public, as a useful handbook in connexion with University and College Examinations."

ii. Dr. Caldwell:—"My failing eye-sight has prevented me from bestowing that attention on Mr Thomas Kaviroyer's valuable Analysis of Sentences that it deserves, but I have had specimen portions read to me and I feel now that I am as able to form a judgment of its contents as if I had been able to read it myself.

"I consider the book a very valuable help to students of Tamil, especially to those who are preparing for examinations. I therefore warmly recommend it to the Heads of Schools and Colleges."

iii. Rev. T. Walker:—"I have looked with some care and

with much pleasure through Thomas Jesudasa Kaviroyer's treatise on Tamil Analysis and Grammar. To those who feel that the existing systems of Tamil grammar, complicated as they are by the numerous diverse methods adopted by different grammarians, are a kind of labyrinthine maze, through which it is difficult and troublesome to thread their way, the present treatise will prove a boon and furnish a consistent guide. While adopting and harmonizing as far as possible the various modes of Tamil grammar now in vogue, the writer has not hesitated to call to his aid those lucid methods of dealing with the structure of sentences and inflexions of words so familiar to the students of Greek or Latin or English.

"Those parts of the book which relate to the Analysis of Sentences are likely, I think, to be peculiarly useful as tending to explain the *rationale* of the Tamil language which is so rich in varying forms of sentence structures aud combinations.

"I feel sure that the book only needs to be used to be appreciated, and sincerely hope that it will be widely adopted in Schools and Colleges."

iv. PROF. SUNDRAM PILLAY:—"I have gone over some parts of the வாக்கியலக்கணம் you sent me. It is a very carefully written book and ought to prove a useful treatise on a part of Tamil grammar which has as yet attracted little or no notice. I believe a treatise like this on the nature and import of sentences will serve also as a preparation for a popular work on Logic of which we can scarcely be said to have anything at all in Tamil. I regret the good Author of this *brochure* is no more. It would be want of duty to him not to publish a work on which he seems to have bestowed so much of thought and labour."

(In his review of the book the Professor has considered its usefulness in a new light which makes the book doubly valuable.)

# முகவுரை,

தமிழ்ப்பாஷையில் பஞ்சலக்ஷணமென்பவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இவைகளே. இவற்றில் முதலில் எழுத்தும் இரண்டாவது அவ்வெழுத்துக்களாலாகும் பதமும் சொன்ன பிறகு அப்பதங்களால் வாக்கியமாகுமென்பதும் அவ்வாக்கியம் இத்தன்மையது இத்தனைவகையுடையது என்பதும் முறையாய்க்கண்டு வாக்கியலக்ஷணமொன்று அமைந்திருக்கவேண்டுவது அவசியம். அப்படிக்கில்லை. சொற்றொடர்களைப்பற்றி நன்னூல்முதலிய பன்னூல்களில் சில பலவிதிகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அவை பூர்ணமன்று.

வெகுகாலமாய் பாளையங்கோட்டை அங்கிலேய வித்தியாசாலைகளில் தமிழ் இலக்கண விலக்கியம்படிப்பித்துவந்த தோமாஸ் இயேசுதாசகவிராயர் இக்குறைவை நிவிர்த்திக்கும்பொருட்டு இவ்வாக்கியலக்ஷணம் உத்பத்திசெய்தனர். ஆனால் அதைப் பிரசுரம்செய்யு முன்காலஞ்சென்று போயினர். அதை யான் இப்போது பிரசுரஞ்செய்யத்துணிந்தேன். சிலபல அக்ஷரப்பிழைகளையும் வார்த்தைப் பிழைகளையுமேயன்றி வேறொருமாறுதலையும் நான் செய்யவில்லை. இன்னூலைப்பற்றி சில வித்துவான்கள் நல்ல அபிப்பிராயமும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை இங்கிலீஷ் முகவுரையில் பார்க்கலாம்.

W. E. GANAPATHY,
*Editor.*

# ANALYSIS OF SENTENCES.

# வாக்கிய லக்ஷணம்.

## PARTS OF A SENTENCE.

## 1. உறுப்பியல்.

### A SENTENCE.

### வாக்கியமாவதின்னதென்பது.

1. ஒரு கருத்தை முடிய விளக்கும்படி சொற்கள் தொடர்ந்து வருவது வாக்கியமாம்.

உதாரணம். பட்சிகள் பறந்தன.

கருத்தென்பது மனதின்கட்பொருள்களைப்பற்றி நிகழும் எண்ணம். சொற்கள் என்பவை அக்கருத்தைப்பிறர்க்கு அறிவித்தற்கருவியாய் நிற்கும் ஒலிக்கூட்டங்கள். இவைகளை மொழிகளெனவும் பதங்களெனவும் வழங்கலாகும்.

இனி, பக்ஷிகள் பறந்தனவென்று சொற்களைத்தொடுத்துக்கூறாமல், பட்சிகள் என்றும் பறந்தனவென்றும் தனித்தனி கூறின், பட்சிகள் என்ன செய்தன? பறந்தன எவை? என்னுங்கேள்விக்கிடமாய் நின்று, முடிந்த கருத்தைக்கொடாமல் வாக்கியத்திற்கு அங்கங்களான தனித்தனிப்பொருள்களையுடைய சொல்லுகளாகவே நிற்கும். ஆகையால் ஒரு கருத்தை முடிய விளக்கும்படி சொற்கள் தொடர்ந்து வருவது வாக்கியமென்னப்பட்டது. ஆகவே, சொற்கள் தொடர்ந்தும் பொருள்முற்றி நில்லாதெனில், அஃதும்

வாக்கியத்திற்கோரங்கமாய் நிற்குமேயன்றி முடிந்த கருத்தையுடைய வாக்கியமாகாது. உ-ம். கரியயானை, இதில் முடியாத கருத்தாய்த்தொடரப்பட்டது காண்க.

இனி, சொற்கள் தொடராமல் தனித்தும்பொருள் முற்றி நிற்குமென்னில், முடிந்த கருத்தையுடைய வாக்கியமேயாகும். இஃது சமயவாற்றலால் சம்பவிக்குமென்க. சமயவாற்றல் என்பது சமய உசிதம். அஃதைச் சங்கேத வலியெனவுங்கூறலாகும்.

வரலாறு:—ஒருவனிடத்து ஒருவன் வந்தபோது, வா என்பது உலகியல். இப்படிப்பட்டவிடத்து வருதற்கு வினைமுதலாகிய நீ என்னுஞ்சொல் குறைந்திருப்பினும், அது சேர்ந்தாற்போல பொருள் முற்றி நிற்கையால் தனிமொழி முடிந்த கருத்தைக்கொடுத்து வாக்கியமாயிற்று. இன்னும் இவற்றைப்பற்றி பொதுவியல் வாக்கியாங்கத்தொகையினிடம் விரிவாய்க்கண்டுகொள்க.

## CERTAIN RULES WHICH ARE NECESSARY TO THE UNDERSTANDING OF SENTENCES.

## வாக்கியக்கருத்துக்கள் புலப்படுவதற்குக் காரணங்கள்.

2. அவாய்நிலை, தகுதி, அண்மை, என மூவகைத்தொடர்பால் வாக்கியக்கருத்துக்கள் புலப்படும். கருத்துக்கள் புலப்படுதலாவது, அர்த்தக்கியானப்படுவது.

### அவாய்நிலை.

3. வாக்கியத்தில் ஒரு சொல்லை ஒரு சொல் வேண்டியே நிற்பது அவாய்நிலையாம்.

உ—ம். குதிரையைக்கொண்டுவா.

இங்கே, குதிரையையென்பது கொண்டுவாவென்பதையும், கொண்டுவாவென்பது குதிரையையென்பதையும் அவாவி நின்றமையால் கருத்துப் புலப்பட்டது. குதிரையை நடவெனவரில், தொடர்ந்து நிற்பினும் ஒன்றையொன்று வேண்டி நில்லாமையால், கருத்துப்புலப்படுதற்கு இடமின்று. ஆகையால் அவாய்நிலை வேண்டியதென்க. அவாய்நிலையை வடநூலார் ஆகாங்க்ஷை என்பர்.

## தகுதி.

4. வாக்கியத்திலுள்ள சொற்கள் தக்க குணத்தினாலே ஒன்றையொன்று தொடர்ந்து நிற்குந்தன்மையுடையது தகுதியாம்.

உ-ம். நீராலே நனை.

நனைத்தற்கு நீர் தகுதியாதலால் அதற்கு அது தகுதியாயிற்று. நெருப்பாலே நனையெனில், தொடர்ந்தும், தக்க சொல்லோடு தொடராமையால் கருத்துப்புலப்படுதற்கிடமின்று. ஆகையால் தகுதி வேண்டியதென்க. நெருப்பால் நனையென்பதும், கம்பாலடியென்பதுபோலக்கொள்ளுஞ்சொல்லால் அவாய்நிலையுண்டெனினும், பொருளால் தகுதி இல்லை. ஆகையால் பொருள் தகுதியே இங்கே தகுதியென்னப்பட்டது. தகுதியை வடநூலார் யோக்கியதையென்பர். இனி, குதிரையை நடந்தான், மாடு வந்தான், என அவாய்நிலையும் பொருட்டகுதியுமில்லாமல் வருபவைமுற்றும் வழூஉத்தொடர்களெனக்கொள்ளப்படும்.

## அண்மை.

5. வாக்கியத்திலுள்ள சொற்கள் காலம் இடைவிடுதலன்றித் தொடுத்துச்சொல்லப்படும் தன்மையுடையது அண்மையாம்.

உ-ம். வந்தான் அவ்வூருக்கு
நேற்றுப்போன சாத்தன்.

இச்சொற்களைத்தொடுத்துக்கூறாமல் நாழிகைக்கு ஒவ்வொன்றாகக் கூறில், பொருளுணர்விற்கு இடமின்று. ஆகையின் அண்மை வேண்டுவதென்க.

அவாய்நிலையும் பொருட்டகுதியுமுள்ளதொடர்கள் இரு சொற்களாகவே நில்லாமல் பலவாய்த்தொடருமிடத்து, இடையிற்பிறசொற்கள் வரப்பெற்றும் முன் பின்னாக மாறியும் நிற்கின்றமையால், அவை ஒருங்கே புலப்படும்படி தொடுத்து உச்சரிக்கவேண்டுமென்பதே அண்மையின் தாற்பரியமாம். அண்மையை வடநூலார் சாமீப்பியமென்பர். அன்றியும், தின்றான் கடலுக்கு மாடு என வருந்தனிக்கருத்திலுள்ள சொற்களையும், மலையுண்டான் நெருப்புடையது சோறு தேவதத்தன் என வருந்தொடர்கருத்திலுள்ள சொற்களையும், எவ்வளவு விரைவாய் உச்சரித்தாலும் அவாய்நிலையும் பொருள் தகுதியுமின்மையால், பொருளுணர்விற்கிடமின்று. ஆகையால் அவாய்நிலையும் பொருள் தகுதியுமுள்ள தொடர் சொற்களை அடுக்கவைத்துச்சொல்லுவதே அண்மைக்குரிய லட்சணமென்க.

தனிக்கருத்தென்பது, ஒரே பயனிலையால் முடிவையுடைய கருத்து. தொடர்கருத்தென்பது, பலபயனிலையால் முடிவையுடைய கருத்து. மேலே தொடர் கருத்தென்பதில், மலை நெருப்புடையது, தேவதத்தன் சோறுண் டான், என மொழிகளை மாற்றி இரண்டு முடிவையுடைய கருத்துக்கள் அடங்கியதையும், நெருப்புடையதற்கும் சோறுண்டதற்கும் யாதொரு சம் பந்தமில்லாமையால், அக்கருத்துகளுள் ஒன்றுக்கொன்று அவாய்நிலையின்மை தகுதியின்மையும், அவை காரணமாகப் பொருளுணர்விற்கிடமின்மையுங் காண்க. தனிக்கருத்து தனிவாக்கியமென்றும், தொடர்கருத்து தொடர் வாக்கியமென்றும் கொள்ளப்படும். அவற்றை வாக்கிய இயலுட்காண்க.

இனி, மிகப்பெரிய கொம்பையுடைய மான் பள்ளத்தையடையப்பரற் கற்கள் தெறிப்ப, என வருந்தொடர் கருத்தில், மான் அடைந்தமையால் பரற்கற்கள் தெறிப்பவென்னுங்காரணகாரிய சம்பந்தமாகிய அவாய்நிலை யும், குளம்புபடலால் தெறித்தல் கூடுமென்னுந்தகுதியும் பொருந்தியி ருக்க, அத்தொடர்களை அந்நெறிமாற்றி மிகப்பெரிய கொம்புகளையுடைய பரற்கற்கள் பள்ளத்தையடைய மான்தெறிப்ப (மாயிருமருப்பிற்பரலவல டைய இரலை தெறிப்ப) என வைத்து அண்மைப்படக்கூறினும் பொருளு ணர்விற்கிடமில்லையேயெனில், வழக்கின்கண் அவ்வாறாயினும், செய் யுளின்கண் கொண்டு கூட்டுமுதலிய அன்வயங்களின் ஆதரவாகப்பொ ருள்கொள்ளப்பட்டு நிற்கும். இவைபோல இன்னும், சுளையாடக்கெண் டை கயத்தாட மஞ்ஞை சுனையாழ அம்மிமிதப்ப என அண்மையாற்புலப் படாமல் வருந்தொடர் கருத்துக்களும் சிலவுண்டு. அவைகளில் சொல் அவாய்நிலைபற்றித்தொடர்ந்திருப்பினும், பொருள் தகுதியில்லாமையால் வழுவாகக்கொண்டுவிடாமல், கெண்டை கயத்தாட, மஞ்ஞை சுளையாட, சுனைமிதப்ப, அம்மியாழ, என மொழிகளை மாற்றிப்பொருள்கொள்வதும் அவ்வாறான அன்வயங்களே. கெண்டைகளையிலாடிற்று, அம்மிமிதந்தது என வருந்தனிக்கருத்துகளில் அவ்வாறு மொழிமாற்றுக்கிடமின்மையால், அண்மையிருப்பினும் பொருள் தகுதியில்லாமைபற்றி, நெருப்பால் நனை யென்பது போலொத்த வழூஉத்தொடரேயாம். செய்யுளின் கண்ணுந்தொ டர்கருத்துக்கள் இரண்டு மூன்றுக்கு மேற்பட்டு நின்றவிடத்து. சொற்கள் மாறிநிற்பின், அன்வயங்களாலும் பொருள் புலப்படுவது அரிதாகையால், அண்மையால் பிரயோஜனப்படாத வழூஉத்தொடரென்றேகொள்ளப்படும். இவ்வாறு வருவதை வடநூலார் துரான்வயதோஷக்கிரஸ்தம் என்பர்.

மேற்கோள் சூத்திரம்.

தனிமொழி சமயவாற்றலாற் றனித்தும்,
தொடர்மொழி யவாய்நிலை தகுதியண்மையில்,
தொகை நிலை தொகா நிலையாய் இருவகையாற்,
றொடர்ந்தும் பொருளைத் தோற்றுவ தியல்பே.

(பின்னே கூறப்படும் தொடர்மொழிச்சம்பந்தமான சில ஆக்ஷேபனைகளுக்கு நியாயம் விளங்குவதற்காதாரமாக இங்ஙனம் துவக்கத்தில் சற்று விரிவாயெழுதப்பட்டது. இவை சில மாணுக்கருக்கு முதலாவது வாசிக்கும்போது விளங்காவிடினும், ஒருதரம் நூலை முடித்துத்திரும்பும்போது தெளிவாய் விளங்கும்.)

## FORMS OF SENTENCES.

## வாக்கியக் கருத்துக்கள் முடியும் வகை.

6. வாக்கியக்கருத்தானது வினைநிலையுரைத்தல், ஏவல்காட்டல், வியங்கோள்இசைத்தல், வினவிநிற்றல், பெயர்ப்பயனுதல், என ஐவகையிலொன்றாய் உடன்பாடு அல்லது எதிர்மறையில் முடிவுபெற்று நடக்கும்.

உதாரணம்.

| உடன்பாடு. | எதிர்மறை. | |
|---|---|---|
| இராமன் வந்தான். | வந்திலன் | (வினைநிலையுரைத்தல்.) |
| நீ. போ | போகாதே | (ஏவல் காட்டல்.) |
| நாகன் வாழ்வானாக. | வாழானாக | (வியங்கோள் இசைத்தல்.) |
| சாத்தன் யாவன். | யாவனிலன் | (வினவி நிற்றல்.) |
| அது மரம். | மரமன்று | (பெயர்ப்பயனுதல்.) |

உடன்பாட்டுமுடிவை அன்வயமுடிவென்றும், எதிர்மறைமுடிவை வியதிரேக முடிவென்றுங்கூறலாகும்.

இனி, பசு உள்ளது, மரம் உண்மையது, என வருவதைப்பொருண்மை சுட்டலெனவும்; ஆ கரியது, பழம் இனியது, மரம் வலியது, என வருவதைப்பண்புகாட்டலெனவும்; சில முடிவுவிகற்பங்களை இலக்கணிகள் காட்டுவாராயினும், அவை வினைநிலையுரைத்தலில் அடங்குமென்க.

மே—சூ. 1.

வினைநிலையுரைத்தலும், வினவிற்கேற்றலும், பெயர்கொளவருதலும், பெயர்ப்பயனிலையே.

சூ. 2.

அவற்றுள், எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றுநிலையே
பொருண்மை சுட்டல், வியங்கோள் வருதல்,
வினை நிலையுரைத்தல், வினவிற்கேற்றல்,
பண்புகொள வருதல், பெயர்கொள வருதலென்
றன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையே.

## THE PARTS OF A SENTENCE.

## வாக்கிய உறுப்புகள்.

7. மேற்கூறிய வாறு வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் எழுவாய், பயனிலை, என இரண்டு பிரதான உறுப்புகளைப்பெறும்.

## THE SUBJECT AND PREDICATE.

## எழுவாயும் பயனிலையும்.

8. அவற்றுள் வாக்கியத்தின் முதற்பொருள் எழுவாயும் முதற்பொருளின் பயனும்முடிந்துவருவது பயனிலையுமாம்.

உ—ம். மழை பெய்தது.
குயில்கள் கூவின.

இங்கே மழை, குயில்கள், என்பவை வாக்கியத்தின் முதற்பொருள்களாய் நின்று எழுவாய்களாயின. பெய்தது, கூவின, என்பவை முதற்பொருள்களின் பயன்களாய் முடிந்துவந்தமையால் பயனிலைகளாயின. எழுவாயென்பதற்குப் பயனிலை எழுமிடம் என்று அருத்தமாம். பயனிலையென்பது எழுவாயின் பொருள்நிலையென்று அருத்தமாம். இன்னும் பயனிலையைச் சார்ந்து செயப்படுபொருள், கருவிப்பொருள் முதலிய வேற்றுமைப்பொருள்கள் வரும். அவைகளும் இலக்கணசம்பந்தத்தில் வாக்கிய உறுப்புகளாகவே கொள்ளப்படும்.

அன்றியும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் முதலிய ஒவ்வோருறுப்பையுஞ்சார்ந்துவரும் அடைமொழிகளும் அவ்வாறு வாக்கிய உறுப்புகளாகக்கொள்ளப்படும். ஆகவே வாக்கியங்களுக்குப்பிரதான உறுப்புகள் எழுவாய், பயனிலை, என இரண்டேயெனவும், செயப்படுபொருள் முதலிய வேற்றுமைப்பொருள்களையும், அடைமொழிகளையுஞ்சேர்த்து நான்காகுமெனவும் கொள்க. செயப்படுபொருள் முதலிய வேற்றுமைப்பொருள்கள் துணைநிலையுறுப்புகளென்னப்படும். இத்துணைநிலையுறுப்பை பயனிலைத்துணைநிலை கூறுமிடத்தும், அடைமொழி உறுப்பை அடைமொழி கூறுமிடத்துங்காண்க.

## TWO FORMS OF PARTS OF A SENTENCE.

## எழுவாய் பயனிலைகளாகிய உறுப்புகளின் வகுப்புகள்.

---

9. எழுவாய் பயனிலைகளாகிய உறுப்புகள் ஒவ்வொன்றும், தனிநிலை, விரிநிலை, என இரண்டுவகைப்படும். எனவே எழுவாய், தனிநிலை எழுவாய், விரிநிலை எழுவாய், என்றும்; பயனிலை, தனிநிலைப் பயனிலை, விரிநிலைப் பயனிலை, என்றும் வருமெனக்கொள்க.

தனிநிலை, விரிநிலை, தனியென்றும் விரியென்றுங்கூறப்படும்.

---

## THE SIMPLE SUBJECT.

## தனிநிலை எழுவாய்.

---

10. தனிமொழியில் வரும் பெயர், முதல்வேற்றுமைக்கருத்தாவாயிருக்கும்போது, தனிநிலை எழுவாயாம்.

உ—ம். இராஜா வந்தார்.
மந்திரி பேசினான்.

கருத்தா வினைமுதலென்றுங்கூறப்படும். பெயரொனப்பொதுப்படக் கூறினமையால், பெயர் விகற்பங்கள் யாவும் இத்தனிநிலையெழுவாய்க்கு வருமெனக்கொள்க. அன்றியும், தளகர்த்தன், படைத்தலைவன், ஆறுமுகம், அழகப்பன், காற்றாடி, கரிக்குருவி, மண்வெட்டி, நாற்காலி, எனப்பெயரை இறுதியாகக்கொண்டுவரும் ஆக்கத்தொடர் மொழிகளும், கைக்களிறு, முற்கோபம், நற்குணம், காரிருள், பெருமழை,கைக்குடை, எனப்பெயரை இறுதியாகக் கொண்டுவரும் அமைப்புத்தொடர்மொழிகளும் இத்தனியெழுவாய்க்கு வரும். இவைகள் ஒரு மொழித்தன்மைப்பட்டு வருவதால், இவற்றைத் தொடர் ஒரு மொழிகளென்றும் தொடர்மொழிப் பெயர்களென்றும் கொள்ளத்தகும். இன்னும் இவை செங்காணை, சுடுசெங்கல், என இரண்டுக்கு மேற்படத்தொடர்ந்து, பன்மொழித்தொடர்மொழியெனவும் நின்று, இத்தனி யெழுவாய்க்கு வருமெனக்காண்க.

## THE ENLARGED SUBJECT.

## விரிநிலை எழுவாய்.

11. தனிநிலை எழுவாயை விசேஷிக்க அடைமொழிகள் தொடர்ந்துவருமெனில் விரிநிலை எழுவாயாம்.

உ-ம். சிறிய கன்றுகள் துள்ளின.
சிறுவன் பாடினவன் மகிழ்ந்தான்.
பெரிய மட்குடம் உடைந்தது.

அடைமொழி விசேஷணமெனவும் படும். ஆக்கற்றொடரும், அமைப்புத்தொடரும், தம்முள் விசேஷணங்களடுத்துவரத்தொடர்ந்து நிற்பினும், அவை ஒரு சொற்றன்மைப்பட்டு நிற்பவைகளாதலால், அவைகளுக்குமேல் நின்றடுத்துத்தொடர்பவைகளே இங்கே அடைமொழிகளென்னப்பட்டன

## THE SIMPLE PREDICATE.

## தனிநிலைப்பயனிலை.

12. எழுவாயினது தந்தொழிலையாவது தம்மினுகிய தொழிலையாவது காட்டித்தனிமொழியில் வரும் வினைமுற்றே தனிநிலைப் பயனிலை என்னப்படும்.

உ-ம். சாத்தன் நடந்தான்.
குயவன் குடத்தை வனைந்தான்.
மரம் வாளால் அறுக்கப்பட்டது.

தந்தொழில் என்பது செய்வினை; தம்மினுகிய தொழில் என்பது செயப்பாட்டுவினை. பொதுவியலில் வாக்கியப்பிரயோகங்காண்க. முற்று என்றமையால் இயல்பு வினைமுற்று, ஏவல்வினைமுற்று, வியங்கோள்வினைமுற்று, எனவருமூவகை வினைமுற்றும் இப்பயனிலையாக வருமெனக்கொள்க. இயல்பு வினைமுற்று என்பது மூவிடத்திலும் ஐம்பாலை முக்காலத்திஞல் மாற வந்த இருபத்தேழு வினைமுற்றுகளாம்.

இனி அணிவகுத்தான், புறங்கொடுத்தான், காப்பாற்றினுன், கண்பார்த்தான், செலவழித்தான், எனவரும் வினையை இறுதியாகவுடைய ஆக்கற்

றொடர்மொழிகளும்; கைகழுவினன், கட்டிமுடிந்தது, வெட்டித்தள்ளினன், சாப்பிட்டாயிற்று, சண்டைபண்ணினன், குற்றமுண்டு, குணமில்லை, தந்த சுத்திபண்ணிக்கொண்டிருந்தான் எனவரும் அமைப்புத்தொடர்மொழிகளும் இத்தனிப்பயனிலைக்குவரும். தொடர்மொழிப்பெயர் என்னப்பட்டதுபோல இவை தொடர்மொழி வினையென்னப்படும். அவன் யாவன், அது குளம், இது சோலை, அம்மரம் பூவரசு, எனப்பெயர்களும் பயனிலையாகவரும்.

## THE ENLARGED PREDICATE.

## விரிநிலைப்பயனிலை.

13. தனிநிலைப்பயனிலையை விசேஷிக்க அடைமொழிகள் தொடர்ந்துவருமெனில் விரிநிலைப்பயனிலையாம்.

உ-ம். சாத்தன் தயாளமாய்ப்பேசினன்.
கொற்றன் விரைவாய் ஓடிவந்தான்.
அவ்வீடு அழகாய்க்கட்டப்பட்டது.

விரிநிலைப்பயனிலையிலும் தொடர்மொழிக்குமேல் நின்று அடுத்துவருப வைகளையே விசேஷணமாகக்கொள்க.

## THE COMPLETION OF THE PREDICATE.

## பயனிலைத்துணைநிலை.

14. தனிவிரியாக மேலே சொல்லப்பட்ட பயனிலைகள் நிறைவடையும்பொருட்டு தம்மைச்சார்ந்துவரு முதலாம்வேற்றுமை தவிர்ந்த மற்ற ஏழுவேற்றுமைப் பொருட்களாகிய செயப்படுபொருளையும், கருவிப்பொருளையும், கருவிச்சார்பொருளையும், கோடற்பொருளையும், கோடற்சார்பொருளையும், நீக்கற்பொருளையும், நீக்கற்சார் பொருளையும், கிழமைப்பொருளையும், இடப்பொருளையும், விளிப் பொருளையுமே பயனிலைத்துணைநிலையென்னலாம்.

துணைநிலையை துணைப்பொருளெனவுங்கூறலாகும். கருவிச்சார்பொருளென்பது கருவிப்பொருளுக்குரிய 3-ம் வேற்றுமையில் வரும் உடனிகழ்ச்சிப்பொருளும், கோடற்சார்பொருளென்பது கோடற்பொருட்குரிய 4-ம்

வேற்றுமையில் வரும் நட்பு தகுதிமுதலிய பொருளும், நீக்கற்சார்பொரு ளென்பது நீக்கற்பொருளுக்குரிய 5-ம் வேற்றுமையில் வரும் ஒப்பு முதலிய பொருளுமாம்.

செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருளாறுந்தருவது வினையேயென்பதினுல் செய்பவனும் பயனிலைத்துணைநிலைபோல் வரினும் அதனையெழுவாயென வேறுபிரித்துவிட்டமையால் அது நீங்கலாகிய மற்ற வேற்றுமைப்பொருள்களே இங்கே பயனிலை வினைக்குத்துணைநிலையென் னப்பட்டன.

## 1. THE OBJECT OF THE ACTION.

## செயப்படுபொருளாகிய துணைநிலை வருதல்.

15. பயனிலை தன்தொழிலையேற்கும்பொருளை வேண்டிநிற் குமிடத்து அப்பயனிலையைச்சார்ந்து இரண்டாம் வேற்றுமைப்பொ ருளாகிய செயப்படுபொருள் வரும். அது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமையென ஆறுவகைப்பொரு ளும் பிறவுமாம்.

உ-ம். கொற்றன் வீட்டைக்........கட்டினன்......(ஆக்கல்.)
,, மரத்தை..........வெட்டினன்...(அழித்தல்.)
,, ஊரைச்.........சேர்ந்தான்......(அடைதல்.)
,, பட்டணத்தை...விட்டான்.......(நீத்தல்.)
,, மலையை..........ஒத்தான்.........(ஒத்தல்.)
,, மாட்டை.........உடையான்......(உடைமை.)
,, நூற்பொருளை....அறிந்தான்......(விஷயம்.)

செயப்படுபொருள் கருமமெனவும் காரியமெனவும் படும்.

## 2. THE INSTRUMENT AND CAUSE OF THE ACTION.

## கருவிப்பொருளும் அதைச்சார்பொருளுமாகிய துணைநிலை வருதல்.

16. பயனிலை தன் செய்கைக்குக்காரணமாகிய ஏதுவை வே ண்டிநிற்குமிடத்து அப்பயனிலையைச்சார்ந்து கருவிப்பொருள் கர்த்

தாப்பொருள்களும், தன்னொடு நிகழ்வதாகியபொருளை வேண்டிநிற்குமிடத்து உடனிகழ்ச்சிப்பொருளுமாகிய மூன்றும்வேற்றுமைப் பொருள்கள் வரும். இவற்றுள் கருவி முதற்கருவி துணைக்கருவி யென்றும், கருத்தா இயற்றுதற்கருத்தா ஏவுதற்கருத்தாவென்றும், இரண்டிரண்டு பிரிவுகளாக வரும்.

| | | |
|---|---|---|
| உ-ம். மரத்தால் | பெட்டிசெய்யப்பட்டது. | (முதற்கருவி.) |
| உளியால் | பெட்டிசெய்யப்பட்டது. | (துணைக்கருவி.) |
| தச்சனால் | பெட்டிசெய்யப்பட்டது. | (இயற்றுதற்கருத்தா.) |
| அரசனால் | பெட்டிசெய்யப்பட்டது. | (ஏவுதல்கருத்தா.) |
| சாத்தனோடு | கொற்றன் வந்தான். | (உடனிகழ்ச்சி.) |

காரணம் ஏது கருவி என்பன ஒருபொருள். காரணம் முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணமென மூன்றாகவழங்கும். அவற்றுள் முதற்காரணந்துணைக்காரணமென்பவற்றையே கருவியெனக்கொண்டு முதற்கருவி துணைக்கருவியெனவும், நிமித்தகாரணத்தையே கருத்தாவெனக்கொண்டு இயற்றுதற்கருத்தா ஏவுதற்கருத்தாவெனவும், இங்கே கூறப்பட்டது.

---

## 3. THE RECEIVER.

## கோடற்பொருளும் அதைச்சார் பொருளுமாகிய துணைநிலைவருதல்.

17. பயனிலை, கொடை பகை நட்பு தகுதி முதற்காரணம் நிமித்தகாரணம் முறை முதலிய கருத்தைக்கொண்டு நிற்குமிடத்து, அப்பயனிலையைச்சார்ந்து முறையே கொடைக்குக்கோடற்பொருளும், பகைக்குப்பகைத்தொடர்பொருளும், நட்புக்கு நட்புத்தொடர்பொருளும், தகுதிக்குத்தகுதியுடைப்பொருளும், முதற்காரணத்திற்கு முதற்காரண காரியப்பொருளும், நிமித்தகாரணத்திற்கு நிமித்தகாரண காரியப்பொருளும், முறைக்கு முறைக்கிளைப்பொருளுமாகிய நான்காம் வேற்றுமைப்பொருள்கள் வருமெனக்கொள்க.

உ—ம்.

கொற்றனுக்குப்பொன்கொடுத்தான்சாத்தன். ......... (கோடற் பொருள்.)
பாம்புக்குப்பகையாயுள்ளது கருடன். ............ (பகைதொடர் பொருள்.)

சாத்தனுக்கு கொற்றன் நட்பாளன்......... (நட்புத்தொடர் பொருள்.)
அருங்கலம் அரசர்க்குரித்து..................... (தகுதியுடைப் பொருள்.)
அவனுக்காவது இந்நெல் ............... (முதற்காரண காரியப்பொருள்.)
கூழிற்குச்செய்வது குற்றேவல்...........(நிமித்தகாரணகாரியப் பொருள்.)
கொற்றனுக்கு மகனாயினான் இவன்............... (முறைக்கிளை பொருள்.)
மழைக்குக்குறியாயுள்ளதுமின்னல்...(உற்பாதத்தாற்குறிக்கப்பட்டபொருள்)

அன்றியும் நல்லோருக்குச்செல்வமுண்டாகுகவென வாழ்த்தலில் நன்மைத்தொடர் பொருளும், தீயோருக்குக்கேடுண்டாகவென வைதலிற் றீமைத்தொடர் பொருளும் வருவன அறிந்துகொள்க.

---

## 4. MOTION FROM A PLACE.

## நீக்கற்பொருளும் அதைச்சார்பொருளுமாகிய துணைநிலை வருதல்.

---

18. பயனிலை, நீங்கல் உவமை எல்லைநிலை ஏதுநிலைகளை வேண்டுங்கருத்தாய் நிற்குமிடத்து, அப்பயனிலையைச்சார்ந்து முறையே நீக்கற்பொருளும் ஒப்புப்பொருளும் எல்லைப்பொருளும் ஏதுப்பொருளுமாகிய ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்கள்வரும்.

உ—ம். மலையின் வீழ்ந்தது அருவி ..................(நீக்கல்.)
காக்கையிற்கரிது களம்பழம் ..................(ஒப்பு.)
மதுரையின் வடக்குள்ளது சிதம்பரம் ... (எல்லை.)
கல்வியிற் பெரியவன் கம்பன்..................(ஏது.)

அரசரிற்பெரியோர் அந்தணர், ஆவினிழிந்தது மேதி என உயர்வு தாழ்வுகளினும் நீக்கற் பொருள்வருமெனக்கொள்க.

---

## 5. THE POSSESSER.

## கிழமைப்பொருளாகிய துணைநிலைவருதல்.

---

19. பயனிலை தனக்குச்சம்பந்தங்கருதி நின்றவிடத்து அப்பயனிலையைச்சார்ந்து தற்கிழமைப்பொருளும் பிறிதின்கிழமைப் பொருளுமாகிய ஆறும் வேற்றுமைப்பொருள்கள் வரும். அவற்றுள்

தற்கிழமையானது உறுப்புத்தற்கிழமை, பண்புத்தற்கிழமை, ஒன்றன்கூட்டத்தற்கிழமை, பலவின்கூட்டத்தற்கிழமை, திரிபினுக்கத் தற்கிழமை, என ஐந்து வகையாகவும்; பிறிதின்கிழமையானது பொருட்பிறிதின்கிழமை, இடப்பிறிதின்கிழமை, காலப்பிறிதின்கிழமை, என மூவகையாகவும் வருமெனக்கொள்க.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். இது சாத்தனது கை............ | (உறுப்பு.) | தற்கிழமை. | |
| ,, சாத்தனது கருமை......... | (பண்பு.) | | |
| ,, நெல்லது குப்பை......... | (ஒன்றன்கூட்டம்.) | | |
| ,, சேனையது தொகுதி...... | (பலவின் கூட்டம்.) | | |
| ,, நெல்லினது பொரி...... | (திரிபினுக்கம்.) | | |
| ,, நாகனது வேல்............ | (பொருள்.) | பிறிதின்கிழமை. | |
| ,, முருகனது மலை............ | (இடம்.) | | |
| ,, சிறுவனது நாள்......... | (காலம்.) | | |

---

## 6. THE PLACE.

## இடப்பொருளாகிய துணைநிலை வருதல்.

---

20. பயனிலை தனக்கு ஆதாரமான இடத்தை வேண்டிநிற்குமிடத்து அப்பயனிலையைச்சார்ந்து இடப்பொருள் வரும். வருமிடத்து பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுவகைப்பெயர்களும் அப்பயனிலையின் எழுவாய்க்குத் தற்கிழமைப் பொருளாயாவது பிறிதின்கிழமைப் பொருளாயாவது நின்று இடமாகுமெனக்கொள்க.

உ-ம்.

| | | |
|---|---|---|
| மணியின்கண் உள்ளது ஒளி ... ... தற். | (பொருளிடம்.) | |
| பனையின்கண் உள்ளது அன்றில் ... ... பிறி. | | |
| ஊரின்கண் உள்ளது மாளிகை ... ... தற். | (இடமிடம்.) | |
| ஆகாயத்தின்கண் பறப்பது பருந்து ... பிறி. | | |
| நாளின்கண் உள்ளதுநாழிகை. ... ... தற். | (காலமிடம்.) | |
| வேனிற்கட்பூப்பது பாதிரி ... ... பிறி. | | |
| கையின்கண் உள்ளது விரல் ... ... தற். | (சினையிடம்.) | |
| காலின்கண் விளங்குவது கண்டாமணி... பிறி. | | |
| கற்பின்கண் மிக்கது அழகு ... ... தற். | (குணமிடம்.) | |
| இளமையின்கண் வாய்த்தது செல்வம்... பிறி. | | |
| ஆடற்கண் உள்ளது தாளம் ... ... தற். | (தொழிலிடம்.) | |
| ஆடற்கண் பாடுவது பாட்டு ... ... பிறி. | | |

இன்னுமிவை மரத்தின்கீழ் நின்றது மாடு, மலையின்மேல் ஓடியது மான், காட்டினுட்சென்றது முயல், ஊர்ப்புறம்போயது மேதி, எனவரு பவைகளில்: கீழிடப்பொருள், மேலிடப்பொருள், உள்ளிடப்பொருள், புறவிடப்பொருளாய் நின்று வருவனவற்றையுங்கொள்க.

---

## 7. THE PERSON OR THING ADDRESSED.

## விளிப்பொருளாகிய துணைநிலைவருதல்.

---

21. பயனிலை ஏவுதற்கருத்தாய் அழைத்தலை வேண்டிநிற்குமிடத்து அப்பயனிலையைச்சார்ந்து எட்டாம் வேற்றுமை விளிப்பொருள் வரும்.

உ--ம். சுவாமீ! ... நீர்.....................கேளும்.
தம்பீ! ... நீ..................... வாராய்.
மானே! ... நீ..................... வாழ்க.

---

## COMPOUND COMPLETION AND ENTENSION.

## துணைநிலை பலவருதல்.

---

22. இத்துணைநிலைகள் மேற்கூறியவாறு ஒரோ பயனிலையைச் சார்ந்து ஒவ்வொன்று தனித்தனிவருவதுமன்றி ஏற்றவாறே இரண்டு முதலிய பலவும் வரும்.

| | |
|---|---|
| உ--ம். சாத்தன் கோடரியால் மரத்தை வெட்டினன். | (செயப்படுபொருளுடன் கருவிப்பொருள்சேர்ந்து இரண்டு துணைநிலை வந்தன.) |
| தாய் அன்பினுல் பிள்ளைகளுக்குப் பாலை ஊட்டினள். | (கோடற்பொருள் சேர்ந்து மூன்று துணைநிலை வந்தன.) |
| பக்ஷிகள் குஞ்சுகளுக்குப்பிரியத்தினுல் வாயிலிருந்து இரையைக்கொடுக்கின்றன.) | (நீக்கற் பொருள் சேர்ந்து நான்கு துணைநிலை வந்தன.) |
| கொற்றன் உருக்கத்தினுல் மாட்டுக்குத்தண்ணீரைக்குடத்திலிருந்து தொட்டியில்வார்த்தான். | (இடப்பொருள்சேர்ந்து ஐந்து துணைநிலை வந்தன.) |

இப்படியே மற்றவைகளையுங்கண்டுகொள்க, ஒரு வாக்கியத்தில் இத்

துணைநிலையின்றித்தனியாகவும் விரியாகவும் பயனிலைவரில், துணைநிலையில்லாததனிப்பயனிலை துணைநிலையில்லாவிரிப்பயனிலையென்றும்; துணைநிலையுடைத்தாய்த் தனியாகவும் விரியாகவும் பயனிலைவரில், துணைநிலையுடைத்தனிப்பயனிலை துணைநிலையுடைவிரிப்பயனிலையென்றும்; துணைநிலை இரண்டு மூன்று முதலாகவுடைய தனியாகவும் விரியாகவும் பயனிலைவரில், துணைநிலை இரண்டு மூன்றுடைத்தனிப்பயனிலை விரிப்பயனிலையென வந்த வந்த பொருள்களின் எண்ணுக்குத்தக்கதாகக்கூட்டிப்பெயர்கூறுக.

---

## TWO FORMS OF THE COMPLETION OF THE PREDICATE.

## துணைநிலைப்பகுப்பு.

---

23. இனி, துணைநிலையாய்வந்த செயப்படுபொருள் முதலிய உறுப்புக்களும் எழுவாய் பயனிலைபோலத்தனிநிலையாகவும் விரிநிலையாகவும் வரும்.

---

### 1. THE SIMPLE COMPLETION OF THE PREDICATE.

### தனிநிலைத்துணைநிலை.

---

24. தம்மை விசேஷிக்கும் அடைமொழிகளின்றிவருந் துணைநிலைகளே தனிநிலைத்துணைநிலைகளாம்.

உ-ம். சாத்தன்......வீட்டைக்......கட்டினான்.
வேடன்......அம்பால்.........எய்தான்.

எனவே, தனிநிலை விரிநிலையென்பதை ஒவ்வொரு துணைப்பொருளோடுமொட்டி, தனிநிலைச்செயப்படுபொருள், விரிநிலைச்செயப்படுபொருள்; தனிநிலைக்கருவிப்பொருள், விரிநிலைக்கருவிப்பொருள்; தனிநிலைக்கோடற்பொருள், விரிநிலைக்கோடற்பொருள்; தனிநிலைநீக்கற்பொருள், விரிநிலைநீக்கற்பொருள்; தனிநிலைஉரிமைப்பொருள், விரிநிலைஉரிமைப்பொருள்; தனிநிலைஇடப்பொருள், விரிநிலைஇடப்பொருள்; தனிநிலைவிளிப்பொருள், விரிநிலைவிளிப்பொருள்; எனவும்வரும்.

---

## 2. THE ENLARGED COMPLETION OF THE PREDICATE.

## விரிநிலைத் துணைநிலை.

25. துணைநிலை ஒவ்வொன்றையும் விசேஷிக்க அடைமொழிகள் தொடர்ந்துவருமெனில் விரிநிலைத் துணைநிலையாம்.

உ-ம். சாத்தன் ஒரு பெரியகுதிரையை வளர்த்தான்.
அவள் தன் பிள்ளையைக்காப்பாற்றுகிறாள்.

மற்றுந் துணைநிலைப்பொருட்களுக்கும் இப்படியே அடைமொழிகூட்டி விரித்துக்கண்டுகொள்க.

## ADJUNCTS.

## அடைமொழி.

26. வாக்கியத்திலுள்ள அங்கங்கள் ஒவ்வொன்றும் விரிதற்குக் கருவியாய் அவைகளையடுத்து விசேஷித்துநிற்குமொழிகளே அடைமொழிகளென்னப்படும்.

உ-ம்.

| | |
|---|---|
| அன்புள்ள பிள்ளைகள் தங்கள்பெற்றாரை அதிகமாய்க்கனப்படுத்துகிறார்கள். | (இதில் எழுவாயும் பயனிலையும் துணைநிலையாகிய செயப்படுபொருளும் அடைமொழிகள்பெற்று வந்தன.) |
| ஈன்றபசு தன் கன்றுக்கு மதுரமான பாலை இரங்கிக்கொடுக்கிறது. | (இதில் எழுவாய் பயனிலை செயப்படுபொருளோடு கோடற்பொருளும் அடைமொழிபெற்றது.) |

இங்கே உதாரணத்திற்காட்டிய வாக்கியங்களிலுள்ள அங்கங்கள் ஒவ்வொன்றிலும் அடைமொழிகள் வந்தன. இப்படியே மற்றுந்துணைநிலைப் பொருட்களாயுள்ள அங்கங்களோடும் அடைமொழியொட்டிக்காண்க. அன்றியும், வாக்கியாங்கங்கள் பெயர்ச்சொல்லுகளாயிருக்கும்போது பெயரைக் கொள்ளும் வேற்றுமைகளும் பெயரெச்சங்களும் அவற்றிற்கடைமொழிகளாக வருமெனவும்; வினைச்சொல்லுகளாயிருக்கும்போது வினையைக்கொள்ளும் வேற்றுமைகளும் வினையெச்சங்களும் அவற்றிற்கடைமொழிகளாக வருமெனவுங்கொள்க.

## SIX KINDS OF ADJUNCTS.
## அடைமொழி வகை.

27. அடைமொழிகள் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுவகையினும் வரும்.

### 1. NOUN. (ADJECTIVAL.)
### பொருளடை.

28. பொருளைக்குறிக்குஞ்சொல் வாக்கியாங்கங்களையடுத்து விசேஷித்து நிற்குமெனில் பொருளடையாம்.

உ-ம். நெய்க்குடம் உடைந்தது. (இதில் எழுவாயைச்சேர்ந்து பொருளடை வந்தது.)

இக்குடம் பொன்னாற்செய்யப்பட்டது. (இதில் பயனிலையைச்சார்ந்து பொருளடைவந்தது.)

### 2. DENOTING PLACE.
### இடவடை.

29. இடத்தைக்குறிக்குஞ்சொல் வாக்கியாங்கங்களையடுத்து விசேஷித்து நிற்குமெனில் இடவடையாம்.

உ-ம். ஊரிலுள்ள ஜனங்கள் இதைச் சொன்னார்கள். (இதில் எழுவாயைச்சார்ந்து இடவடை வந்தது.)

இப்பாதை வடமேற்காய்ச்செல்லுகின்றது.
அம்மனிதன் இங்கே நிற்கிறான். (இவற்றில் பயனிலைகளைச்சார்ந்து இடவடைகள் வந்தன.)

### 3. DENOTING TIME.
### காலவடை.

30. காலத்தைக்குறிக்குஞ்சொல் வாக்கியாங்கங்களையடுத்து விசேஷித்துவருமெனில் காலவடையாம்.

உ-ம். மாசிப்பனி மச்சைத்துளைக்கும். (இதில் எழுவாயைச்சார்ந்து கால அடைவந்தது.)

சாத்தன் அடிக்கடி வருகிறான்.
கொற்றன் மாதந்தோறும் போகிறான்.
அவன் ஒருக்காலும் வாரான். (இவற்றில் பயனிலைகளைச்சார்ந்து கால அடைகள் வந்தன.)

## 4. DENOTING MEMBERS.

## சினையடை.

31. சினையைக்குறிக்குஞ்சொல் வாக்கியாங்கங்களையடுத்து விசேஷித்து நிற்குமெனில் சினையடையாம்.

உ-ம். பூவையுடையசெடிகள் கண்ணுக்கு அழகானவை. (இதில் எழுவாயைச்சார்ந்து சினையடை வந்தது.)

அசைப்போடுகிற மிருகங்கள் கொம்புள்ள ஜெந்துக்களாம். (இதில் பயனிலையைச்சார்ந்து சினையடை வந்தது.)

## 5. DENOTING QUALITY.

## குணவடை.

32. குணத்தைக்குறிக்குஞ்சொல் வாக்கியாங்கங்களையடுத்து விசேஷித்து நிற்குமெனில் குணவடையாம்.

உ-ம். நல்லமனிதர் தருமஞ்செய்கிறார்கள். (இதில் எழுவாயைச்சார்ந்து குணவடைவந்தது.)

அப்பக்ஷிகள் விரைவாய்ப்பறக்கின்றன.
இப்பயிர் பசேரென்றிருக்கிறது.
மின் பளபளவென்று மின்னிற்று. (இவற்றில் பயனிலைகளைச்சார்ந்து குணவடைகள் வந்தன.)

## 6. DENOTING ACTION.

## தொழிலடை.

33. தொழிலைக்குறிக்குஞ்சொல் வாக்கியாங்கங்களையடுத்து விசேஷித்துவருவது தொழிலடையாம்.

உ-ம். கற்ற மனிதர் கனமடைகிறார்கள். { (இதில் எழுவாயைச்சார்ந்து தொழிலடைவந்தது.)

ஓற்றர்கள் ஓட்டமாய் ஓடினார்கள். { (இதில் பயனிலையைச்சார்ந்து தொழிலடை வந்தது.)

இவ்வடைமொழிகள் எழுவாய் பயனிலைகளைச்சார்ந்து வந்தவாறே செயப்படுபொருள் முதலிய துணைநிலையங்களையுஞ்சார்ந்துவரும். அவற்றிற்கு வேண்டும் உதாரணங்களை அமைத்துக்கண்டுகொள்க.

அன்றியும் இவ்வடைமொழிகள் இனமுள்ளனவும், இனமில்லனவுமாக வரும். அவற்றைப் பொதுவியலிற் காண்க.

## TWO FORMS OF ADJUNCTS.
## அடைமொழியின் பகுப்பு.

34. **இனி வாக்கியாங்கங்கள் விரிதற்குக்கருவியாய்நின்ற அடைமொழிகளும் தனிநிலை விரிநிலையென இரண்டு வகைப்படும்.**

### 1. SIMPLE ADJUNCT.
### தனிநிலையடை.

35. **தனிமொழியில்நிற்கும் அடைமொழியே தனிநிலை அடையென்னப்படும்.**

உ-ம். அறிவுள்ளமனிதர் யாவர் மேலும் அன்பாயிருக்கிறார்கள். { (இதில் எழுவாயிலும்பயனிலையிலுந்தனியடைகள் வந்தன.)

### 2. ENLARGED ADJUNCT.
### விரிநிலையடை.

36. **தனியடையை விசேஷிக்க வேறு அடைமொழிவருமெனில் அது விரிநிலையடையாம்.**

உ-ம்.

உயர்ந்த அறிவுள்ளமனிதர் யாவர் மேலும் மிகுந்த அன்பாயிருக்கிறார்கள். { (இதில் எழுவாய் பயனிலை இரண்டிலும் விரியடைகள் வந்தன.)

இவை அடைக்கடை என்னவும்படும்.

## EACH OF THE PRECEDING PARTS MAY BE A SENTENCE.

## வாக்கிய நிலையங்கம்.

37. இதுவரை கூறியவிதமாய் வாக்கியத்தின் எழுவாய் முதலியன தனிநிலையங்கம் விரிநிலையங்கமாய் வருவதுபோல வாக்கியங்களும் அங்கமாகவந்து வாக்கியநிலையெழுவாய், வாக்கியநிலைப்பயனிலை, வாக்கியநிலைச்செயப்படுபொருள், வாக்கியநிலைக்கருவிப்பொருள், வாக்கியநிலைக்கோடற்பொருள், வாக்கியநிலைநீக்கற்பொருள், வாக்கியநிலையுரிமைப்பொருள், வாக்கியநிலை இடப்பொருள், வாக்கியநிலைவிளிப்பொருள், வாக்கியநிலை அடைமொழி எனவரும்.

வாக்கியம் அங்கமாகநிற்பது எப்படியெனில், தனிநிலை விரிநிலை அங்கங்கள் ஒரு வாக்கியத்திற்கு அங்கமாய்வருவதுபோல எழுவாய் பயனிலை கொண்ட முற்றுவாக்கியமே அங்கமாகவருவதாம்.

## EACH OF THE THREE PRECEDING FORMS MAY BE MULTIPLIED.

## அடுக்கு நிலையங்கம்.

38. அன்றியும், தனியாகவும் விரியாகவும் வாக்கியமாகவும் வரும் எழுவாய்முதலிய அங்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி இரண்டுமுதலாக அடுக்கி அடுக்குநிலை எழுவாய், அடுக்குநிலைப்பயனிலை, அடுக்குநிலைச்செயப்படுபொருள், அடுக்குநிலைக்கருவிப்பொருள், அடுக்குநிலைக்கோடற்பொருள், அடுக்குநிலைநீக்கற்பொருள், அடுக்குநிலையுரிமைப்பொருள், அடுக்குநிலை இடப்பொருள், அடுக்குநிலைவிளிப்பொருள், அடுக்குநிலை அடைமொழி எனவரும்.

இப்படியாகவே வாக்கியங்களுக்குள் அங்கங்கள் தனிநிலை விரிநிலையாக வந்ததுமன்றி, வாக்கியநிலையாகவும் அடுக்குநிலையாகவும் வந்தமையால், ஒவ்வொரு வாக்கியாங்கமும் தனிநிலை, விரிநிலை, வாக்கியநிலை, அடுக்குநிலையென நன்னாலு வகையாக வருமெனவும்; வருமிடத்து எழுவாய்—தனிநிலையெழுவாய், விரிநிலையெழுவாய், வாக்கியநிலையெழுவாய், அடுக்குநிலையெழுவாயெனவும்; பயனிலை—தனிநிலைப்பயனிலை, விரிநிலைப்பயனிலை வாக்கிய

நிலைப்பயனிலை, அடுக்குநிலைப்பயனிலையெனவும்; செயப்படுபொருள்—தனிநிலைச்செயப்படுபொருள், விரிநிலைச்செயப்படுபொருள், வாக்கியநிலைச்செயப்படுபொருள், அடுக்குநிலைச்செயப்படுபொருளெனவும்; அடைமொழி--தனிநிலையடை, விரிநிலையடை, வாக்கியநிலையடை, அடுக்குநிலையடை, எனவும் வரும். செயப்படுபொருள் தவிர்ந்த மற்றும் துணைநிலைப்பொருள்களும் இப்படியே நன்னான்கு வகையாய் வருமெனக்கொள்க.

---

## FIVE KINDS OF EACH OF THESE COMBINATIONS.

## அடுக்குநிலை ஐவகையாமென்பது.

---

39. மேலும் வாக்கியாங்கங்கள் அடுக்கிவருமிடத்து தனிநிலையங்கம் அடுக்குமானால், தனிநிலையங்கவடுக்கென்றும்; விரிநிலையங்கமடுக்குமானால், விரிநிலையங்கவடுக்கென்றும்; வாக்கியநிலை அங்கமடுக்குமானால், வாக்கியநிலையங்கவடுக்கென்றும்; அடுக்குநிலையங்கமடுக்குமானால், அடுக்குநிலையங்கவடுக்கென்றும்; அவைகள் கலந்தடுக்குமானால், கலப்பங்கவடுக்கெனவுங் கூறப்படும்.

தனிநிலை விரிநிலையங்கங்கள் தவிர வாக்கியநிலைகளும் அடுக்குநிலைகளும் அங்கங்களாகுமிடத்து தொடர்வாக்கியங்களுக்குட்பட்டு பிரதான வாக்கியம் அப்பிரதான வாக்கியங்களென்றும், சிரேஷ்ட வாக்கியம் உபசிரேஷ்ட வாக்கியங்களென்றும், பெயர்களைப்பெற்று நிற்குமாகையால் தொடர்வாக்கியவியலுள் அவைகளை விவரிக்குமிடத்து இவைகளுக்கு உதாரணங்களாகக் கண்டுகொள்க.

உறுப்பியல் முற்றிற்று.

# PART II. SENTENCES.
# வாக்கியவியல்.

## TWO KINDS OF SENTENCES.
## வாக்கிய வகை.

40. வாக்கியங்கள் தனிவாக்கியமென்றுந்தொடர்வாக்கியமென்றும் இரண்டு வகைப்படும்.

## I. THE SIMPLE SENTENCE.
## தனிவாக்கியம்.

41. அவற்றுள் தனிவாக்கியமாவது ஒரே எழுவாயையும் ஒரே பயனிலையையுமுடைத்தாய் பிறிதொரு வாக்கியத்தையவாவாது தன்னிலேயே பொருள் முடிந்து நிற்பது.

உ—ம். எழுவாய்...... || ...... பயனிலை.

சாத்தன்...... || ...... வந்தான்.
கொற்றன். ... || ...... போகான்.

## FORMS OF THE SIMPLE SENTENCE.
## தனிவாக்கியம் முடியும் விதம்.

42. இத்தனிவாக்கியம் தந்தொழிலினுந்தம்பினுகியதொழிலினும் வினைநிலையுரைத்தல், ஏவல்காட்டல், வியங்கோள் இசைத்தல், வினுவிநிற்றல், பெயர்ப்பயனுதல், என்னும் ஐவகையில் உடம்பாடல்லது எதிர்மறையாக முடிவுபெற்று நடக்கும்.

இவற்றுள், தந்தொழிலையுந்தம்பினுகியதொழிலையும்பற்றி பொதுவியல் [84] விதியிலும், வினைநிலையுரைத்தல் முதலியவாய் வருவனவற்றை உறுப்பியல் [6] விதியிலும் உரைத்திருக்கின்றமை காண்க.

## TWO KINDS OF SIMPLE SENTENCES.
## தனிவாக்கிய வகை.

43. அத்தனிவாக்கியம், தனிநிலையங்கத்தனிவாக்கியமென்றும், விரிநிலையங்கத்தனிவாக்கியமென்றும் இருவகைப்படும்.

### 1. THE UNENLARGED SIMPLE SENTENCE.
### தனி நிலையங்கத்தனிவாக்கியம்.

44. தனிநிலையெழுவாய் தனிநிலைத்துணைப்பொருளோடு பொருந்தியாவது பொருந்தாமலாவது தனிநிலைப்பயனிலையைக் கொண்டுமுடிவது தனிநிலையங்கத்தனிவாக்கியமாம்.

| | |
|---|---|
| உ—ம். சூரியன் உதித்தது. | (துணைப்பொருளில்லாத்தனிநிலைப் பயனிலையோடுமுடிந்தது.) |
| சூரன் வீரனைக்கொன்றான். | (துணைப்பொருளுடைத்தனிநிலைப்பயனிலையோடு முடிந்தது.) |
| விசயன் சிவனை வில்லாலடித்தான். | (துணைப்பொருளிரண்டுடைத்தனி நிலைப்பயனிலையோடு முடிந்தது.) |

மற்றுந்தனிநிலைத்துணைப்பொருட்களையும் இவ்வாறே வருவித்துக்காண்க. சூரியன் உதித்தது என்பதில் கடவுள் நியமத்தால் என்னும் கருவிப்பொருளும், வானவெளியில் என்னும் இடப்பொருளும், உதித்தலைச்செய்தது எனவைத்து உதித்தலையென்னும் செயப்படுபொருளும், அகநிலைகளாக வந்தனவேயெனில், இவைபோல்வன வலிந்துகூறப்படும் துணைநிலைப்பொருட்களேயன்றி வாக்கிய முடிவுக்கு இன்றியமையாதனவல்ல.

### 2. THE ENLARGED SIMPLE SENTENCE.
### விரி நிலையங்

| | |
|---|---|
| உ—ம். அம்மனிதன் விரைவாய் நடக்கிறான். | (துணைப்பொருளில்லா விரிநிலைப்பயனிலையோடு முடிந்தது.) |
| இச்சிறிய மனிதன் அப்பெரிய கல்லை மிகவும் எளிதில் உருட்டுவான். | (துணைப்பொருளுடை விரிநிலைப்பயனிலையோடு முடிந்தது.) |
| அத்தச்சன் இப்பெரிய பலகையை சிறியவாச்சியால் மெதுப்படச்செதுக்கினான். | (துணைப்பொருளிரண்டுடை விரிநிலைப்பயனிலையோடு முடிந்தது.) |

இப்படியே மற்றுந்துணைப்பொருட்களையும் விரித்துக்கண்டுகொள்க. இவ்வகையாய் வரும் வாக்கியங்களிலுள்ள அங்கங்களில், ஓரங்கம் விரிய மற்றையங்கங்கள் தனியாய் வந்தாலும், விரிநிலையங்கத்தனிவாக்கியங்களாகவேகொள்ளப்படும்.

## II. COMBINED SENTENCES.
## தொடர்வாக்கியம்.

46. ஓரெழுவாயும் பயனிலையுமாகமுடிந்த வாக்கியத்தையடுத்து மற்றொரு எழுவாயும் பயனிலையுமாகமுடிந்த வாக்கியம் ஒன்றுவது பலவாவது வருமெனில், அது தொடர்வாக்கியமாம்.

உ-ம். நல்லமழைபெய்தது, அதனால் நாடுசெழித்தது. இவற்றுள் நாடுசெழித்தது, என்னும் வாக்கியத்தை நல்லமழைபெய்தது என்னும் வாக்கியந்தொடர்ந்துநின்றமையறிக.

## OF TWO KINDS.
## தொடர்வாக்கிய வகை.

-வாக்கியம் ஒன்றித்தொடர்வாக்கிய-
-ர் இரண்டுவகை-

## 1. THE COMPLEX SENTENCE.

## ஒன்றித்தொடர் வாக்கியம்.

48. முடிந்தவாக்கியத்தை யடுத்துத்தொடர்ந்துவரும் வாக்கியம் ஒன்றிநிற்கத்தொடர்வது ஒன்றித்தொடர்வாக்கியமாம். இவற்றுள் முடிந்தவாக்கியம் பிரதானவாக்கியமென்றும், தொடர்ந்துவரும் வாக்கியம் அப்பிரதானவாக்கியமென்றும் கூறப்படும்.

உ-ம். அவர் வருவாரானல் நான் பேசுவேன்.

இதனுள் நான் பேசுவேன் என்பது பிரதானமும், அவர் வருவாரானல் என்பது அப்பிரதானமுமாய் நின்றமை காண்க.

ஒன்றிநிற்கத்தொடர்வதாவது:—அப்பிரதான வாக்கியத்தின் பயனிலையானது வினைமுற்ருயின் வினையாலணையும் பெயராகத்திரிந்து வேற்றுமை ஏற்றும், வினையெச்சம் பெயரெச்சங்களாகத்திரிந்தும், முற்றின் இறுதியில் வினையெச்சவிடைச்சொற்களைப்பெற்றும், முற்றின்மேலும் பெயரெச்சத்திரிபின்மேலும் பெயரிடைச்சொற்களைப்பெற்றும்; பயனிலையானது பெயராயின், வேற்றுமைச்சொல்லுருபோடுகூடி வேற்றுமைபெற்றும், பெயரிறுதியில் வினையெச்சவிடைச்சொல் பெயரெச்சவிடைச்சொற்களைப்பெற்றும், பெயரெச்சவிடைச்சொல்மேல் பெயரிடைச்சொற்களைப்பெற்றும் வருவது. உதாரணமாக, அவர் வருவாரானல் நான் பேசுவேன், என்னுந்தொடரில் அவர் வருவார் என்பதின் அப்பிரதான வாக்கியமுற்றுப்பயனிலை, அவர் வருவதை, அவர் வருவதினல் எனவரில் வினையாலணையும் பெயராகத்திரிந்து வேற்றுமையேற்றதெனவும், அவர் வந்து, அவர் வர, அவர் வந்தால், எனவரில் வினையெச்சமாகத்திரிந்ததெனவும், அவர் வந்த, அவர் வருகிற, அவர் வரும் எனவரில் பெயரெச்சமாகத்திரிந்ததெனவும், அவர் வருவாரென்று, அவர் வருவாரென, அவர் வருவாரென்றல், அவர் வருவார்போல எனவரில் முற்றின் இறுதியில் வினையெச்சவிடைச்சொற்களைப் பெற்றதெனவும், அவர் வருவார் என்ற, அவர் வருவாரென்கிற, அவர் வருவாரென்னும், எனவரில் முற்றின் இறுதியில் பெயரெச்சவிடைச்சொற்களைப்பெற்றதெனவும், அவர் வந்தாரென்பதை, அவர் வந்தாரென்பதால் எனவரில் முற்றின்மேல் பெயரிடைச்சொற்களைப்பெற்றதெனவும், அவர் வந்தபிறகு, அவர் வருகிறபோது, அவர் வருங்கால், எனவரில் பெயரெச்சத்திரிபின்மேல் பெயரிடைச்சொற்களைப் பெற்றுவந்ததெனவும்; அவர் மந்திரியானல் நல்லது என்னுந்தொடரில் மந்திரியென்னும் அப்பிரதானப் பெயர்ப்பயனிலை,

அவர் மந்திரி என்பதை, அவர் மந்திரி என்பதால்; எனவரில் வேற்றுமைச் சொல்லுருபோடுகூடி வேற்றுமைபெற்றதெனவும்; அவர் மந்திரியென்று, அவர் மந்திரியென்பதாய், அவர் மந்திரி என்ன, அவர் மந்திரியென்றால், அவர் மந்திரியென்பதுபோல, எனவரில் பெயரிறுதியில் வினையெச்ச இடைச்சொற்களைப்பெற்றதெனவும்; அவர் மந்திரி என்ற, அவர் மந்திரியென்பதான, அவர் மந்திரியென்கிற, அவர் மந்திரி என்னும், எனவரில் பெயரெச்ச இடைச்சொற்களைப்பெற்றதெனவும், அவர் மந்திரி என்றபின்பு, அவர் மந்திரி என்கிறபொழுது, அவர் மந்திரி என்னுங்கால், எனவரில் பெயரெச்சவிடைச்சொல்மேல் பெயரிடைச்சொற்களைப் பெற்றுவந்ததெனவுங்கொள்க. மேலும் இத்திரிபுகள்யாவும் இறுதிநோக்கி வேற்றுமைத்திரிபு, எச்சத்திரிபென, இருவகையுளடங்குமென்க. இன்னும் இவற்றைப்பற்றி அநுபந்தத்தில் தொடர்வாக்கியவிலக்கணங்கூறுமிடத்துக்காண்க. பெயரிடைச்சொல் வினையிடைச்சொல் என்பவைகளைப்பற்றிச் சொல்லிலக்கணச்சுருக்கத்தில் கண்டுகொள்க.

---

## TWO KINDS OF COMPLEX SENTENCES.

## ஒன்றித்தொடரின் பிரிவு.

---

49. ஒன்றித்தொடரானது வாக்கியநிலை வேற்றுமைப்பொருண் முடிபுத்தொடரொன்றும், வாக்கியநிலை அடைமொழிப்பொருண் முடிபுத்தொடரொன்றும், இருவகைப்படும்.

---

## I. PRINCIPAL SENTENCE FOLLOWED BY EACH WORD IN SEC. 37 EXPANDED INTO A SENTENCE.

## வாக்கியநிலை வேற்றுமைப்பொருள் முடிபுத்தொடர்.

---

50. பிரதானவாக்கியத்தின் பயனிலையைச்சார்ந்து அப்பிரதானவாக்கியம் வேற்றுமையிறுதிகளையுடைத்தாய் வினைமுதற்பொருண்முடியிலும், துணைநிலைப்பொருண்முடியிலும், வருவது வாக்கியநிலை வேற்றுமைப்பொருண் முடிபுத்தொடராம்.

---

## (1.) A SENTENCE AS SUBJECT.

## வாக்கியநிலைவினைமுதற்பொருள் முடிபுத்தொடர்.

---

51. *பிரதானவாக்கியத்தின் பயனிலையைச்சார்ந்து அப்பிரதானவாக்கியம் முதலாம்வேற்றுமை முடிவில்வருமெனில், வாக்கியநிலை வினைமுதற்பொருண் முடிபுத்தொடராம்.*

இவ்வகைதை வாக்கிய எழுவாய்த்தொடரெனவும் கூறலாகும்.

உ-ம்.

| அப்பிரதானம். | | பிரதானம். | |
|---|---|---|---|
| எழுவாய் | பயனிலை | எழுவாய் | பயனிலை |
| இராஜா | பேசினதாவது | மந்திரி | யோசித்தது. |

இங்கே பயனிலையைச்சார்ந்துவருதல் எப்படியெனில், யோசித்தது என்னும் பிரதானவாக்கியப்பயனிலைக்கு இராஜா பேசினதாவதென்னும் அப்பிரதானவாக்கியமே எழுவாயாக நிற்றல். இராஜா பேசினது எனச் சொல்லுருபின்றியும் வரும். கடவுள் உண்டென்பது யாவரும் ஒப்பக்கூடியது; உடம்பு சுத்தமாவது அழுக்கு நீங்குவது; தந்தைசொன்னதாவது மைந்தன் வந்தான் என்பதாம்; என்னுந்தொடர்களும் இவ்வகைத்தொடர்களே. இனி மந்திரி யோசித்தது என்னும் பிரதானவாக்கியத்தை, அப்பிரதானமாகிய எழுவாய் வாக்கியத்திற்குப் பயனிலையாகக்கொண்டு வாக்கியம் பயனிலையாகி வருவதற்கும் உதாரணமாகக்கொள்க.

அவன் சொன்னது நன்று என்பதில், அவன் சொன்னது என்னும் எழுவாயும், அது யான் பேசியது என்பதில், யான் பேசியது என்னும் பயனிலையும், வாக்கியங்களேயாயினும், நன்று என்னும் பயனிலையும், அது என்னும் எழுவாயும் அத்தொடரில் வாக்கியங்களாகாமையால் தனிவாக்கியங்களின் பாற்படுமேயன்றித் தொடர்வாக்கியமாகா; எனெனில் தொடர்வாக்கியம் ஒவ்வொன்றினிடத்திலும் தனித்தனி எழுவாய் பயனிலைவேண்டும். ஆயின், சொன்னது என்பதை சொன்ன அது எனத்தொழிலும் பெயருமாகப்பிரித்து, அவன் சொன்ன அது நன்று எனக்கொள்வதினால் தொடர்வாக்கியமாகக் கொள்ளலாமெனில், அ-என்பது சாரியையும், து-என்பது விகுதியுமாகி, சொன்னது என்பது வினையாலணையும் பெயர்த்திரிபானபயனிலையாகவந்தமையால், தொடர்வாக்கியமாகாதென்க. அது நன்றன்று; தாளை வணங்காத்தலை குணமில; அக்கிணறு நீரூறிற்று; இக்கதிர்தலை சாய்ந்தது; எனவருமிடத்து, நன்றன்று, குணமில, நீரூறிற்று, தலைசாய்ந்தது என்னும்

பயனிலைகள் எழுவாய்த்தொடராயினும், வாக்கியமாகக் கொள்ளற்குரிய பொருட்சிறப்பின்மையின் மற்றும் வேற்றுமைத்தொடர்மொழிப்பயனிலை, எச்சத்தொடர்மொழிப்பயனிலையைப்போல, எழுவாய்த் தொடர்மொழிப்பயனிலையாகவே கொள்ளப்படும். தொடர்மொழிப்பயனிலைகளைப்பற்றி தொடர்மொழியிலக்கணங்கூறுமிடத்துக்காண்க.

---

## (2.) SENTENCES DENOTING OBJECT, INSTRUMENT, RECEIVER, MOTION FROM A PLACE, POSSESSOR, PLACE, AND PERSON OR THING ADDRESSED.

## வாக்கியநிலைத்துணைப்பொருள் முடிபுத்தொடர்.

---

52. பிரதானவாக்கியத்தின் பயனிலைகளைச்சார்ந்து அப்பிரதானவாக்கியங்கள் இரண்டாம் வேற்றுமைமுதல் எட்டாம் வேற்றுமைவரையுள்ள பொருள் முடிபுகளில்வருமெனில் வாக்கியநிலைத் துணைப்பொருண் முடிபுத்தொடராம்.

உ-ம்.

| | அப்பிரதானம். | | பிரதானம். | |
|---|---|---|---|---|
| | எழுவாய் | பயனிலை | எழுவாய் | பயனிலை |
| (1) | மாணிக்கம் | ஓடுவதை | வரதன் | பார்த்தான். |
| | (இது வாக்கியநிலைச்செயப்படுபொருண் முடிபுத்தொடர்.) | | | |
| (2) | காற்று | உரக்கவீசியதால் | மரங்கள் | சாய்ந்தன. |
| | (இது வாக்கியநிலைக்கருவிபொருண் முடிபுத்தொடர்.) | | | |
| (3) | மாணாக்கன் | பேசுவதற்கு | உபாத்தியார் | உத்தரவு கொடுத்தார். |
| | (இது வாக்கியநிலைக்கோடற்பொருண் முடிபுத்தொடர்.) | | | |
| (4) | குற்றவாளி | பேசியதிலிருந்து | தப்பிதம் | கண்டுபிடிக்கப்பட்டது. |
| | (இது வாக்கியநிலை நீக்கற்பொருண் முடிபுத்தொடர்.) | | | |
| (5) | மந்திரி | பேசியதின் | கருத்து | இது. |
| | (இது வாக்கியநிலை உரிமைப்பொருண் முடிபுத்தொடர்.) | | | |
| (6) | நான் | போகிறதற்குள் | அவன் | போய்விட்டான். |
| | (இது வாக்கியநிலை இடப்பொருண் முடிபுத்தொடர்.) | | | |
| (7) | பக்தர் | போற்றற்குரியாரே! | நீர் | கேட்டருளும். |
| | (இது வாக்கியநிலை விளிப்பொருண் முடிபுத்தொடர்.) | | | |

## SENTENCES DENOTING RELATIONSHIP CONNECTED WITH THOSE MENTIONED ABOVE.

## வாக்கியநிலைச்சார்புத்துணைப்பொருள் முடிபுத்தொடர்.

---

53. பிரதானவாக்கியத்தின் பயனிலையைச்சார்ந்து அப்பிரதானவாக்கியங்கள் மூன்றாம்வேற்றுமைச்சார்புப்பொருளாகிய உடனிகழ்ச்சிப்பொருண் முடிபிலும்; நான்காம்வேற்றுமைச் சார்புப்பொருளாகிய பகைப்பொருள், நட்புப்பொருள், தகுதிப்பொருள் முதற்காரண காரியப்பொருள், முறைக்கிளைபொருண் முடிபிலும்; ஐந்தாம்வேற்றுமைச் சார்புப்பொருளாகிய ஒப்புப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப்பொருண் முடிபிலும் வருமெனில்; வாக்கியநிலைச்சார்புப்பொருண் முடிபுத்தொடராம்.

| | அப்பிரதானம். | | பிரதானம். | |
|---|---|---|---|---|
| | எழுவாய் | பயனிலை | எழுவாய் | பயனிலை |
| (1) | சேனைகள் | மடிந்ததோடு | யுத்தம் | முடிந்தது. |

(இது வாக்கியநிலை உடனிகழ்ச்சிப்பொருண் முடிபுத்தொடர்.)

| | | | | |
|---|---|---|---|---|
| (2) A. | தம்பி | சொன்னதற்கு | தமையன் | விரோதம் பேசினான். |

(இது வாக்கியநிலைப் பகைப்பொருண் முடிபுத்தொடர்.)

| | | | | |
|---|---|---|---|---|
| B. | ராமன் | பேசியதற்கு | வரதன் | இணங்கினான். |

(இது வாக்கியநிலை நட்புப்பொருண் முடிபுத்தொடர்.)

| | | | | |
|---|---|---|---|---|
| C. | அரசர் | சிரசிலணிவதற்கு | கிரீடமே | தக்கது. |

(இது வாக்கியநிலைத்தகுதிப்பொருண் முடிபுத்தொடர்.)

| | | | | |
|---|---|---|---|---|
| D. | வஸ்திரம் | நெய்யும்படிக்கு | நூல் | வேண்டியது. |

(இது வாக்கியநிலை முதற்காரண காரியப்பொருண் முடிபுத்தொடர்.)

| | | | | |
|---|---|---|---|---|
| E. | சாத்தன் | கொண்டவளுக்கு | தங்கை | இவள். |

(இது வாக்கியநிலை முறைக்கிளைபொருண் முடிபுத்தொடர்.)

| | | | | |
|---|---|---|---|---|
| (3) A. | பால் | வெள்ளிது | கொக்கு | வெள்ளிது. |

(இது வாக்கியநிலை ஒப்புப்பொருண் முடிபுத்தொடர்.)

| | | | | |
|---|---|---|---|---|
| B. | சோமன் | சொன்னதுவரை | சுந்தரம் | ஒப்புக்கொண்டான். |

(இது வாக்கியநிலை எல்லைப்பொருண் முடிபுத்தொடர்.)

| | | | |
|---|---|---|---|
| C. ராமன் | கற்றதில் | (ராமன்) | மேன்மை (யடைந்தான். |

(இது வாக்கியநிலை எதுப்பொருண் முடிபுத்தொடர்.)

---

## II. PRINCIPAL SENTENCE FOLLOWED BY ADJUNCTS EXPANDED INTO SENTENCES.

## வாக்கியநிலை அடைமொழிப்பொருள் முடிபுத்தொடர்.

54. பிரதானவாக்கியத்தின் ஒவ்வோரங்கத்தையுஞ்சார்ந்து பெயரெச்சமுடிபிலும் வினையெச்சமுடிபிலும் வருவது வாக்கியநிலை அடைமொழிப்பொருண் முடிபுத்தொடராம்.

---

### 1. ADJECTIVAL PARTICIPLES EXPANDED INTO SUBORDINATE SENTENCES.

### வாக்கியநிலைப்பெயரெச்ச அடைமொழி முடிபுத்தொடர்.

55. பிரதானவாக்கியத்தின் எழுவாய் செயப்படுபொருண்முதலிய வேற்றுமையங்கங்களைச்சார்ந்து அப்பிரதானவாக்கியம் பெயரெச்சமுடிபில் வருமெனில் வாக்கியநிலைப்பெயரெச்ச அடைமொழி முடிபுத்தொடராம்.

(1)

| | அப்பிரதானம். | | பிரதானம். | |
|---|---|---|---|---|
| | எழுவாய் | பயனிலை | எழுவாய் | பயனிலை |
| இறந்த காலம். | இராஜன் | கட்டின | கோபுரம் | முடிந்தது. |
| | இவன் | செய்ததாகிய | குற்றம் | யாது ? |
| | ஒருவன் | கற்றதனாலாகிய | பயன் | என்ன ? |
| நிகழ். | மந்திரி | சொல்லுகிற | புத்தி | நல்லது. |
| எதிர். | நீர் | பேசும் | வார்த்தை | உண்மையல்ல. |

(இது பிரதானத்தின் எழுவாயைச்சார்ந்துவந்த வாக்கியநிலைப் பெயரெச்ச அடைமொழி முடிபுத்தொடர்.)

(2)

| | எழுவாய் | பயனிலை | செய. | எழுவாய் | பயனிலை |
|---|---|---|---|---|---|
| இற: | குரு | சொன்ன | புத்தியை | சீஷன் | தட்டிவிட்டான். |
| | அவன் | சொன்னதாகிய | வார்த்தையை | நீர் | நம்பவேண்டாம். |
| நிகழ்: | நீர் | சொல்லுகிற | சமாசாரம் | நான் | அறியேன். |
| எதிர்: | தம்பி | செய்யும் | தப்பிதம்யாவும் | தமையன் | மன்னிக்கிறான். |

(இது பிரதானவாக்கியத்தின் செயப்படுபொருளைச்சார்ந்துவந்த வாக்கியநிலைப்பெயரெச்ச அடைமொழிப்பொருண் முடிபுத்தொடர்.) இப்படியே மற்றத்துணை நிலையோடு வருவனவுங்கொள்க.

---

## 2. ADVERBIAL PARTICIPLES EXPANDED INTO SUBORDINATE SENTENCES.

## வாக்கிய நிலை வினையெச்ச அடைமொழி முடிபுத்தொடர்.

56. பிரதானவாக்கியத்தின் வினையங்கங்களைச்சார்ந்து அப்பிரதானவாக்கியம் வினையெச்சமுடிவில் வருமெனில், வாக்கியநிலை வினையெச்ச அடைமொழி முடிபுத்தொடராம்.

| | அப்பிரதானம். | | பிரதானம். | |
|---|---|---|---|---|
| | எழுவாய் | பயனிலை | எழுவாய் | பயனிலை |
| இற: | மேகம் | தோன்றி | (மேகம்) | வெயிலைமறைத்தது. |
| | யுத்தம் | நடந்ததாய் | செய்தி | வந்தது. |
| நிகழ்: | ஒளி | வர | இருள் | நீங்கிற்று. |
| எதிர்: | மழை | பெய்யின் | நாடு | செழிக்கும். |

வினையங்கங்களென்று பொதுப்படச்சொன்னமையால் முற்று எச்சங்களாகிய வினையங்கங்களைத்தவிர வினையாலணையும் பெயர்களில்வரும் வேற்றுமையங்கங்களையுஞ்சார்ந்துவருமென்க.

இவ்வினையெச்சமுடிபுத்தொடர் தன்கருத்தா முடிபுத்தொடரொன்றும், பிறகருத்தா முடிபுத்தொடரொன்றும், இருவகையாய் வரும். இவற்றுள், தன்கருத்தாமுடிபாவது: அப்பிரதான வாக்கியப்பயனிலைக்குரிய எழுவாயே பிர

தான வாக்கியப்பயனிலைக்கு முரித்தாகநிற்பது; உ-ம். ஊரார்சேர்ந்து(ஊரார்) இக்காரியத்தை முடிப்பித்தார்கள்.

பிறகருத்தாமுடிபுத்தொடராவது: அப்பிரதான வாக்கியப்பயனிலைக்கு ரிய எழுவாய் வேறாய்நிற்க, பிரதான வாக்கியப்பயனிலைக்குரிய எழுவாய் வேறாய்வருவது; உ—ம். சாத்தன் கொடுக்கக்கொற்றன் வாங்கினான் என வரும். செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென; செய; செயின், செய்யிய, செய்யியர், செய்வான், நடப்பான், உண்பாக்கு, என ஐந்தும் ஒன்றும் ஆறும் முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வெனும் முக்காலத்திலும் வரும் வினையெச்சங்களாம். இவற்றுள், செய்து, செய்பு, செய்யா, செய்யூ, என முதல்நின்ற நான்கும்; செய்வான், நடப்பான், உண்பாக்கு என இறுதியில் நின்றமூன்றும்; தன்கருத்தா முடிபிலும், இடைநின்றவைகள் தன்கருத்தா முடிபு பிறகருத்தாமுடிபென இருவகை முடிபிலும் வருமெனவுங் கொள்க.

உ—ம். (1) சாத்தன் உண்டுவந்தான். (2) சாத்தன் உண்ணுபு வந்தான். (3) சாத்தன் உண்ணக்களிப்பான். (4) சாத்தன் உண்ணுமகிழ்வான். (5) சாத்தன் கொல்வானெழுந்தான். (6) சாத்தன் அலைப்பான் சென்றான். (7) சாத்தன் உண்பாக்குச்சென்றான். இவை தன் கருத்தா முடிபுத்தொடர். (1) சாத்தன் உண்டென மகிழ்ந்தான். சாத்தன் உண்டெனக் கொற்றன் மகிழ்ந்தான். (2) சாத்தன் உண்ணவந்தான். சாத்தன் உண்ணக் கொற்றன் வந்தான். (3) சாத்தன் உண்ணின் மகிழ்வான். சாத்தன் உண்ணின் கொற்றன் மகிழ்வான். (4) சாத்தன் உண்ணிய மகிழ்வான் சாத்தன் உண்ணிய கொற்றன் மகிழ்வான். (5) சாத்தன் உண்ணியர் மகிழ்வான். சாத்தன் உண்ணியர் கொற்றன் மகிழ்வான். இவை தன் கருத்தாவும் பிறகருத்தாவுமான முடிபுத்தொடர்.

இனி, காலொடிந்து மாடு வீழ்ந்தது, எனச்செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சமுடிபு பிறகருத்தா முடிபாய் நிற்கின்றனவெனில், காலும், மாடும், சினையுமுதலுமாகையாலும், சொல்லளவில் வேறாய்த்தோன்றினும் பொருளளவில் வேறாகாமையாலும், சினைவினை சினையோடு முடிவதுபோல முதலொடு முடியுமெனவுங்கொள்க.

கோழி கூவிப்பொழுது விடிந்தது, நீர் வந்து நான் போகவேண்டும், எனப்பிறகருத்தா முடிபாய் வருவனவற்றிலெல்லாம், கூவ, கூவுகையில் என்னுஞ்சொற்கள், கூவியென்றும், வந்தபிற்பாடு, வரும்பொழுது என்னுஞ்சொற்கள் வந்து என்றும்திரிந்து நின்றனவேயன்றி செய்து என்னும் வாய்பாட்டெச்சம் பிறகருத்தா முடிபில் வந்த பொருட்டிரிவன்று. சாத்தன் வாங்கினதைச் சாப்பிட்டான், சாத்தன் வாங்கினதை கொற்றன் சாப்

ினையாலணையும்பெயர்மேல் வரும் வேற்றுமைகளும் வினை
ன்கருத்தாமுடிபு பிறகருத்தர்முடிபில் வருவதையுங்காண்க.
ள் சூத்திரம்: (1) செய்து செய்பு செய்யாச்செய்யூ, செய்
தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர், வான்பான்பாக்கின வினையெச்
சம்பிற, ஐந்தொன்றாறு முக்காலமுமுறைதரும். (2) அவற்றுள், முதலில்
நான்கும் ஈற்றில் மூன்றும், வினைமுதல்கொள்ளும் பிறவுமேற்கும்பிற. (3)
சினைவினை சினையொடு முதலொடுஞ்செறியும். (4) சொற்றிரியினும்பொ
ருடிரியாவினைக்குறை.

---

## 3. CERTAIN CASES OF NOUNS MAY ALSO BE EXPANDED INTO SUBORDINATE SENTENCES.

## வாக்கியநிலை அடைமொழி முடிபுத்தொடர்.

---

57. வாக்கியநிலை அடைமொழிப்பொருண்முடிபுத்தொடரு க்குப் பெயரெச்ச வினையெச்சமுடிபுத்தொடர்களைத்தவிர வேற்று மைப்பொருண்முடிபுகளுஞ்சிறுபான்மைவரும்.

உ—ம்.

| அப்பிரதானம். | | பிரதானம். | |
|---|---|---|---|
| எழுவாய் | பயனிலை | எழுவாய் | பயனிலை |
| சோமன் | போனதையிட்டு | சுந்தரம் | துக்கப்பட்டான். |
| சாத்தன் | வருவதற்காக | கொற்றன் | காத்திருந்தான். |

---

## EACH ADJUNCT IN SECS.28—33 MAY BE EXPANDED INTO A SENTENCE.

## வாக்கியநிலை அடைமொழிப்பொருள் முடிபின் விதங்கள்.

---

58. வாக்கியநிலை அடைமொழிப்பொருண் முடிபுத்தொடர் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்பவைகளில் ஏற் றவைபற்றிவரும்.

உ—ம்.

(1) கல்வியானது பெரியசெல்வமென்று சொன்னான். } (பொருளடைமுடிபுத்தொடர்.)

(2) நீர் இருக்குமிடத்தில் நானிருப்பேன். கோபமுள்ளவிடத்தில் குணமுண்டு. } (இடவடை

(3) அவர் வரும் சமயத்தில் நீரிதைப் பேசவேண்டும். நீர் வந்தபின்பு நான் போகவேண்டும். } (காலவடை முடி

(4) சொற்கள்கூடிவாக்கியமாகின்றன. பலமரங்கள் சேர்ந்தால் அதுதோப் பென்னப்படும். } (வினையடை முடிபுத்தொடர்.)

(5) நீர் சொல்லியபிரகாரம் நான் நடந்து கொள்ளுகிறேன். கல்வியானது தொடங்குங்கால் துன்பமாய்ப் பின்பு இன்பம் பயக்கும். } (குணவடை முடிபுத்தொடர்.)

(6) சாத்தன் ஓடிவந்துகாரியத்தை யறிவித்தான். } (தொழிலடை முடிபுத்தொடர்.)

முதலாம் உதாரணத்தில் என்று சொன்னான் என்பது என்றான் எனச் சொல்லெச்சமாகிவரினும் அத்தொடரேயாம்.

---

## CAUSE, EFFECT, &c. DENOTED BY ADVERBIAL SUBORDINATE SENTENCES.

## அப்பிரதானங்களுக்குரிய சில பொருட்கள்.

---

59. சில வினையெச்சமுடிவில் வரும் அப்பிரதானங்கள் காரண காரியமுதலிய பொருணிலைபற்றி வருவதுமுண்டு.

உ—ம்.

(1) இறந்தகால வினையெச்சமுடிபு.

வெள்ளம்வந்து குளத்தைநிரப்பிற்று. { (வெள்ளம்வந்தமையால் என்னும் காரணப்பொருளில் வந்தது.)

அவன்வாய்திறந்து தூங்கினான். { (தூங்கிய காரணத்தால் வாய்திறந்ததென்னும் காரியப்பொருளில் வந்தது.)

(2) நிகழ்கால வினையெச்சமுடிபு.

ஒளி வர இருள் நீங்கிற்று. { (வந்தமையால் என்னும் காரணப்பொருளில் வந்தது.)

தருமங்கொடுக்கப்பணம் வாங்கினான். { (கொடுக்கும் பொருட்டெனப் பொருட்டுப் பொருளில் வந்தது.)

அவன் சொல்லக்காரியம் நடந்தது. { (உடனே என்னும் நிகழ்வுப் பொருளில் வந்தது.)

(3) வருங்கால வினையெச்சமுடிபு.

அவன் செல்வானாகில் கண்ணியம் பெறுவான். { (ஐயப்பொருளில் வந்தது.)

நீர் வந்தால் தருவேன். { (தீர்மானப்பொருளில் வந்தது.)

இனி இவ்வாறு பெயரெச்சமுடிபுகளிலும் வருவன உளவெனில் கண்டு அமைத்துக்கொள்க. இவ்வியலில் வேற்றுமைப்பொருண்முடிபுகளும் அடைமொழிப்பொருண்முடிபுகளுமாக வந்த அப்பிரதானவாக்கியங்களே மேலே உறுப்பியலில் வாக்கியநிலையங்கமெனக் காட்டியதற்குதாரணங்களாகுமெனவுங்கொள்க.

## 2. THE COMPOUND SENTENCE.
## ஒன்றாத்தொடர் வாக்கியம்.

60. முடிந்த வாக்கியத்தோடு தொடர்ந்துவரும் வாக்கியம் இடையிற்புணர் நிலையிடைச்சொற்பெற்றேனும் பெறுமலேனும் ஒன்றாமல் தொடர்வது ஒன்றாத்தொடர் வாக்கியமாம்.

இவற்றுள் முடிந்த வாக்கியம் சிரேஷ்ட வாக்கியமென்றும், தொடர்ந்தவாக்கியம் உபசிரேஷ்ட வாக்கியமென்றும் கூறப்படும். புணர் நிலையிடைச்சொற்களாவன: ஆகையால், ஆனதால், ஆதலால், அப்பொழுது, மேலும், பின்பு, பிறகு, அல்லது, ஆவது, முதலிய பெயரிடைச்சொற்களும்; ஆனால், ஆக, அன்றியும், அப்படியிருக்க, முதலிய வினையிடைச்சொற்களுமாம்.

## SEVEN KINDS OF COMPOUND SENTENCES.
## அத்தொடர் வகை.

61. அத்தொடர் இணைநிலைத்தொடர், சமநிலைத்தொடர், எதிர்நிலைத்தொடர், மறைநிலைத்தொடர், பிரிநிலைத்தொடர், ஏதுகாரியநிலைத்தொடர், வினாவிடைநிலைத்தொடர் என எழுவகையாம்.

### 1. ILLATIVE SENTENCE.
### இணைநிலைத்தொடர்.

62. உபசிரேஷ்டத்தின் பயனிலைப்பொருளையாவது, எழுவா

ய்ப்பொருளையாவது, துணைநிலைப்பொருளையாவது, அடைமொழிப் பொருளையாவது, சிரேஷ்டந்தனக்கு எழுவாய்ப்பொருளாகவேனும் துணைநிலைப்பொருளாகவேனும் அடைமொழிப்பொருளாகவேனும் சுட்டி இணைத்துத்தொடர்வது இணைநிலைத்தொடராம். இப்படிச் சுட்டுவதில் சிரேஷ்டம் உபசிரேஷ்டத்தின் பயனிலைப்பொருளைச் சுட்டுமிடத்து எழுவாய்ப்பொருளையுஞ்சேர்த்துச் சுட்டுமென்றும், மற்றும் எழுவாய்ப்பொருள் அடைமொழிப்பொருள்களைச்சுட்டு மிடத்துத்தனித்தனியே சுட்டுமென்றுங் கொள்க.

உ—ம்.

(1)

| உபசிரேஷ்டம். | | சிரேஷ்டம். |
|---|---|---|
| மந்திரி வந்தான்; | ‖ | அது நம்மரசனுக்கு உவப்பாயிற்று. |
| தம்பி வாசித்தான்; | ‖ | அதைத் தமையன் கேட்டான். |
| இந்நிலம் செழிப்பானது; | ‖ | அதனால் பயிர் நன்றாய்விளைந்திருக்(கின்றது. |
| ராஜன் கேட்டான்; | ‖ | மந்திரி அதற்கு ஒன்றும்பேசவில்லை. |
| நான் எழுதியிருந்தேன்; | ‖ | அதிலிருந்து அவன் அநேகதப்பிதங்(கண்டுபிடித்தான். |
| நான் போனேன்; | ‖ | அதற்குள் அவன் போய்விட்டான். |

(இவற்றில் உபசிரேஷ்டத்தின் பயனிலைப்பொருள்களை சிரேஷ்டந் தனக்கு எழுவாயாகவும் துணைநிலைப்பொருளாகவுஞ்சுட்டித்தொடர்ந்தது.)

(2)

| உபசிரேஷ்டம். | | சிரேஷ்டம் |
|---|---|---|
| மந்திரி இறந்துபோனான்; | ‖ | அம்மந்திரி மிகவும் நல்லவன். |
| சாத்தன் வந்தான்; | ‖ | அவனை நான் கண்டுபேசினேன். |
| சுந்தரம் போகிறான்; | ‖ | அவனால் அக்காரிய முடியக்கூடும். |
| இராஜா வந்தார்; | ‖ | அவருக்குச்சம்பிரமமாய் விருந்திட்(டார்கள். |

(இவற்றில் உபசிரேஷ்டத்தின் எழுவாய்ப்பொருள்களை சிரேஷ்டந் தனக்கு எழுவாயாகவும் துணைநிலைப்பொருளாகவுஞ் சுட்டித் தொடர்ந்தது.)

(3)

| | | |
|---|---|---|
| அவன் பேச்சைக் கேட்டோம்; | ‖ | அது காதுக்கு மதுரமாயிருந்தது. |
| கொற்றன் வீட்டைக் கட்டினான்; | ‖ | அவ்வீட்டைச்சாத்தன் வாங்கிக்(கொண்டான். |
| அவன் கத்தியால் வெட்டினான்; | ‖ | அக்கத்தி மிகவுங் கூர்மையானது. |

| | |
|---|---|
| சாத்தன் பசுவுக்குத் தண்ணீர் வார்த்(தான்; | அப்பசு குடிக்கவில்லை. |

(இவற்றில் உபசிரோஷ்டத்தின் துணைநிலைப்பொருள்களை சிரோஷ்டந்தனக்கு எழுவாயாகவுந் துணைநிலைப்பொருளாகவுஞ் சுட்டித்தொடர்ந்தது.)

(4)

| | |
|---|---|
| ராமன் அவ்வுயர்ந்த மரத்தை வெட்(டினான்; | அதினுயரம் எவ்வளவாயிருந்தது! |
| சாத்தன் சற்குணமுள்ள மனிதன்; | அக்குணத்தை என்னென்று விசே(டிப்பேன். |
| அவன் பெருமையுள்ள மனிதன்; | அப்பெருமையால் அவன் கெட்டுப்(போவான். |

(இவற்றில் உபசிரோஷ்டத்தின் அடைமொழிப்பொருள்களை சிரோஷ்டந்தனக்கு எழுவாயாகவுந் துணைநிலைப்பொருளாகவுஞ்சுட்டித்தொடர்ந்தது.)

இவற்றுள் முதலாவது, மந்திரி வந்தான் எனவரும் உபசிரோஷ்டத்தின் பொருளை சிரோஷ்டந் தன்னோடிணைத்துச் சுட்டுமிடத்து, அது, அதை, அதனால், அவன், அவனை, அவனால், எனத்தனக்குள் மறைத்துச்சுட்டின் அகச்சுட்டிணைநிலையென்றும்; அவ்வருகை, அவ்வருகையை, அவ்வருகையால், அம்மந்திரி, அம்மந்திரியை, அம்மந்திரியால் எனவெளிப்படையாய்ச் சுட்டின் புறச்சுட்டிணைநிலையென்றும் கொள்ளப்படும். மந்திரி வந்தான், அது நம்மரசனுக்கு உவப்பாயிற்று; என்பதில் அது எனவருஞ்சுட்டின் நிலைக்களத்தில் அவன் வந்தது அல்லது வந்தது எனவருமாயின் அவற்றையும், குயவன் குடத்தை வனைந்தான்; அக்குடம் உடைந்துபோயிற்று என்பதில் அக்குடம் எனவருஞ் சுட்டின் நிலைக்களத்தில் அவன் வனைந்த குடம் அல்லது வனைந்த குடம் எனவருமாயின் அவற்றையும் வாக்கியச்சுட்டுகளெனக்கொள்ளலாகும்.

மந்திரி வந்தான், ஆகையால் அது நம்மரசனுக்கு உவப்பாயிற்று; இவ்வூரார் நல்லவர்கள், ஆனதினால் சமாதானமுடையவர்களாயிருக்கிறார்கள்; நீர் இங்கே வருவீரா? அப்படியானால் நான் காத்திருக்கிறேன்; சாத்தன் வருவான், பிறகு கொற்றனும் வருவான்; எனப்புணர்நிலையிடைச்சொற்கள் இடையில் பொருந்துமிடத்து அஃதாகையால், அஃதானதினால், அஃதப்படியானால், அதற்குப்பின்பு, அல்லது அவன் வந்தபின்பு, அவன் வந்தபிற்பாடு என அவ்விடைச்சொற்களுக்கு முன்னின்றிணைந்துவருகிற தனிசுட்டுகளும் வாக்கியச்சுட்டுகளும் பெரும்பான்மையும் தொக்குநிற்குமெனக்காண்க. இவ்விணைநிலைத்தொடரைத்தவிர்ந்த மற்றுந்தொடர்களில் அப்புணர்நிலையிடைச்சொற்கள் வருமாயினும், அருகிவருமென்க.

## 2. INDEPENDENT SENTENCE.
## சமநிலைத்தொடர்.

63. சிரேஷ்டவாக்கியம் உபசிரேஷ்டத்தை ஒப்புப்பற்றியாவது, ஒற்றுமைபற்றியாவது, எண்பற்றியாவது, காலம்பற்றியாவது, இடம்பற்றியாவது, சமவியல்பாய்த்தொடர்வது சமநிலைத்தொடராம்.

உ—ம்.

| உபசிரேஷ்டம். | | சிரேஷ்டம். |
|---|---|---|
| (1) குருவி கூப்பிட்டது; | ‖ | அதுபோலக்கொற்றனுங்கூப்பிட்(டான். |

(இது ஒப்புப்பற்றிய சமநிலை.)

| | | |
|---|---|---|
| (2) இவன் கட்டிலைத்தூக்கினான்; | ‖ | அவன் பெட்டியைத்தூக்கினான். |
| சாத்தனும் வந்தான்; | ‖ | கொற்றனும் வந்தான் |
| அதுவும் மிருகம்; | ‖ | இதுவும் மிருகம். |

(இது ஒற்றுமைபற்றிய சமநிலை.)

| | | |
|---|---|---|
| (3) முதலாவது சாத்தன் வந்தான்; | ‖ | இரண்டாவது கொற்றன் வந்தான். |

(இது எண்பற்றிய சமநிலை.)

| | | |
|---|---|---|
| (4) முந்தி மின்னல் தோன்றிற்று; | ‖ | பிந்தி இடி கேட்டது. |
| நேற்று ராமன் போனான்; | ‖ | இன்று கொற்றன் போகிறான். |

(இவை காலம்பற்றிய சமநிலை.)

| | | |
|---|---|---|
| (5) அங்கே சாத்தன் நின்றான்; | ‖ | இங்கே கொற்றன் நின்றான். |

(இது இடம்பற்றிய சமநிலை.)

சாத்தன் சோற்றையும் பாலையும் உண்டான் குடித்தான் எனவருவது நிரைநிரைச்சமநிலையென்க.

## 3. SENTENCES HAVING OPPOSITE MEANINGS.
## எதிர்நிலை.

64. சிரேஷ்டவாக்கியம் உபசிரேஷ்டத்துக்கு எதிராய்நிற்கத் தொடர்வது எதிர்நிலைத்தொடராம்.

உ-ம்.

| உபசிரேஷ்டம். | | சிரேஷ்டம். |
|---|---|---|
| இம்மனிதன் உயர்ந்தான்; | ‖ | அம்மனிதன் தாழ்ந்தான். |

| | | |
|---|---|---|
| இவ்வேலை நல்லது; | \|\| | அவ்வேலை கெட்டது. |

## 4. POSITIVE AND NEGATIVE SENTENCES.

## மறைநிலை.

65. சிரேஷ்டவாக்கியம் உபசிரேஷ்டத்தை மறுத்துவரத் தொடர்வது மறைநிலைத்தொடராம்.

உ-ம்.

| உபசிரேஷ்டம். | | சிரேஷ்டம். |
|---|---|---|
| வீமன் வந்தான்; | \|\| | ஆனால் ராமன் வரவில்லை. |
| சற்குணன் தருவான்; | \|\| | சுந்தரம் தரமாட்டான். |
| நீ போ; | \|\| | நான் போகமாட்டேன். |

## 5. DISJUNCTIVE SENTENCES.

## பிரிநிலை.

66. சிரேஷ்டவாக்கியம் உபசிரேஷ்டத்தினின்றும்பிரிந்து தொடர்வது பிரிநிலைத்தொடராம்.

உ-ம்.

| உபசிரேஷ்டம். | | சிரேஷ்டம். |
|---|---|---|
| நான் போகவேண்டும்; | \|\| | அல்லது நீ போகவேண்டும். |
| நானாவது போகவேண்டும்; | \|\| | நீயாவது போகவேண்டும். |
| நீ போ; | \|\| | இல்லாவிடில் நான் போவேன். |
| அவன் வஸ்திரங்கொடுத்தான்; | \|\| | அன்றிப்பணமுங்கொடுத்தான். |
| என்னை அடிக்கவரவில்லை; | \|\| | சாத்தனை யடிக்கவந்தான். |

## 6. SENTENCES DENOTING CAUSE & EFFECT.

## ஏதுகாரியநிலை.

67. உபசிரேஷ்டம் ஏதுவாகவும், சிரேஷ்டம் காரியமாகவும் தொடர்வது ஏதுகாரியநிலைத்தொடராம்.

7137a

உ—ம்.

| உபசிரோவ்ஷ்டம். | சிரோவ்ஷ்டம். |
| --- | --- |
| மழை மிகுதியாய்ப்பெய்தது; | ஆகையால் குளங்கள் உடைந்தன. |
| குளங்கள் உடைந்துபோயின; | ஏனெனில் மழை மிகுதியாய்ப்பெ (ய்தது. |

ஏனெனில் என்னும்புணர்நிலை இடைச்சொற்பெறும்போது சிரோவ்ஷ்டம் இறுதியில் நிற்பதற்குப்பதில் முதலில்வந்து நிற்குமாதலால் குளங்கள் உடைந்தன, மழைபெய்தது, ஆகையால் என்பதுபோல ஈற்றில் நின்றது மாறி முதலில்நின்ற விதியன்று.

## 7. SENTENCES OF QUESTION & ANSWER.

## வினாவிடை நிலை.

68. உபசிரோவ்ஷ்டம் வினாவும், சிரோவ்ஷ்டம் விடையுமாக நிற்கத்தொடர்வது வினாவிடை நிலைத்தொடராம்.

உ—ம்.

| உபசிரோவ்ஷ்டம். | சிரோவ்ஷ்டம். |
| --- | --- |
| அவன் உத்தரவாதம்பண்ணினனா? | பண்ணினன். |
| சற்குணன் அப்படிச்செய்தானா? | செய்தான். |

இப்படி வருவது தன் வினாவிற்கு விடையேயன்றி பிறர் வினாவிற்கு விடையன்று.

## 3. COMPOUND SENTENCES CONTRACTED.

## அடுக்குத்தொடர் வாக்கியம்.

69. இதுவுந்தொடர்வாக்கிய வகையிலொன்று. இவ்வடுக்குத்தொடர்வாக்கியம் எழுவாய் துணைநிலை அடைமொழி என்னும் வாக்கியாங்கங்களில் ஏதாவது ஒன்று அடுக்கிவருமானால் அடுக்குத்தொடர்வாக்கியமெனப்படும்.

உ—ம்.

சாத்தனும் கொற்றனும் வந்தார்கள். ... ... ... (எழுவாயடுக்கு.)
பூதன் காயையும் பூவையும் பறித்தான். ... ... (துணைநிலையடுக்கு.)

ராமன் அன்பாயும் தயாளமாயும் இருக்கிறான். (அடைமொழியடுக்கு.)

ஒரே பயனிலை வினையின் செய்கைக்குப் பலசெய்பவனும் பல செயப்படு பொருண்முதலிய துணை நிலைகளும் அடுக்கிவருதல்பற்றி அடுக்குத்தொடராகிவருவதை அவ்வொன்றுத்தொடரின் ஓர்பிரிவாக இங்கே காட்டப்பட்டது.

ஒரே பயனிலை வினையின் செய்கைக்குப் பல செய்பவன் அடுக்கிவருவதுபோல ஒரே எழுவாயாகிய செய்பவனுக்குப் பலபயனிலை அடுக்கிவந்து அடுக்குத்தொடராகாதோவெனில், பல பயனிலை அடுக்கி ஒரே செய்பவனைக் கொள்வதற்கு விதியேயன்றி ஒரே செய்பவன் பல பயனிலையை அடுக்கிக்கொள்வதற்கு விதியின்று. பின்னைச் சாத்தன்வந்தான், இருந்தான், சென்றான் என வருவது வந்தான், இருந்தான், சென்றான், சாத்தன், என ஈற்றில் நின்ற சொல் முதலில் வந்து அவ்வாறாக நின்றதேயொழிய, ஓரெழுவாய் பல பயனிலைவினையை அடுக்கிக்கொண்டதன்று. ஆகையின் பல பயனிலையடுக்கி ஒரு பெயரைக்கொண்டாலும், ஓரே பெயர் பல பயனிலையையடுக்கிக்கொள்ளாதென்பது கருத்தாயிற்று. பல பயனிலை கொண்ட பெயர் முதலில்வர நிற்குந்தொடரையே பயனிலையடுக்குத்தொடராகக்கொள்ளலாகாதோவெனில், பயனிலை வினை பன்மை முடிவைப்பொருந்தாமலிருப்பதால், அடுக்குத்தொடராகக்கொள்ளாமல் ஒன்றுத்தொடருள் சமநிலைத்தொடராகக் கொள்ளப்படும். அப்படியாயின் பல செய்பவன் அடுக்கி ஒரு பயனிலை வினையை ஈறாகக்கொண்டதை அவைபோல ஒன்றுதொடராகக் கொண்டால் என்னையெனில், பல செய்பவனையும் ஓரேபயனிலைவினை தன் விகுதியின் பன்மையுருபுக்குள் அடக்கிநின்றமையால் கொள்ளலாகாதென்க. நின்றான், இருந்தான், கிடந்தான், சாத்தன்கள் எனப் பலபயனிலை வினையையும் ஒரே செய்பவன் விகுதியால் அடக்காமையுங்கண்டுகொள்க. இவ்வாறகவே, முற்றுப்பயனிலையடுக்கியவிடத்து, கடைசி வினைமுற்றுத்தவிர, மற்றவை வினையெச்சமாகத்திரிவது ஒன்றித்தொடரொன்றும், திரியாது நிற்பது ஒன்றுத்தொடரொன்றும், ஒருமை விகுதியில்நின்ற முற்றுப்பயனிலை பல செய்பவனைக்கொண்டு பன்மை விகுதிபெற்று வருவதும் ஒரே செய்பவனைக்கொண்ட முற்றுவினைக்குள் துணைநிலைப்பொருள்கள் அடைமொழிகள் அடுக்கிவருவதும் அடுக்குத் தொடரொனவுங்காண்க.

இனி என்னைப் பல்லையுடைத்தான், பசுவைப் பாலைக் கறந்தான், வைத்தியத்தினுல் கல்லாலெறிந்தான், எனக்கு வயிற்றுக்கில்லை, வீட்டில அறையிலிருந்தான், எனவரும் வாக்கியங்களில்; பல்லையுடைத்தான், பாலைக் கறந்தான், கல்லாலெறிந்தான், வயிற்றுக்கில்லை, அறையிலிருந்தான், என்ப

வைகள், தேவதையைப்பிரார்த்தனைபண்ணினானென்பதில் பிரார்த்தனைபண்ணினானென்பது தொகைநிலைத்தொடர்மொழிப்பயனிலையாகவருவதுபோல இவை தொகாநிலைத்தொடர்மொழிப்பயனிலையாக வந்தனவேயன்றி, இரண்டு செயப்படுபொருள், இரண்டு கருவிப்பொருள், இரண்டு கோடற்பொருள், இரண்டு இடப்பொருள் வந்து அடுக்கியதாகக் கொள்ளப்படாது. இவ்வாறு சினைப்பெயர்களில் வருந்தொடர்மொழிப்பயனிலைக்கு முதற்பெயர்கள் செயப்படுபொருள் முதலியனவாக வருவது வழக்கேயாம். எனக்கு வயிற்றுக்குச்சாப்பாட்டுக்கு இல்லையெனப்பன்மொழித்தொடரில் அவ்வாறு வருவதையுங்கொள்க.

---

## NOUNS MAY BE JOINED BY THE FOLLOWING CONJUNCTIONS.

## வேற்றுமையங்கங்களடுக்கும் விதம்.

---

70. எழுவாய் துணைநிலை முதலிய வேற்றுமையங்கங்கள் அடுக்குமிடத்து உம், என்று, என, ஏ, என்றோ, எனா வென்கிற எண்ணிடைச்சொற்களைப்பெற்றும், எண்ணிடைச்சொற்கள் தொக்குநிற்கவருஞ் செவ்வெண்ணாகநின்றும், அடுக்கிவரும். இவற்றுள் உம், என்று, எனவென்கிற எண்கள் தொகைபெற்றும் பெறாமலும் அடுக்கிவருமென்றும் ஏ, என்றோ, எனாவெண்களும் செவ்வெண்ணும் தொகைபெற்றே யடுக்கிவருமென்றுங்கொள்க.

உ—ம்.

(1) சாத்தனுங் கொற்றனும் தேவனும் பூதனும் ஆனவர்
சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று
சாத்தனென கொற்றனென தேவனென பூதனென } வந்தார்.

சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனுமாகிய
சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று
சாத்தனென கொற்றனென தேவனென பூதனென } நால்வர் வந்தார்.

(இவை தொகைபெற்றும் பெறாதும் அடுக்கிவந்தன.)

(2) சாத்தனே கொற்றனே தேவனே பூதனே ஆகிய
சாத்தனென்றோ கொற்றனென்றோ தேவனென்றோ பூதனென்றோ ஆகிய
சாத்தனெனா கொற்றனெனா தேவனெனா பூதனெனா ஆகிய
சாத்தன் கொற்றன் தேவன் பூதன் ஆகிய } நால்வர் வந்தார்.

(இவை தொகைபெற்றே யடுக்கிவந்தன.)

சாத்தனொடு கொற்றனொடு தேவனொடு பூதனொடு நால்வருளர்; நில னொடு நீரொடு தீயொடு வளியொடு அளவறு காயமொடாகிய உலகம் என ஒடுவென்னும் எண்ணிடைச்சொல் நின்று தொகைபெற்றும் பெறாதும் அடுக்கிவருவதையுங்கொள்க. நால்வர்வந்தார், நான்குவந்தனவென எண் அடுக்குமுடிவில் வராமல் தனிவரின், நால்வர் நான்கு என்பன உயர்திணை அஃறிணைப் பன்மைப்பெயர்களாய் நின்று தனிபங்கங்களின் பாற்படுமே யன்றி அடுக்கங்கமாகக்கொள்ளப்படாது.

71. வேற்றுமையங்கங்களடுக்குமிடத்து என்று, எனவென்னும் எண்ணிடைச்சொற்கள் எண்ணப்படும் பொருள்தோறும் நின்று பொருள்படுவதுமன்றி இறுதியில் நின்றும் அப்பொருள்தோறு ஞ் சென்று பொருள்படும்.

உ—ம்.

கண்மூக்கென்று பாராமல் அடித்தான்.

மெய்வாய் கண்மூக்குச்செவியென ஐந்தும் பஞ்சப்பொறிகளென்னப் படும்.

இங்கே இறுதியில் நின்ற என்று, என, என்பவைகள் கண்ணென்று மூக்கென்று, மெய்யென வாயென கண்ணென மூக்கென செவியென, என்று பொருள்தோறும் சென்று பொருள்படுவதைக்காண்க.

72. வேற்றுமையங்கங்களில் எண்ணிடைச் சொற்கள் தொக்க தொடர்மொழியாகி அடுக்கி நிற்குமிடத்து இறுதியில் பன்மை விகுதியும் உருபும் வரப்பெறும்.

உ—ம்.

சூரியன் சந்திரன் என்பவைகள் இருசுடரென்னப்படும்.
சேர சோழ பாண்டியர் வந்தார்கள்.
காய்கனி கிழங்குகளைத்தின்றான்.

---

## VERBS MAY BE JOINED BY THE FOLLOWING CONJUNCTIONS.

## வினையங்கங்களடுக்கும் விதம்.

73. வினையங்கங்களடுக்குமிடத்து தொகைபெறாமல் மேற் சொல்லிய எண்ணிடைச் சொற்களில் பொருந்தியவைகளை ஏற்றுவ

றும் எச்சமும் வினைமுற்றுமாகிய அங்கங்கள் எண்ணிடைச் சொற்களை ஏற்கமாட்டாவாகும்.

கற்றுங் கேட்டுங் கற்பனை கடந்தான்.
வெட்டியுங் குத்தியுஞ் சொன்ருன்.
வெட்டவுங் குத்தவும் போனுன்.
பாடப்படிக்க வல்லவன்.
வென்றுலுந் தோற்றுலும் வசை.
வந்தால் இருந்தால் பேசாமலிருக்கவேண்டும்.
அன்பாயும் தாழ்மையாயும் பேசினுன்.
மரியாதையாய் தயவாய் ஏற்றுக்கொண்டான்.
உண்ணவென்றும் உடுக்கவென்றும் வந்தான்.
(இவை எண்ணிடைச்சொற்பெற்றும் பெருமலும் வந்தன.)
கற்ற கேட்ட உணர்ந்த பெரியர் இவர்.
நின்ருன் இருந்தான் கிடந்தான் தன் கேளலறச்சென்ருன்.
(இவை எண்ணிடைச்சொற் பெருது வந்தன.)

74. எண்ணிடைச்சொற்கள் தொக்கியாவது விரிந்தாவது வினையங்கங்களடுக்குமிடத்து சில வினையிடைச்சொற்கள் என்று, எனவென்னும் எண்ணிடைச்சொற்கள்போல வினைதோறும் நின்று பொருள்படுவதுமன்றி, இறுதியில் நின்றும் அவ்வினைகள்தோறுஞ் சென்று பொருள்படும்.

உ—ம்.

அடிக்கக் குத்தப்பட்டான்.
அடிக்கவும் குத்தவும்பட்டான்.
போகவர வொட்டான்.
போகவும் வரவும் ஒட்டான்.
வேண்டி விரும்பிக்கொண்டான்.
சாத்தனும் கொற்றனுமாகிய.
காற்றுங் கனலுமாய்.

இங்கே இறுதியில்நின்ற பட்டான், ஒட்டான், கொண்டான், ஆகிய, ஆய், என்னும் வினையிடைச்சொற்கள் அடிக்கப்பட்டான் குத்தப்பட்டான் போகவொட்டான் வரவொட்டான் வேண்டிக்கொண்டான் விரும்பிக்கொண்டான் சாத்தனுகிய கொற்றனுகிய காற்றுமாய் கனலுமாய் என வினைதோறுஞ்சென்று பொருள்படுவதைக்காண்க.

இவ்வாறு வினையெச்சமடுக்கி வினையிடை முற்றுக்களைக்கொண்டிருக்கு

மிடத்தெல்லாம் அடுக்குத்தொடராகாமல் ஒன்றாத்தொடர்களில் ஒன்றாகவே வருமென்க.

---

## FIVE KINDS OF SENTENCES, HAVING TWO OR MORE SUBJECTS &c.

## அடுக்குத்தொடரின் வகை.

75. இவ்வடுக்குத்தொடர் தனிநிலையங்கவடுக்குத்தொடர் எனவும், விரிநிலையங்கவடுக்குத்தொடர் எனவும், வாக்கியநிலையங்கவடுக்குத்தொடர் எனவும், அடுக்கங்க அடுக்குத்தொடர் எனவும், கலப்பங்கவடுக்குத்தொடர் எனவும், ஐவகைப்படும்.

---

### 1. WHERE SIMPLE WORDS ARE COMBINED.

### தனிநிலையங்கவடுக்கு.

76. வாக்கியாங்கங்கள் அடையின்றித் தனியாய்நின்று அடுக்கிவருவது தனிநிலையங்கவடுக்குத்தொடராம்.

உ—ம்.

சாத்தனும் கொற்றனும் வந்தார்கள். (தனிநிலை யெழுவாயங்கம் அடுக்கியது.)

ஆட்டையும் மாட்டையும் கொன்றான். (தனிநிலைத் துணைநிலையங்கமடுக்கியது.)

இனிப்பாயுங்கசப்பாயும் இருந்தது. (தனிநிலையடையங்கம் அடுக்கியது.)

---

### 2. WHERE PHRASES ARE COMBINED.

### விரிநிலையங்கவடுக்கு.

77. வாக்கியாங்கங்கள் விரியாய்நின்று அடுக்கிவருவது விரிநிலையங்க அடுக்காம்.

| | |
|---|---|
| பெரியதகப்பனும் சிறியதாயாரும் வந்தார்கள். | (விரிநிலை எழுவாயங்கமடுக்கியது.) |
| அவன் நல்லகுணத்தையும் பொல்லாதகுணத்தையுங்காட்டுகிறான். | (விரிநிலைத்துணை நிலையங்கமடுக்கியது) |
| அது மிகச்சிறிதாயுங் கொஞ்சங் கெட்டதாயுமிருக்கிறது. | (விரிநிலையடையங்கமடுக்கியது.) |

## 3. WHERE SENTENCES ARE COMBINED.

## வாக்கிய நிலையங்கவடுக்கு.

78. வாக்கியமே வாக்கியத்துக்கு அங்கமாகநின்று அடுக்கி வருவது வாக்கிய நிலையங்கவடுக்குத்தொடராம்.

உ—ம்.

| | |
|---|---|
| நீ சொன்னதும் அவன் சொன்னதும் அபத்தம். | (வாக்கியநிலை எழுவாயங்கம் அடுக்கியது.) |
| சாத்தன் சொன்னதையும் கொற்றன் பேசினதையும் அறிந்தேன். | (வாக்கியநிலைத் துணைநிலையங்கம் அடுக்கியது.) |
| கொற்றன்வந்ததாகவும் போனதாகவும் கேள்விப்பட்டேன். | (வாக்கியநிலையடை அங்கமடுக்கியது.) |

## 4. WHERE ANY OR ALL OF THE PREVIOUS ARE DOUBLED.

## அடுக்கு நிலையங்கவடுக்கு.

79. அடுக்குநிலையங்கங்களே யடுக்கிவருவது அடுக்கங்கவடுக்குத்தொடராம்.

உ—ம்.

| | |
|---|---|
| ராமன் லட்சுமணன் என்பவர்களும் பரதன் சத்துருக்கன் என்பவர்களும் வந்தார்கள். | (அடுக்குநிலை எழுவாயங்கம் அடுக்கியது.) |
| அவன் காய்கனி என்பவைகளையும் பூவரும்பு என்பவைகளையும் பிடுங்கினான். | (அடுக்குநிலைத்துணை நிலையங்கம் அடுக்கியது.) |

சாத்தன் இங்கே வந்ததாயும் பேசி னதாயும் அங்கே போனதாயும் முடித்ததாயும் கேள்விப்பட்டேன். } (அடுக்குநிலை அடையங்கம் அடுக்கியது.)

## 5. WHERE ANY OR ALL OF THE PREVIOUS ARE COMBINED.

## கலப்பங்கவடுக்கு.

80. மேற்கூறிய தனிநிலையங்கம் விரிநிலையங்கம் வாக்கியநிலையங்கம் அடுக்குநிலையங்கங்களாகிய நான்குங் கலந்தடுக்குவதே கலப்பங்கவடுக்காம்.

உ—ம்.

கோவில்களும் பெரியகோபுரங்களும் மாடமாளிகைகளும் ஜனங்கள் திரள் திரளாய் நடமாடுவதும் அவ்வூருக்கு மிகச்சிறப்பாய் விளங்குகின்றன.

இங்கே, கோவில்களென்பது தனிநிலையங்கமும், பெரியகோபுரங்களென்பது விரிநிலையங்கமும், மாடமாளிகைகளென்பது அடுக்குநிலையங்கமும், ஜனங்கள் திரள் திரளாய் நடமாடுவதென்பது வாக்கியநிலையங்கமுமாம். இந்நான்கு அங்கங்களும் இங்கே எழுவாய்களாகநின்று கலந்து அடுக்கியது காண்க.

துணைநிலையங்கம் பயனிலையங்கம் அடைமொழியங்கம் கலந்தடுக்குவதற்கும் இப்படியே உதாரணங்காண்க.

இதுவரை வாக்கியத்திலுள்ள எழுவாய் முதலிய அங்கங்களில் ஓரங்கமடுக்க மற்றையங்களடுக்காமல் வருவதற்கே உதாரணங்கள் கூறப்பட்டன. ஓரங்கமடுக்குகையில் மற்றையங்கங்களுமடுக்குமாயின் அவற்றுளடங்கிய வாக்கியங்களை விரிக்குமிடத்துப் பலவாய்ப்பெருகுமெனவறிக.

## THE PREVIOUS FORMS MAY BE MADE INTO COMPLEX OR COMPOUND SENTENCES.

## அடுக்குத்தொடர் வாக்கியங்கள் தொடர்ந்து ஒன்றித்தொடர் ஒன்றாத்தொடராய் வருமென்பது.

81. இனி இவ்வடுக்குத்தொடர் வாக்கியங்களும் பிரதான அப்பிரதானங்களாகவும் சிரேஷ்ட உபசிரேஷ்டங்களாகவும் வரும்.

ராஜாவும் மந்திரியும் வந்தார்களென்பதைப் பிரஜைகள் அறிந்தார்கள்.

(இங்கே அடுக்குத்தொடர் வாக்கியம் அப்பிரதானமாய் வந்தது.)

பிரஜைகள் கெட்டுப்போகிறதென்பதை ராஜாவும் மந்திரியும் அறிந்தார்கள்

(இங்கே அடுக்குத்தொடர் வாக்கியம் பிரதானமாய் வந்தது.)

ராஜாவும் மந்திரியும் நற்குணமுடையவர்களாயிருந்தார்கள்; அதனால் பிரஜைகளுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிருந்தது.

(இங்கே அடுக்குத்தொடர் வாக்கியம் உபசிரேஷ்டமாய் வந்தது.)

பிரஜைகள் வேண்டிக்கொண்டார்கள்; அதற்கு இராஜாவும் மந்திரியும் இணங்கவில்லை.

(இங்கே அடுக்குத்தொடர்வாக்கியம் சிரேஷ்டமாய் வந்தது.)

82. **இவ்வாறாகவந்த ஒன்றித்தொடர் ஒன்றுத்தொடரிலுள்ள அப்பிரதானத்துக்குள் அப்பிரதானமும், அப்பிரதானத்துக்குள் உபசிரேஷ்டமும், உபசிரேஷ்டத்துக்குள் அப்பிரதானமும், உபசிரேஷ்டத்துக்குள் உபசிரேஷ்டமும் வரப்பெறும்.**

மாணாக்கர் நன்றாய்ப் பரீக்ஷை கொடுத்தார்களென்பதை வாத்தியார் அறிந்து மிகவுஞ்சந்தோஷப்பட்டார்.

மாணாக்கர் நன்றாய்ப் பரீக்ஷைகொடுத்தார்களென்பதை ... (1)

வாத்தியார் அறிந்து ... ... ... ... (2)

(வாத்தியார்) சந்தோஷப்பட்டார். ... ... ... (3)

இவற்றுள் (3) பிரதானம்; (2) (3)க்கு அப்பிரதானம்; (1) (2)க்கு அப்பிரதானம்; ஆகையால், அப்பிரதானத்துக்குள் அப்பிரதானம்வந்ததென்க.

2

மாணாக்கர் நன்றாய்ப் பரீக்ஷைகொடுத்தார்கள்; அதனால் வாத்தியார் நன்றாய்க் கற்றுக்கொடுத்தாரென்று நாம் எண்ணவேண்டும்.

மாணாக்கர் நன்றாய்ப் பரீக்ஷைகொடுத்தார்களாகையால் ... (1)

வாத்தியார் நன்றாய்க் கற்றுக்கொடுத்தாரென்று ... ... (2)

நாம் எண்ணவேண்டும் ... ... ... ... (3)

இவற்றுள் (3) பிரதானம்; (2) (3)க்கு அப்பிரதானம்; (1) (2)க்கு உபசிரேஷ்டம்; ஆகையால், அப்பிரதானத்துக்குள் உபசிரேஷ்டம் வந்தது.

3

மாணாக்கர் நன்றாய்ப் பரீக்ஷைகொடுத்தார்களென்பதை உபாத்தியாயர் அவர்கள் பெற்றாருக்கு அறிவித்தார்; அதனால் பெற்றாருக்கு மிகவுஞ் சந்தோஷமுண்டாயிற்று.

மாணாக்கர் நன்றாய்ப் பரீக்ஷைகொடுத்தார்களென்பதை ... (1)
உபாத்தியாயர் அவர்கள் பெற்றாருக்கு அறிவித்தார் ... (2)
அதனால் பெற்றாருக்கு மிகவுஞ் சந்தோஷமுண்டாயிற்று. ... (3)

இவற்றுள், (3) சிரோஷ்டம்; (2) (3)க்கு உபசிரோஷ்டம்; (1) (2)க்கு அப்பிரதானம்; ஆகையால், உபசிரோஷ்டத்துக்குள் அப்பிரதானம் வந்தது.

4

நான் உம்மைப்பார்க்கும்படி வந்தேன்: நீர் வீட்டிலில்லை; அதனால் மறுபடியுந் திரும்பிப்போய்விட்டேன்.

நான் உம்மைப் பார்க்கும்படிவந்தேன். ... ... ... (1)
நீர் வீட்டிலில்லை. ... ... ... ... ... ... (2)
அதனால் மறுபடியுந் திரும்பிப்போய்விட்டேன். ... ... (3)

இவற்றுள், (3) சிரோஷ்டம்; (2) (3)க்கு உபசிரோஷ்டம்; (1) (2)க்கு உபசிரோஷ்டம்: ஆகையால், உபசிரோஷ்டத்துக்குள் உபசிரோஷ்டம் வந்தது.

இவ்வாறு பிரதானங்களுக்குள்ளும் சிரோஷ்டங்களுக்குள்ளும் நின்ற அப்பிரதானங்களும் உபசிரோஷ்டங்களும் தனித்து நிற்குமானால், தனியப்பிரதானம் தனியுபசிரோஷ்டமென்றும்; பல தொடர்ந்து நிற்குமானால் தொடரப்பிரதானம் தொடருபசிரோஷ்டமென்றும் கூறுக. இனி, அத்தொடரில் அப்பிரதானத்துக்குள் அப்பிரதானமும் உபசிரோஷ்டத்துக்குள் உபசிரோஷ்டமுமாகிய தன்னினமே பல தொடர்ந்து நிற்குமெனில், தன்னினத்தொடரப்பிரதானம் தன்னினத்தொடருபசிரோஷ்டமென்றும்; அப்பிரதானத்துக்குள் உபசிரோஷ்டமும் அப்பிரதானமும், உபசிரோஷ்டத்துக்குள் அப்பிரதானமும் உபசிரோஷ்டமுமாகிய வேற்றினம் பல தொடர்ந்து நிற்குமெனில், வேற்றினத் தொடரப்பிரதானம் வேற்றினத் தொடருபசிரோஷ்டமென்றுங்கூறிக்கொள்க.

ஒவ்வொரு முடிவான தொடருக்கும் பிரதானமும் சிரோஷ்டமும் ஒவ்வொன்று மாத்திரமே உண்டெனக்கொள்க.

இனி, தனியாகவுந் தொடராகவுமுடிந்த வாக்கியங்களை மகா வாக்கியமென்பது வடநூல் வழக்கு. மகா வாக்கியமாவது தன்னிலே பொருள் முடித்துக் காட்டுந்தகுதியுடையது. அம்மகா வாக்கியங்களுக்கு உபகரணங்களாகத் தொடர்ந்துவரும் வாக்கியங்களைக்குணபூதமென்பர். குணபூதமாவது தன்னிலே பொருள் முடித்துக் காட்டுந் தகுதியில்லாதது. அதற்கு அவாந்தர வாக்கியமென்றும் பெயர். இக்குணபூதம் அல்லது அவாந்தர வாக்கியமென்பவைகளையே இந்நூலுள் அப்பிரதான உபசிரோஷ்டங்களெனக் கூறியதாகக்கொள்க.

வாக்கியவியல் முற்றிற்று.

# III. SUPPLEMENT.

## பொதுவியல்.

---

## CERTAIN OTHER FORMS OF SENTENCES.

## வாக்கியப்பிரயோகம்.

---

83. பிரயோகமாவது பயனிலை விகற்பங்களாலாகிய வாக்கிய முடிபும் பிறமுடிபுமாம்.

---

### TWO KINDS OF FORMS.

### அம்முடிபு வகை.

---

84. அது தந்தொழில்முடிபென்றும் தம்மினாகியதொழில் முடிபென்றும் இருவகையாம்.

---

### I. THE ACTIVE FORM.

### தந்தொழில் முடிபு.

---

85. பயனிலை செய்வினையில்முடிவதே தந்தொழின்முடிபாம்.

---

### FOUR KINDS OF THE ACTIVE FORM.

### தந்தொழில் முடிபுவகை.

---

86. தந்தொழில் முடிபானது செயப்படுபொருளிலாப்பயனிலை முடிபென்றும், செயப்படுபொருளுடைப் பயனிலைமுடிபென்றும், இயற்றுதற்கர்த்தாச் செயப்படுபொருளுடைப் பயனிலைமுடிபென்றும், இயற்றுதற்கர்த்தா ஏதுவாற் செயப்படுபொருளுடைப் பயனிலைமுடிபென்றும், நால்வகையாய் வரும்.

---

## 1. HAVING AN INTRANSITIVE PREDICATE.

## செயப்படுபொருளிலாப்பயனிலைமுடிபு.

87. இயற்றுதற்கர்த்தா எழுவாயாக நின்று செயப்படுபொருள்குன்றிய தன்வினையைப் பயனிலையாகப்பெறின் அது செயப்படுபொருளிலாப் பயனிலைமுடிபாம்.

உ—ம்.

சாத்தன்..............வந்தான்.
கொற்றன் ஊரில்....நீங்கினான்.
நாகன் காட்டுக்குச்சென்றான்.

## 2. HAVING A TRANSITIVE PREDICATE.

## செயப்படு பொருளுடைப்பயனிலைமுடிபு.

88. இயற்றுதற்கர்த்தா எழுவாயாக நின்று செயப்படுபொருள் குன்றாத தன்வினையைப் பயனிலையாகப்பெறின் அது செயப்படுபொருளுடைப் பயனிலைமுடிபாம்.

உ—ம்.

ராமன் வீட்டைக்........கட்டினான்.
வீமன் கோட்டையை....இடித்தான்.

## 3. CAUSATIVE PREDICATE. (*a*)

## இயற்றுதற் கர்த்தாச் செயப்படு பொருளுடை முடிபு.

89. இயற்றுதற்கர்த்தா செயப்படுபொருளாய் நிற்க ஏவுதற்கர்த்தா எழுவாயாக நின்று செயப்படுபொருள் குன்றிய வினைவழிவந்த பிறவினையைப் பயனிலையாகப்பெறின், அது இயற்றுதற்கர்த்தாச் செயப்படுபொருளுடைப் பயனிலைமுடிபாம்.

உ—ம்.

வரதன் மாட்டை...நடத்தினன்.

நாகன் உரலை.......உருட்டினன்.

இங்கே மாடும், உரலும், நடத்தலும், உருளுதலுமாகிய இயற்றுதலோடு படுபொருளாயும் நின்றமையால் இயற்றுதற்கர்த்தாச்செயப்படுபொருளாயின.

---

## CAUSATIVE PREDICATE. (5)

## இயற்றுதற்கர்த்தா ஏதுவாற் செயப்படுபொருளுடை முடிபு.

---

90. இயற்றுதற்கர்த்தா ஏதுவாய்நிற்க ஏவுதற்கர்த்தா எழுவாயாகநின்று செயப்படுபொருள் குன்றுவினை வழிவந்த பிறவினையைப் பயனிலையாகப்பெறின், அது இயற்றுதற் கர்த்தா ஏதுவாற் செயப்படு பொருளுடைப் பயனிலை முடிபாம்.

உ—ம்.

சாத்தன் கொற்றனைக்கொண்டு மாட்டை அடிப்பித்தான்.

மாட்டை நடத்துவித்தான் எனவரில் ஈரேவற்பிறவினையென்க. இங்கே கொற்றன் இயற்றுதற்கர்த்தா வேதுவாயும் மாடு அவ்வேதுவாற் செயப்படுபொருளாயும் நின்றமைகாண்க.

---

## II. THE PASSIVE FORM.

## தம்மினாகிய தொழில்முடிபு.

---

91. பயனிலை செயப்பாட்டுவினையால் முடிவதே தம்மினாகிய தொழின்முடிபாம்.

---

## OF TWO KINDS.

## தம்மினாகிய தொழில் முடிபுவகை.

---

92. தம்மினாகிய தொழின்முடிபானது இயற்றுக்கர்த்தாப்

படுவினைப்பயனிலை முடிபென்றும், இயற்றுங்கர்த்தாப்படுவினைப் பயனிலை முடிபென்றும் இருவகையாம்.

---

## 1. WHERE THE SUBJECT ONLY SUFFERS.
## இயற்றுக்கர்த்தாப் படுவினைப்பயனிலை முடிபு.

---

93. இயற்றுக்கர்த்தா எழுவாயாகநிற்க ஏதுவாற் செய்வினையாகிய செயப்படுபொருள் குன்றாத தன்வினைமேலும் செயப்படுபொருள் குன்றாப்பிறவினைமேலும் வந்த செயப்பாட்டுவினையைப் பயனிலையாகப்பெறின், அது இயற்றுக்கர்த்தாப் படுவினைப்பயனிலை முடிபாம்.

உ—ம்.

*மாடு சாத்தனால் அடிக்கப்பட்டது.*

*மாடு சாத்தனால் கொற்றனைக்கொண்டு அடிப்பிக்கப்பட்டது.*

*ஏதுவாற் செய்வினையென்பதும் தம்மினாகியதொழிலென்பதுமொக்கும். இங்கே அடிக்கப்பட்டது செயப்படுபொருள் குன்றாத தன்வினைமேல் வந்த செயப்பாட்டுவினையென்றும், அடிப்பிக்கப்பட்டது செயப்படுபொருள் குன்றாப்பிறவினைமேல் வந்த செயப்பாட்டு வினையென்றுங்காண்க. மாடு யாதொன்றும் இயற்றாததினாலே இயற்றுக்கர்த்தா எழுவாயென்னப்பட்டது.*

---

## 2. WHERE THE SUBJECT DOES SUFFER.
## இயற்றுங்கர்த்தாப் படுவினைப்பயனிலை முடிபு.

---

94. இயற்றுங்கர்த்தா எழுவாயாக நிற்க ஏதுவாற் செய்வினையாகிய செயப்படுபொருள் குன்றிய தன்வினை வழிப்பிறவினைமேல் வந்த செயப்பாட்டுவினையைப் பயனிலையாகப்பெறின், அது இயற்றுங்கர்த்தாப் படுவினைப்பயனிலை முடிபாம்.

உ—ம்.

*மாடு சாத்தனால் நடத்தப்பட்டது.*

*மாடு சாத்தனால் கொற்றனைக்கொண்டு நடத்துவிக்கப்பட்டது.*

*இங்கே மாடு நடக்கிறதினால் இயற்றுங் கர்த்தா எழுவாயென்னப்பட்டது.*

---

## ANY CASE MAY BE USED AS THE SUBJECT SOMETIMES.

## துணைநிலை எழுவாய்ப் பிரயோகம்.

95. வாக்கியங்களுக்கு எழுவாயாக இரண்டாம் வேற்றுமை முதலியவேற்றுமைகளைப் பிரயோகிப்பது துணைநிலை எழுவாய்ப் பிரயோகம்.

உ—ம்.

வயிற்றைப் பசிக்கிறது = வயிறு பசிக்கிறது.
கண்ணைச் செருகுகிறது = கண் செருகுகிறது.
தொண்டையைப் புகைகிறது = தொண்டை புகைகிறது.
என்னையறியாமற் போனான் = நானறியாமற் போனான்.
(2-ம் வேற்றுமை எழுவாய்.)

என்னால் / எனக்கு } போகக் கூடும் = நான் போகக் கூடும்.
என்னால் / எனக்கு } இதைச் செய்யக்கூடும் = நானிதைச் செய்யக்கூடும்.
(3-ம் 4-ம் வேற்றுமை எழுவாய்).

எனது வருதல் கூடாது = நான் வருதல் கூடாது.
(6-ம் வேற்றுமை எழுவாய்.)

ஐயா வந்தார் = ஐயன் வந்தார்.
(8-ம் வேற்றுமை எழுவாய்).

என்னையறியாமல் என்பது தனிவாக்கியத்தில் வராமல் ஒன்றித்தொடர் அப்பிரதானத்தில் வந்ததெனக்கொள்க. இப்படி வருபவற்றை உருபு மயக்கமெனக்கொள்ளலாகாது. தமக்கென உருபுடைய வேற்றுமைகளின் உருபுகள் ஒன்று நிற்கவேண்டியவிடத்து மற்றொன்று வருவதே உருபு மயக்கம்.

## EXPRESSING A POSITIVE BY NEGATIVE.

## மறைமுக விதிப்பிரயோகம்.

96. எழுவாய்க்கு விதிமுகத்தில் வரும் பயனிலையை எதிர்

மறை முகத்தால் அவ்விதிமுகமாகப் பிரயோகிப்பது மறைமுக விதிப்பிரயோகமாம்.

உ—ம்.

சாத்தன் செய்யாதிரான்=சாத்தன் செய்வான்.

இங்கே மறையென்றது தொடர்மொழியில் வரும் ஈரெதிர் மறைகளாம். ஆதலால் அவ்வெதிர் மறைகள் ஒன்றையொன்று மறுத்து ஈரெதிர் மறை ஓர் விதிநிலையாக வந்ததென்க.

---

## THE PARTS OF A SENTENCE MAY BE CHANGED WITHOUT CHANGING THE MEANING.

## அங்கமாற்றுப் பிரயோகம்.

---

97. சில வாக்கியங்களிலுள்ள அங்கங்களில் ஓரங்கத்தை மற்றோரங்கமாக மாற்றியும் கருத்து மாறாமலிருப்பது அங்கமாற்றுப் பிரயோகமென்னப்படும். அங்கமாற்றுதல் என்பது உருபு மாற்றுதலாம்.

உ—ம்.

நான் அதை..............அறிவேன்.
எனக்கு அது........... தெரியும்.
சாத்தன் வீட்டை.........உடையன்.
வீடு சாத்தன்........... உடையது.
கொற்றன் பிள்ளை.........இலான்.
கொற்றனுக்குப் பிள்ளை....இல்லை.

இவ்வாக்கியங்களில் செயப்படு பொருள்களை எழுவாய்களாக மாற்றியும் கருத்து மாறாமையறிக. எனக்கு அது தெரியுமென்னாமல் எனக்கதைத்தெரியும் எனவரில், நான் அதையறிந்திருக்கிறேன், எனமேற்கூறிய துணைநிலை எழுவாய்ப் பிரயோகத்திலடங்குமென்க. அவ்வெழுவாய்ப் பிரயோகத்திலும், வயிற்றைப் பசிக்கிறது, கண்ணைச் செருகுகிறது என்னும் வாக்கியங்களுக்கு; முறையே பசி, வியாதி, என்பவைகளை எழுவாயாகக்கொண்டால், பசி வயிற்றைப் பசிக்கிறது, வயிறு பசியால் பசிக்கிறது, வியாதி கண்ணைச்செருகுகிறது, கண் வியாதியால் செருகுகிறது என நின்று அங்கமாற்றுப் பிரயோகத்துளடங்கவும் பெறும். எனக்கு வரக்

கூடாது என்பதற்கு வருதல் கூடாதென வைத்து எச்சத்தை எழுவாயாக மாற்றிக் கூறுவர்; அஃது பெரும்பான்மை பற்றியதும் சிறப்புமன்று. எழுவாய் வேற்றுமைக்கு மற்ற அதற்கினமான வேற்றுமைகளை மாற்றுவதே சிறப்பெனக்கொள்க.

---

## ARRANGEMENT OF THE PARTS OF A SENTENCE.

## வாக்கியாங்க நிலை.

---

98. எழுவாய் முதலிலும் பயனிலை கடையிலும் துணைநிலைப் பொருள்கள் கிரமப்படி இடையிலும் அடைமொழிகள் அந்தந்தப் பொருள்களை யடுத்து முதலிலும் வருவதே வாக்கியாங்க நிலையாம்.

உ—ம்.

பெரிய சாத்தன் சிறிய மாட்டை குறியகோலால் வரிய வடித்தான்.

---

## DIFFERENCE IN THE ARRANGEMENT.

## அந்நிலையின் பேதம்.

---

99. மேற்கூறியபடி நடப்பது முறையாயினும், எந்த அங்கங்களிலுள்ள பொருள்கள் சிறந்துவருகிறதோ அந்த அங்கங்கள் முதலில் வரப்பெறும்.

உ—ம்.

வீட்டைக் கரையான் அரித்துவிட்டது.
கொற்றனை மாடு முட்டிவிட்டது.
இம்மாட்டுக்குக் கொம்பு கூர்மையானது.
மலையினின்றும் அருவி பாய்ந்தது.
ஆகாயத்தின்கட்பருந்து பறந்தது.
இராஜாவே நீர் வாழ்க.
வந்தது வந்தது கூற்று.
ஓடிவந்து அவன் இதை யெடுத்துக்கொண்டான்.
சந்தோஷமாய்ச் சாத்தன் தன்னூருக்குப் போனான்.

வீட்டைக் கரையான் அரித்துவிட்டது என்பதில் எழுவாயங்கத்தில் நின்ற கரையானிலும், செயப்படுபொருளங்கத்தில் நின்ற வீடு சிறந்ததாகை யால் முதலில் வரப்பெற்றது. மற்றவைகளையும் இப்படியே காண்க.

---

## ELLIPSIS.

## வாக்கியாங்கத்தொகை.

---

**100.** தனியாகவுந்தொடராகவும் வரும் வாக்கியங்களிலுள்ள அங்கங்கள் சில பல தொக்கிவருவது வாக்கியாங்கத் தொகையென்னப்படும்.

---

## ELLIPSIS IN A SIMPLE SENTENCE.

## தனி வாக்கியாங்கத்தொகை.

---

**101.** தனிவாக்கியங்களிற் பொருணிலைபற்றிப் பயனிலைநிற்க எழுவாய் தொக்கியும், எழுவாய்நிற்கப் பயனிலைதொக்கியும், அடைமொழிகள் நிற்க எழுவாயும் பயனிலையுந் துணைநிலையுந் தொக்கியும் வரும்.

பொருணிலைபற்றி வருதலாவது, வினா, விடை, ஏவல், வியங்கோள், அச்சம், விரைவு முதலியவைபற்றிவருதல்: இவ்வாறு தொக்கியவிடத்தும் மீந்துநின்ற தனியங்கங்கள் சமயவாற்றலால் மற்ற அங்கங்களையுஞ் சேர்ந்தாற்போலவே நின்று பொருள்குன்றாது கருத்தைமுடிக்குமெனக்காண்க.

1-வது: பயனிலை நிற்க எழுவாய் தொக்கிவருவதற்கு

உ—ம்.

சாத்தா வருவாயா என்னும் வினாவில் வருவாயா என்னும் பயனிலை நிற்க நீ என்னும் எழுவாய் தொக்கியது.

சாத்தா போவாயா என்னும் வினாவிற்குப்போவேன் என்னும் விடையில்போவேன் என்னும் பயனிலைநிற்க நான் என்னும் எழுவாய் தொக்கியது.

நாகா.போ என்னும் ஏவலில் போவென்னும் பயனிலை நிற்க நீயென்னும் எழுவாய் தொக்கியது.

ஐயா வர என்னும் வியங்கோளில் வரவென்னும் பயனிலை நிற்க நீர் என்னும் எழுவாய் தொக்கியது.

2-வது: எழுவாய் நிற்கப் பயனிலை தொக்கிவருவதற்கு

உ—ம்.

எவன் சொன்னான் என்னும் வினவிற்குச்சர்க்குணன் என்னும் விடையில் சர்க்குணன் என்னும் எழுவாய் நிற்க, சொன்னான் என்னும் பயனிலை தொக்கியது.

பாம்புவருகிறது என்பதற்குப் பாம்பு என்னுமிடத்து அச்சத்தில் பாம்பு என்னும் எழுவாய் நிற்க, வருகிறது என்னும் பயனிலை தொக்கியது.

3-வது: துணைநிலை நிற்க எழுவாயும் பயனிலையும் தொக்கிவருவதற்கு

உ—ம்.

ராமன் யாரை அடித்தான் என்னும் வினவிற்கு சுப்பனையென்னும் விடையில் சுப்பனையென்னுஞ் செயப்படுபொருள் நிற்க, ராமன் என்னும் எழுவாயும் அடித்தான் என்னும் பயனிலையுந்தொக்கியது.

நாகா உண்பாயோ, உண்ணாயோ என்னும் வினவிற்கு உடன்படல் அல்லது மறுத்தல் கருதி, ஐயா சுவாமியென்னும் விளிப்பொருள்நிற்க, நான் என்னும் எழுவாயும் உண்பேன் அல்லது உண்ணேன் என்னும் பயனிலையுந்தொக்கியது.

4-வது: அடைமொழிகள் நிற்க எழுவாயும் பயனிலையுந் துணைநிலையுந் தொக்கிவருவதற்கு

உ—ம்.

நாகா சோறுண்பாயோவென்னும் வினவிற்கு உடன்படல் கருதி அப்படியே உத்தரவுப்படி என்னும் விடையில், அப்படியே உத்தரவுப்படி என்னும் அடைமொழிகள் நிற்க, நான் என்னும் எழுவாயும் சோறு உண்பேன் என்னும் பயனிலை துணைநிலைகளும் தொக்கியது.

இங்கே சொல்லாதொழிந்த மற்றும் பொருணிலைபற்றி வருபவற்றையும் இப்படியே காண்க. தீரன், தீரன் என்றொரு ராஜன்; அவனுக்கு மக்கள் இரண்டுபேர். எனவருதில் எழுவாய்கள் நிற்க, பொருணிலையின்றி இயல்பாய், இருந்தான் இருந்தார்கள் என்னும் பயனிலை தொக்கிவருவதும் உண்டு. சத்தம்போடாதே என்பதற்குச் சத்தம் எனவரில் அத்தொடர்மொழி முற்றுப் பயனிலையில் சத்தம் என்னும் உடன்பாடு நிற்க, போடாதே என்னும் எதிர்மறைமுற்றுத்தொக்கியதையுங் காண்க. எழுவாய் பயனிலை

கள் இவ்வாறு தொக்குமிடத்து தொகை நிலையெழுவாய் தொகைநிலைப் பய னிலையெனவுங் கூறிக்கொள்க. இவற்றைத் தோன்ரு எழுவாய், தோன் ருப்பயனிலையெனவுங் கூறுவர்.

## ELLIPSIS IN A COMPLEX SENTENCE.

## ஒன்றித்தொடர் வாக்கியாங்கத்தொகை.

102. என்று, என்ருல், ஆனல், முதலிய எச்ச இடைச்சொற் களையும் போல, ஒப்ப, எப்படி, முதலிய உவமை இடைச்சொற் களையும்பெற்றுத் தொடரும் அப்பிரதானங்களாகிய அடைமொழி முடிபெச்சவாக்கியங்களில் பயனிலையோடு தொடர்ந்துநின்ற அவ் வெச்சவிடைச்சொற்கள் எழுவாய் செயப்படுபொருள் முதலிய அங்கங்களைச் சார்ந்துவரப் பயனிலைகள் தொக்குநிற்கும்.

உ—ம். 1-வது: என்று.

சாத்தன் சொன்ஞனென்று நினைத்தேன் என்பதற்கு சாத்தனென்று நினைத்தேன் எனவருவதில், என்று என்னும் இடைச்சொல் எழுவாயைச் சார்ந்துவரப்பயனிலை தொக்கியது.

சாத்தனையடித்தானென்று சொன்ஞர்கள் என்பதற்கு சாத்தனை என்று சொன்ஞர்கள் எனவருவதில், என்று என்னுமிடைச்சொல் செயப்படுபொ ருளைச் சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

சாத்தனல் சம்பவித்ததென்று தோன்றிற்று என்பதற்கு சாத்தனல் என் று தோன்றிற்று எனவருவதில், என்று என்னுமிடைச்சொல் கருவிப்பொ ருளைச்சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

2-வது: என்ருல், ஆனல்.

நான் கொடுக்கவேண்டுமென்ருல் கொடுக்கமாட்டேன்என்பதற்கு நான் என்ருல் கொடுக்கமாட்டேன் எனவருவதில், என்ருல் என்னுமிடைச்சொல் எழுவாயைச் சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

என்னைப் பேசவேண்டுமென்ருல் பேசமாட்டான் என்பதற்கு என்னை யென்ருல் பேசமாட்டான் எனவருவதில், என்ருல் என்னுமிடைச்சொல் செயப்படுபொருளைச்சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

என்னல்வரவேண்டுமென்ருல் வருவான் என்பதற்கு என்னலென்ருல்

வருவான் எனவருவதில், என்றால் என்னுமிடைச்சொல் கருவிப்பொருளைச்சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

அவனுக்குக் கொடுக்கவேணுமென்றால் கொடுக்கிறேன் என்பதற்கு அவனுக்கென்றால் கொடுக்கிறேன் எனவருவதில், என்றால் என்னுமிடைச்சொல் கோடற்பொருளைச் சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

நான் வருவதற்கானால் சாவகாசமில்லை என்பதற்கு எனக்கானால் சாவகாசமில்லை எனவருவதில், ஆனால் என்னுமிடைச்சொல் கோடற்பொருளைச் சார்ந்துவரப் பயனிலைதொக்கியது.

நீ செய்தாயென்று சொன்னார்கள் என்பதற்கு உன்னையென்று சொன்னார்கள் என்றும், நீ செய்தாயானால் விட்டுவிடுவேன் என்பதற்கு உன்னையானால் விட்டுவிடுவேன் என்றும், நீ செய்தாய் ஆனபடியினாலே விட்டுவிட்டேன் என்பதற்கு உன்னையானபடியினாலே விட்டுவிட்டேன் என்றும், அப்பிரதானங்களின் பயனிலை தொக்கியவிடத்து, இடைச்சொற்கள் அவற்றின் எழுவாய்களைச்சார்ந்து நிற்க அவ்வெழுவாய்கள் செயப்படுபொருளாக மாறி வருவதையுங்கொள்க.

3-வது: போல, ஒப்ப, எப்படி.

சாத்தன் இருந்ததுபோல இருந்தான் என்பதற்கு சாத்தன்போல இருந்தான் எனவருவதில், போல என்னுமிடைச்சொல் எழுவாயைச் சார்ந்துவரப் பயனிலைதொக்கியது.

என்னை நடத்தினதுபோல நடத்தினான் என்பதற்கு என்னைப்போல நடத்தினான் எனவருவதில், போல என்னுமிடைச்சொல் செயப்படுபொருளைச் சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

என்னால் நடந்ததுபோல நினைத்தான் என்பதற்கு என்னாற்போல நினைத்தான் எனவருவதில், போல என்னுமிடைச்சொல் கருவிப்பொருளைச் சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

எனக்குச் செய்தாற்போலச் செய்தான் என்பதற்கு எனக்குப்போலச் செய்தான் எனவருவதில், போல என்னுமிடைச்சொல் கோடற்பொருளைச் சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

அது நடந்ததெப்படியோ அப்படி இதுவும் நடந்தது என்பதற்கு, அது எப்படியோ அப்படி இதுவும் நடந்தது எனவருவதில், எப்படி யென்னுமிடைச்சொல் எழுவாயைச் சார்ந்துவரப் பயனிலை தொக்கியது.

ஒப்பவென்னுமிடைச்சொல்லையும் இப்படியே ஒட்டிக்காண்க. குருவி கூப்பிட்டதுபோலக் கூப்பிட்டான், புலி பாய்ந்தாற்போலப் பாய்ந்தான்,

எனவருந்தொடர்கள் குருவியைப்போலக் கூப்பிட்டான், புலியைப்போலப் பாய்ந்தான் எனவருமிடத்து, அப்பிரதானங்களின் பயனிலை தொக்கி நிற்க உவமையிடைச்சொற்கள் அவற்றின் எழுவாய்களைச்சார்ந்துவர அவ்வெழுவாய்கள் செயப்படுபொருள்களாய் மாறிவருவதையுங்காண்க.

---

## ELLIPSIS IN A COMPOUND SENTENCE.
## ஒன்றுத்தொடர் வாக்கியாங்கத்தொகை.

---

103. அல்ல, அல்லது, ஆவது முதலிய புணர்நிலையிடைச்சொற்கள் இடையில்நிற்கத் தொடரும் சமநிலைத்தொடரில், அவ்விடைச்சொற்கள் முந்திய உபசிரேஷ்ட வாக்கியத்தின் எழுவாய் செயப்படு பொருள் முதலிய அங்கங்களை அடுத்துநிற்கப் பயனிலை தொகும்.

உ—ம்.

நான் செய்யவில்லை; அவன் செய்தான்: என்பதற்கு, நானல்ல அவன் செய்தான் எனவருவதில், அல்லவென்னு மிடைச்சொல் எழுவாயை அடுத்து நிற்கப் பயனிலை தொக்கியது.

என்னை யடிக்கவில்லை; அவனை யடித்தான்: என்பதற்கு, என்னையல்ல அவனை யடித்தான் எனவருவதில், அல்லவென்னும் இடைச்சொல் செயப்படு பொருளையடுத்துநிற்கப் பயனிலை தொக்கியது.

நான் போகவேண்டும்; அல்லது அவன் போகவேண்டும்: எனபதற்கு, நான் அல்லது அவன் போகவேண்டுமெனவருவதில், அல்லது என்னுமிடைச்சொல் எழுவாயை அடுத்து நிற்கப் பயனிலை தொக்கியது.

என்னையனுப்பவேண்டும்; அல்லது அவனை யனுப்பவேண்டும்: என்பதற்கு, என்னை யல்லது அவனை யனுப்பவேண்டுமென வருவதில், அல்லது என்னும் இடைச்சொல் செயப்படு பொருளையடுத்து நிற்கப் பயனிலை தொக்கியது.

மேலே—நான் செய்யவில்லை; அவன் செய்தான்: என்னுந் தொடரின் இடையில் அல்லவென்னும் பிரிநிலைப் பொருளில் வரும் புணர்நிலை இடைச்சொல், நான் செய்யவில்லையல்ல எனவரல் வேண்டுவது கிரமம்; அப்படிவரில், ஈரெதிர் மறையாகி உடம்பாட்டு முடிவாம்; ஆகையால், செய்யவில்லை என்னும் அவ்வெதிர்மறை முடிவுக்குப்பின் நில்லாமல் அப்பயனிலை தொக்கியவிடத்து எழுவாய்க்குப்பின் நின்றதெனக்காண்க.

நான் போகவேண்டும்; அல்லது அவன் போகவேண்டும். என்னுந் தொடரிலுள்ள வாக்கியங்களொவ்வொன்றின் எழுவாயோடு, ஆவது என்னும்புணர்நிலை இடைச்சொற்பொருந்தவருவதுமுண்டு. பொருந்துமிடத்து, உதாரணமாக, நானாவது போகவேண்டும் அல்லது அவனாவது போகவேண்டும் என்றும், நானாவது அல்லது அவனாவது போகவேண்டுமென்றும் வரும். இன்னும, இவைபோல வருபவற்றையெல்லாம் இப்படியே கண்டுகொள்க.

---

## ELLIPSIS IN A SENTENCE HAVING TWO OR MORE SUBJECTS, &c.

## அடுக்குத்தொடர் வாக்கியாங்கத்தொகை.

---

104. தன்மையிடத்தெழுவாயோடு முன்னிலையிடத்தெழுவாயும் படர்க்கையிடத்தெழுவாயும் கலந்தடுக்கி ஒரே கிகான தொழிலில் பயனிலைபெறவேண்டியவிடத்து, அப்பயனிலை தன்மையிடத்துப் பன்மை விகுதிபெற்று முடிய, மற்ற இடங்களின் பயனிலைகள் தொகும்.

உ—ம்.

நானும் நீயும்...........போவோம்.
நானும் நீயும் அவனும் போவோம்.

இதில், நானும் போவேன், நீயும் போவாய், அவனும் போவான், என வராமல் முன்னிலை படர்க்கையிடத்துப் பயனிலைகள் தன்மையிடத்துப் பயனிலைக்குட்பட்டுத் தொக்கிநின்றன. இப்படி முடியுமிடத்துப் பயனிலை உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பயனிலையெனப்படும்.

இதுவுமது.

105. முன்னிலையிடத்து எழுவாயோடு படர்க்கையிடத்து எழுவாய் கலந்தடுக்கி ஒரே தொழிற் பயனிலை பெறுங்கால், முன்னிலையிடத்தெழுவாய் பன்மை விகுதிபெற்றுமுடிய படர்க்கையிடத்துப் பயனிலை தொகும்.

உ—ம்.

நீயும் அவனும் போனீர்கள்

இப்படி முடியும் பயனிலையை உளப்பாட்டு முன்னிலைப் பன்மைப் பயனிலையெனத்தகும்.

இதுவுமது.

106. பல எழுவாய்க்கு ஒரே தொழிலில் வரும் சில பயனிலை முடிவில் செயப்படுபொருள் முதலிய துணைநிலைகள் தனித்தனி பல வடுக்கவேண்டில், துணைநிலை வேற்றுமையுருபுகள், ஒருவர் ஒருவர், ஒன்றுஒன்று, என்னும் ஈரடுக்குத்தொடர்ப் பெயர்களில், முன்னின்றபெயர்களில் ஏறிப் பின்னின்ற பெயர்களுக்கும் மாற்றுப்பொருள்தந்துநிற்க, அப்பல துணைநிலைப்பொருள்களும் அவ்வீரடுக்குப் பெயர்களுள் தொகுத்துவரும்.

உ—ம்.

சாத்தனும் கொற்றனும் பூதனும் ஒருவரையொருவர் பகைத்தார்கள்.
நாயும் பூனையும் நரியும் ஒன்றேடொன்று சண்டையிட்டன.

ஒருவரை ஒருவரொன்னுமிடத்து, இவன் அவனை, அவன் இவனை என்னும் பொருள்பட வருதலால் இரண்டும் செயப்படுபொருளெனவும், ஒன்றேடொன்று என்னுமிடத்து இது அதனேடு, அது இதனேடு என்னும் பொருள்பட வருதலால் இரண்டும் உடனிகழ்ச்சிப் பொருளெனவும் கொள்க. மாற்றுப்பொருள் தருதலெவ்வாறெனில், ஒருவர் ஒருவரை ஒன்று ஒன்றேடு என வேற்றுமையுருபுகள் பின்னின்ற பெயர்களில் ஏறி வருதலாம்.

சாத்தன் கொற்றனையும் பூதனையும், கொற்றன் சாத்தனையும் பூதனையும், பூதன் சாத்தனையும் கொற்றனையும் பகைத்தார்கள். நாய் பூனையோடும் நரியோடும், பூனை நாயோடும் நரியோடும், நரி நாயோடும் பூனையோடும் சண்டையிட்டனவெனப்பலதரம் வராமல், அவ்வீரடுக்குத்தொடர்ப்பெயர்ப்பொருளுள் தொகுத்துவந்தமை காண்க.

அவர்கள் ஒருவரையொருவர் பகைத்தார்கள் எனவரும் வாக்கியத்தில், எழுவாய் பலவில்லாமல், பன்மையாய்மாத்திரம் நிற்கின்றமையால் ஒருவரையொருவர் என்னும் ஈரடுக்கு உருபு மாற்றுத்தொடர்மொழிகள் ஒருமொழிபோற்கொண்டு பொருள்கொள்ளப்படும்.

இதுவுமது.

107. ஒரெழுவாய்க்கு வரும் சிலதொழில் முடிபில், துணைநிலைகள் தனித்தனி பல வடுக்கவேண்டில் அத்துணைநிலையுருபுகள் எல்லாம் என்னும் பொருள்பட வரும் ஒவ்வொருவரும் ஒவ்வொன்

றும் என்னும் ஈரடுக்குத்தொடர்ப்பெயர்களினிறுதியில் நிற்க, அப்பல பொருள்களும் அவற்றுள் தொகுத்துவரும்.

உ—ம்.

சாத்தன் ஒவ்வொருவரையும் பகைத்தான்.
கொற்றன் ஒவ்வொருவருக்குங்கொடுத்தான்.
பூதன் ஒவ்வொன்றையுங்கெடுத்தான்.

ஒவ்வொருவரும் வந்தார்கள் என எழுவாயிடத்தும் பல தொகுத்துவரும். இனி ஊருக்குப்போனான், ஊருக்கூர்போனான்,ஊர்தோறும் போனான், நாளுக்குநாள் தேய்ந்தது, ஒன்றுலொன்று குறைச்சலில்லை, என்பவைகளும் இவ்வகைப்பட்டவைகளே. தோறும் எனப் பன்மைப்பொருளுணர்த்திடைச்சொல், ஊர்தோறும், நாடோறும் என இடங்காலங்களைப்பற்றிய பன்மைப்பொருள்களையே முக்கியமாய் உணர்த்தும்.

---

## IMPERFECT FORMS MUST BE FOLLOWED BY THEIR APPROPRIATE SUPPLEMENTARY SENTENCES.

## வாக்கிய எச்சங்கள்.

108. வாக்கிய எச்சங்களானவை உம்மையெச்சம், பிரிநிலையெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறை யெச்சம், இசையெச்சம், இனமொழியெச்சம், குறிப்பெச்சம் என ஏழுவகைப்படும்.

உ—ம்.

1. சாத்தனும் வந்தானென்னுமிடத்துக் கொற்றனும் வருவான் என (வருவது உம்மெச்சம்.
2. சாத்தனே கொண்டான் என்னுமிடத்துப் பிறர்கொண்டிலர் என (வருவது பிரிநிலை யெச்சம்.
3. கொள்ளவோ வந்தான் என்னுமிடத்து கொண்டு பிழைக்க வந் (திலன் எனவருவது ஒழியிசை யெச்சம்.
4. யானோ செய்தேன் என்னுமிடத்து யான் செய்திலன் எனவரு (வது எதிர்மறை யெச்சம்.
5. மலர்மிசை யேகினான் என்னுமிடத்து அன்பரொவரோ அவரது (நெஞ்சமாகிய தாமரை மிசை எனவருவது இசையெச்சம்.
6. நஞ்சுண்டவன் சாவான் எனவருமிடத்து நஞ்சுண்டவள் சாவாள் (நஞ்சுண்டது சாம் எனவருவது இனமொழி யெச்சம்.

7. உண்ணும்போது கல்லைக் கடித்தவன் நன்றாய்ச் சமைத்தாய் என்னுமிடத்து தீங்காய்ச் சமைத்தாயெனவருவது குறிப்பெச்சம்.

இவ்வெச்சங்கள் யாவும் வாக்கியங்களாய் நிற்கின்றமையால், வாக்கியவெச்சங்களென்னப்பட்டன. இனி, வந்த மனிதன் எனவருமிடத்து மனிதன் எனவரும் பெயரெச்சங்கொள்ளுஞ்சொல்லும், சொல்லத்துவக்கினான் எனவருமிடத்து துவக்கினான் எனவரும் வினையெச்சங்கொள்ளுஞ்சொல்லும் இல்லென்றல் என்பதற்கு இல்லையென்று சொல்லுதல் எனவருமிடத்து சொல் எனவரும் சொல்லெச்சமும், ஒல் ஒலித்தது என்பதற்கு ஒல்லென ஒலித்தது எனவருமிடத்து எனவென்றுவரும் எனவெச்சமும், தனிமொழியெச்சங்களெனப்படும். இவ்விருவகை யெச்சங்களும் வேறு தொக்கு நின்று வந்தியைவனவெனக் கொள்க.

---

## THE GOVERNING OR SUPPLEMENTARY PARTS OF A SENTENCE.

## வாக்கியாங்கத் தொடர் முடிபு.

---

109. வாக்கியங்களில் தனிநிலையங்கங்களாகவேனும், அடுக்கு நிலையங்கங்களாக வேனும், நின்ற சொற்கள் தமக்கியைந்த சொற்களை ஏற்றிற்கொண்டுமுடிதலே வாக்கியாங்கத்தொடர் முடிபென்னப்படும்.

---

### தனிநிலையங்கம்.

### எழுவாய் பயனிலையின் தொடர் முடிபு.

---

110. எழுவாயில் நின்ற முதல் வேற்றுமை, பயனிலையில் நின்ற வினையையும் பெயரையுங் கொள்ளும். பயனிலையில் நின்ற வினையும் பெயரும் எழுவாயில் நின்ற பெயரைக்கொள்ளும்.

உ—ம்.

| | | |
|---|---|---|
| சாத்தன்... | வந்தான்......(தெரிநிலை)<br>பொன்னன் (குறிப்பு)<br>மறவன் (பெயர்) | (எழுவாய் வினையையும பெயரையுங் கொண்டது.) |

| | | |
|---|---|---|
| வந்தான்... <br> பொன்னன் <br> மறவன்... | சாத்தன்.................. | (பயனிலை பெயரைக்கொண்டது. |

## துணைநிலைப்பொருள்களின் தொடர் முடிபு.

111. எழுவாயும் பயனிலையும் நின்றவிடத்து துணைநிலைப் பொருள்கள் ஒன்றேனும் பலவேனும்வரில், அப்பொருள்களில் நின்ற வேற்றுமைகள் எழுவாய்கொண்ட வினையையும் பெயரையுமே கொள்ளும்.

உ—ம்.

| | |
|---|---|
| கொற்றன் சாத்தனை யடித்தான்.... <br> சாத்தன் வாளால் அறுத்தான்...... <br> தேவன் ஊரில் நீங்கினான்......... <br> பூதன் வீட்டில் இருந்தான்......... <br> ராமன் எனக்கு மாமன்............. <br> இது என்னுடைய வீடு............ | (துணைநிலைப்பொருள்கள் தனித் தனிவந்து எழுவாய்கொண்ட வினையையும் பெயரையுங் கொண்டன.) |
| சாத்தன் மாட்டைக் கம்பால் அடித் தான்............................ <br> கொற்றன் தண்ணீரைச் குடத்திலி ருந்து மாட்டுக்கு வார்த்தான்.... | (துணைநிலைப்பொருள்கள் பலவந்து எழுவாய்கொண்ட வினையைக் கொண்டன.) |

## அடைமொழிப் பெயரெச்சத் தொடர் முடிபு.

112. அடைமொழிகளாகவரும் பெயரெச்சங்கள் தம்மெச் சங்களாகிய செய்வதாதி யறுவகைப்பெயருள் ஒன்றைக்கொள்ளும்

உ—ம்.

| | |
|---|---|
| உண்ட மனிதன் இவன். | (செய்பவனைக்கொண்டது.) |
| வனைந்த குடம் இது. | (செயப்படுபொருளைக் கொண்டது.) |

## அடைமொழி வினையெச்சத் தொடர் முடிபு.

113. அடைமொழிகளாகவரும் வினையெச்சங்கள் தம்மெச்

சங்களாகிய தன் கருத்தா வினையையேனும் பிறகருத்தா வினையையேனும் கொள்ளும்.

உ—ம்.

சாத்தன் உண்டுவந்தான். } (தன் கருத்தா வினையைக்கொண்டது.)

சாத்தன் உண்ணக்.......
கொற்றன் கண்டான்.... } (பிறகருத்தா வினையைக்கொண்டது.)

## அடுக்கு நிலையங்கம் எழுவாயடுக்குத் தொடர் முடிபு.

114. எழுவாய் வேற்றுமை பல வடுக்கிவரில் பயனிலையாகப் பல வினையையும் பெயரையுங் கொள்ளாமல், ஒரு வினையையும் பெயரையுமாத்திரமே கொள்ளும்.

உ—ம்.

சாத்தனும் கொற்றனும் வந்தார்கள்
ராமனும் லட்சுமணனும் தசரதன் மக்கள்.

இங்கே, சாத்தன் வந்தான் கொற்றன் வந்தான் எனவும், ராமன் தசரதன் மகன் லட்சுமணன் தசரதன் மகன் எனவும், தனித்தனி வினையையும் பெயரையுங் கொள்ளவேண்டுவது ஒருவினையையும் ஒரு பெயரையுங்கொண்டது காண்க. இப்படி ஒரு வினையையும் ஒரு பெயரையும் கொண்டு முடியினும் விகுதி பன்மையுருபேற்றுவரும். எற்பினும், வினையும் பெயரும் ஒன்றுமாத்திரமேயென்க. இனிச்சாத்தனுங் கொற்றனும் கொத்தினன் பாத்தி பிடித்தான் எனவரில், சாத்தன் கொத்தினன் கொற்றன் பாத்தி பிடித்தான் என முறையே தனித்தனி வினைகொண்டு நிரைநிரையில் வந்த சமநிலை ஒன்றுத்தொடராகவும் சாத்தனுங் கொற்றனும் கொத்தினர்கள் பாத்தி பிடித்தார்கள் எனப் பன்மை வினைகொளில் அடுக்கங்கத்தில்வந்த ஒன்றுத்தொடராகவும் கொள்க.

## பயனிலையடுக்குத் தொடர் முடிபு.

115. பயனிலை பலவடுக்கிவரில் எழுவாயாகப் பல பெயரைக் கொள்ளாமல் ஒரு பெயரைக்கொண்டு முடியும்.

உ—ம்.

படித்தான் தூங்கினான்......சாத்தன். (இயல்பு வினையடுக்கு.)
வா இரு படி. .......................நீ. (ஏவல் வினையடுக்கு.)
பெறக்கடவாய் பெருகக் கடவாய் நீ. (வியங்கோள் வினையடுக்கு.)

இங்கே, ஒவ்வொரு வினைமுற்றும் தனித்தனி எழுவாய்ப்பெயர்கொள்ளாமல் ஒரு பெயரை இறுதியில்கொண்டு முடிந்தமை காண்க.

---

## துணைநிலையடுக்குத் தொடர் முடிபு.

116. துணைநிலைப்பொருளடுக்கிவரில் பல பயனிலைகொள்ளாமல் எழுவாய்கொண்ட பயனிலை ஒன்றையே கொண்டு முடியும்.

உ—ம்.

ராமன் சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான். (வினை.)
பூதன் சாத்தனுக்குங் கொற்றனுக்கும் தந்தை. ... (பெயர்.)

---

## அடைமொழி யடுக்குத்தொடர் முடிபு.

117. அடைமொழிப் பெயரெச்சமடுக்கிவரில் தம்மெச்சங்களாகிய பல பெயரைக் கொள்ளாமல் ஒரு பெயரையும், வினையெச்சமடுக்கிவரில் தம்மெச்சங்களாகிய பல வினைகொள்ளாமல் ஒரு வினையையுங் கொண்டு முடியும்.

உ—ம்.

கற்ற கேட்ட பெரியோர் இவர்.
கற்றுக் கேட்டு வந்தான் அவன்.
(பெயரெச்சமும் வினையெச்சமும் அடுக்கி ஒரு பெயரும் ஒரு வினையுங் கொண்டது.)

மேற்கோள் (சூ.) உருபு பலவடுக்கினும் வினை வேறடுக்கினும்–ஒரு தம்மெச்ச மீறாற முடியும்.

---

## WORDS MAY BE INTERPOSED BETWEEN THE GOVERNING AND GOVERNED FORMS.

## இடைப்பிறவரல்.

118. வாக்கியாங்கங்களாகிய எழுவாய் வேற்றுமையும், பயனிலை வினையும், துணைநிலை வேற்றுமைகளும், அடைமொழிப் பெயரெச்ச வினையெச்சங்களுங் கொள்ளுஞ் சொற்களுக்கிடையே அவ்வவ்விடத்துக்குப் பொருந்துவனவாகிய சொற்கள் வருவது இடைப்பிறவரலாம்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| குயவன் | (குடத்தை) | வனைந்தான். | (எழுவாய் கொள்ளுஞ் சொற்களுக்கிடையில் பிறவரல்.) |
| கொற்றன் | (வாளால்) | வெட்டினான். | |
| பூதன்...... | (உண்டு) | வந்தான்...... | |
| உழுதான் | (காட்டை) | சாத்தன்...... | (பயனிலை கொள்ளுஞ் சொற்களுக்கிடையில் பிறவரல்) |
| உண்டான் | (வந்த) | மனிதன்...... | |
| கண்டான் | (பெரிய) | ராமன் ........ | |
| மரத்தைச் | (சாத்தன்) | வளர்த்தான்... | (துணைநிலைகொள்ளுஞ் சொற்களுக்கிடையில் பிறவரல்.) |
| அறதநை | (அரசன்) | விரும்பினான். | |
| வீட்டை | (நன்றாய்க்) | கட்டினான்.... | |
| படித்த ... | (பெரிய) | மனிதன் இவன் | (அடைமொழிப் பெயரொச்சங்கொள்ளுஞ் சொற்களுக்கிடையில் பிறவ'ரல்.) |
| அன்புள்ள | (நல்ல) | தாய் இவள். ... | |
| படுத்து.... | (அயர்ந்து) | தூங்கினான். | (அடைமொழி வினையெச்சங் கொள்ளுஞ் சொற்களுக்கிடையில் பிறவரல்.) |
| வந்து...... | (சாத்தனைக்) | கண்டான். | |

பொருந்துவனவாகிய சொற்கள் என்றதினாலே, சாத்தன் கடல் படித்தான் என இடையில் பொருந்தாச் சொல் இடைப்பிறவரலாகாது. குயவன் குடத்தை வனைந்தான் என்பதில், குயவன் குடத்தையென்பதை உருபு பல அடுக்கென்பர். அடுக்காயினும் இடைப்பிறவரலேயென்பதை "தத்தமெச்சமொடு சிவணுங் குறிப்பின்—எச்சொல்லாயினுமிடை நிலைவரையார்" என்னுந் தொல்காப்பியச் சூத்திர விதியாற் கொள்க.

மேற்கோள் (சூ.) உருபு முற்றீரொச்சங்கொள்ளும்—பெயர்வினை இடைப்பிறவரலுமாமேற்பன.

## DEPENDENT WORDS MAY ALSO FOLLOW THEIR PRINCIPALS.

## வாக்கியாங்கங்கொள்ளுஞ்சொல்.

---

119. தனிநிலையங்கங்கொள்ளுஞ் சொல்லும், அடுக்குநிலையங்கங்கொள்ளுஞ் சொல்லும், ஈற்றில் வருவதுமன்றி முதலினும் வரும்.

---

### தனிநிலையங்கங் கொள்ளுஞ் சொல் ஈற்றிலும் முதலினும் வருமென்பது.

---

120. தனிநிலையாகவரும் எழுவாய் பயனிலை துணைநிலைவேற்றுமைகள் அடைமொழி யெச்சங்கள் கொள்ளுஞ் சொற்கள் ஈற்றில் வருவதுமன்றி முதலினும்வரும்.

உ—ம்.

| | |
|---|---|
| சாத்தன்....வந்தான்.<br>வந்தான்....சாத்தன். | (எழுவாய் கொள்ளுஞ் சொல் ஈற்றிலும் முதலிலும் வந்தது.) |
| வந்தான் .. ராமன்.....<br>ராமன். . .வந்தான். | (பயனிலைகொள்ளுஞ் சொல் ஈற்றிலும் முதலிலும் வந்தது.) |
| மாட்டை யடித்தான்.<br>அடித்தான் மாட்டை. | (செய்பொருள் கொள்ளுஞ் சொல் ஈற்றிலும் முதலிலும் வந்தது.) |
| வாளால்...அறுத்தான்.<br>அறுத்தான் வாளால். | (கருவிப்பொருள் கொள்ளுஞ் சொல் ஈற்றிலும் முதலிலும் வந்தது.) |
| ஓடி.........வந்தான்.<br>வந்தான்...ஓடி........ | வினையெச்சங் கொள்ளுஞ் சொல் ஈற்றிலும் முதலிலும் வந்தது.) |

ஆறும் வேற்றுமை கொள்ளுஞ் சொல்லும் பெயரொச்சங் கொள்ளுஞ் சொல்லும் ஈற்றில் வருமேயன்றி முதலில் வராவெனக்கொள்க.

---

### அடுக்கு நிலையங்கங் கொள்ளுஞ் சொல் ஈற்றிலும் முதலிலும் வருமென்பது.

---

121. அடுக்கு நிலையாக வரும் எழுவாய் பயனிலை முதலிய

வைகள் கொள்ளுஞ் சொல் ஈற்றில் வருவதுமன்றி முதலிலும் வரும்.

உ—ம்.

சாத்தனும் கொற்றனும் வந்தார்கள். } (எழுவாயடுக்குக் கொள்ளுஞ் சொல்
வந்தார்கள் சாத்தனும் கொற்றனும். } ஈற்றிலும் முதலிலும் வந்தது.)
நின்றான் இருந்தான் சாத்தன்....... } (பயனிலையடுக்குக்கொள்ளுஞ் சொல்
சாத்தன் நின்றான் இருந்தான்....... } ஈற்றிலும் முதலிலும் வந்தது.)
காயையும் பூவையும் பறித்தான்.... } (துணை நிலையடுக்குக்கொள்ளுஞ் சொ
பறித்தான் காயையும் பூவையும்.... } ல் ஈற்றிலும் முதலிலும் வந்தது.)
உண்டு...உடுத்து...வாழ்ந்தான். ... } (வினையெச்ச வடுக்குக் கொள்ளுஞ்
வாழ்ந்தான் உண்டு...உடுத்து....... } சொல் ஈற்றிலும் முதலிலும்வந்தது.)

தவறி விழுந்தான், ஆகையால் அவனுக்குக்காயம்பட்டது; அவனுக்குக்காயம்பட்டது தவறி விழுந்தானகையால், என வாக்கியங்கள் ஈற்றில் வருவது முதலில் வருவதற்கும் மேற்சொல்லிய விதிகளேயமையும்.

---

## SEVEN GRAMMATICAL ERRORS.

## வாக்கியாங்க வழு.

---

122. வாக்கியாங்கங்களில் நின்ற திணை பால் இடங் காலம் வினு விடை மரபு என்னும் யேழும் முறைபிறழ்ந்துவருவது வழுவென்னப்படும்.

உ—ம்.

அவன் வந்தது. ... ... ... . . ... ...திணை வழு.
அவள் ..வந்தான். ... ... ... ... ... ... பால்வழு.
நான்...வந்தான். ... ... ... ... ... ... இடவழு.
நாளை...வந்தேன். ... ... . . ... ... ... காலவழு.
கறக்கின்ற எருமைபாலோ சினையோ? ... ... வினுவழு.
கடம்பூருக்கு வழியாதெனின் }
இடம்பூணி என்றுவின் கன்று. } ... ... ...விடைவழு.
பசுவின் குஞ்சு; ஆட்டுலத்தி; யானைப்பிழுக்கை. மரபுவழு.

வழுக்களை அறிந்தல்லாமல் விலக்குதல் கூடாமையால் அவைகள் இங்கே காட்டப்பட்டன. இனி, அவன் வந்தான், நீ வந்தாய், நான் வந்தேன், நாளை வருவேன், இவ்வெருமை பாலோ சினையோ, கடம்பூருக்கு

வழியாதெனின் இவ்வழி, பசுவின் கன்று, ஆட்டுப்பிழுக்கை, யானை லத்தி, எனத் திணை முதலிய வேழும் முறைபிறழாது வருவது வழாநிலை யெனக் கொள்ளப்படும். இடம்பூணி என்பது எரில் இடத்தே கட்டிய எருது. மரபு பெரியோரால் வழங்கும் பழைய முறைமை.

---

## ANOMALIES.

## வாக்கியாங்க வழுவமைதி.

---

123. வாக்கியாங்கங்களில் நின்ற திணைமுதலிய எழும் முறைபிறழ்ந்து வரினும் வழுவாகக் கொள்ளாமல் அமைத்து வழங்கப்படுவது வழுவமைதியாம்.

இவ்வழுவமைதி கூறுவதோடு சிலவிடத்துவழாநிலையெனவும் வழுவாக்காப்பெனவும் உடன்கூறப்பட்டு வரும். அவற்றுள் வழாநிலையென்பது முறைபிறழா நிலையாம். வழாநிலை கூறவேண்டியதின்றாயினும், சிலவிடங்களில் வழுவெனக் கருதக்கூடியவிடத்து அஃதின்றெனக்காட்டுதலே வழாநிலையெனவும், வழாநிலையினின்றும் வழுவக்கூடியவிடத்து அதனை வராது காத்தலே வழுவாக்காப்பெனவுங்கொள்க. இவற்றைப் பின் வருமிடங்களிற் காண்க.

---

## ANOMALY IN GENDER.

## திணைவழுவமைதி.

124. பொருளாதியாறையுந் தொடர்ந்து அஃறிணைமுடிபில் வரும் எழுவாய்த் தொடர்மொழிகள், உயர்திணை எழுவாய்க்குச் சயபந்தமான பயனிலையாகவரின், அவ்வஃறிணை முடிபு உயர்திணை முடிபைப்பெற்று நடக்கும்.

| | |
|---|---|
| நம்பி. ... பொன் பெரியன். | நம்பி.... கை பெரியன். |
| ,, ... நாடு பெரியன். ... | ,, ... குணம் பெரியன். |
| ,, ... வாழ்நாள் பெரியன். | ,, ... நடை கடியன். |

இதில் பொன் பெரிது, நாடு பெரிது எனவரும் அஃறிணை முடிபு எழுவாய்த் தொடர்மொழிகள்; நம்பியென்னும் உயர்திணை எழுவாய்க்குப் பயனிலையாய், பொன் பெரியன், நாடு பெரியன் என உயர்திணை முடிபாகி, வழுவாயினும் அமைக்கப்பட்டு, வழுவமைதியாயினவென்க.

இனி பொன் பெரியன் என்பதை, பொன்னாற் பெரியன் பொன்னிற் பெரியன் என விரித்தலால், வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்மொழிப் பயனிலையெனக்கொள்வது பொருந்தாதோவெனில், பொற் பெரியன் என்னும் வேற்றுமைப்புணர்ச்சிக்குரிய எழுத்துச் சந்தியில்லாததினாலே, பொருந்தாதென்க. அஃதன்றி, மாடு கோடுகூரிது, கிணறு நீரூறிற்று, ஊருணி நீர்நிறைந்தற்று என வருவதில், மாடு கிணறு ஊருணி என்னும் அஃறிணை எழுவாய்கள், கோடுகூரிது நீரூறிற்று நீர்நிறைந்தற்று எனவரும் அஃறிணை முடிபு எழுவாய்த்தொடர்மொழிகளைப்பயனிலையாகப்பெற்று வருவது வழாநிலையாமெனக்கொள்க.

---

## ANOMALY: HIGH AND LOW CLASS NOUNS HAVE A COMMON VERB.

## திணைபால் மரபு வழுவமைதி.

---

125. அடுக்குத்தொடர் வாக்கியங்களில், திணையும் பாலும் வேறுவினைப் பல பொருள்களுங் கலந்துநின்றனவாயின் அவை சிறப்பு இழிவு மிகுதியென்னுங் காரணங்களால் ஒரு முடிபையுடையன வாம்.

உ—ம்.

திங்களுஞ் சான்றோரு மொப்பர்
ஆமையும் பெரியரும் ஐந்தடக்கி நிற்பர்.

(திணைவிரவிச் சிறப்பினால் அஃறிணை உயர்திணை முடிபேற்றது.)

மூர்க்கரு முதலையுங் கொண்டது விடா.

(திணைவிரவி இழிவினால் உயர்திணை அஃறிணை முடிபேற்றது.)

மனைவியுந் தானும் வந்தான்.

(பால்விரவிச்சிறப்பினால் பெண்பால் ஆண்பால் முடிபேற்றது.)

கரிகளும் பரிகளும் தேர்களும் காலாட்களும் வந்தன.

(திணைவிரவி மிகுதியினால் உயர்திணை அஃறிணை முடிபேற்றது.)

பரிகளும் கரிகளும் படைத்தலைவரும்
போர்வீரர்களும் ராஜாவும் வந்தார்கள்.

(திணைவிரவி மிகுதியினால் அஃறிணை உயர்திணை முடிபெற்றது.)

மாலையுமுடியுங் கவித்தான்

(வேறு வினைப்பலபொருள் விரவி, சிறப்பினால் மாலையானது கவித்தலென்னு முடிக்குரிய வினையைப்பெற்றது.)

---

## ANOMALY: GENDER AND NUMBER CONFOUNDED FROM JOY AND OTHER CAUSES.

## திணைபால் வழுவமைதி.

---

126. வாக்கியாங்கங்களில் உவப்பினாலும் உயர்வினாலும் சிறப்பினாலும் கோபத்தினாலும் இழிவினாலும பாலுந் திணையும் வழுவிவருமாயினும், அவை வழுவமைதியாம்.

உ—ம்.

| | |
|---|---|
| மகனை, என்னம்மை வந்தாள் என்பது; | (உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.) |
| ஒருவனை, அவர் வந்தார் என்பது; | (உயர்வினால் ஆண்பால் பலர்பாலாயிற்று.) |
| தாதா மூவேழுலகுக்குந் தாயேஎன்பது; | (சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.) |
| எனைத்துணையராயினும் என்னாந் தினைதுணையுந் தேரான் பிறனில் புகல் என்பது; | (கோபத்தினால் பலர்பால் ஆண்பாலாயிற்று.) |
| வீரத்தன்மையிலானைநோக்கி, இவன் பெண் என்பது; | (இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.) |
| ஓர் பசுவை, என்னம்மை வந்தாள் என்பது; | (உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.) |
| புலியார் சொன்னார் என்பது; | (உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.) |
| தம்பொருளென்ப தம்மக்கள் என்பது; | (சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.) |
| ஒருவனை, கழுதை நாயே என்பது; | (கோபத்தினால் உயர்திணை அஃறிணையாயிற்று.) |
| நீட்டோலைவாசியா நின்றான் குறிப்பறியமாட்டாதவனே மரம் என்பதும், மனிதன் சடவன் கையின் கழிமண் | (இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று.) |

மகளே அப்பன் வந்தான் எனவும், மகனே அம்மை வந்தாளெனவும் சொல்வது மரபு வழுவமைதியாம்.

## ANOMALY: NUMBER AND PERSONS INTERCHANGED.
## பாலிடம் வழுவமைதி.

127. வாக்கியங்களில் ஒருமையிற்பன்மைச்சொல்லைச்சேர்த்தும், பன்மையில் ஒருமைச்சொல்லைச்சேர்த்தும், ஓரிடத்தில் பிறவிடச்சொல்லைச்சேர்த்தும் கூறலாம்.

உ—ம்.

அவன் இக்கிணற்று நீரெல்லாம் இறைத்தான். (ஒருமையிற் பன்மை.)
இரண்டு கண்ணுஞ் சிவந்தது............. ........ (பன்மையிலொருமை.)
சாத்தன் தாய் இவை செய்வேனோ.................. (தன்மையிற்படர்க்கை.)
நீயோ அவனோ யார் இது செய்தார்?......... (விரவி ஓரிடத்தில் பிறவிடம்.)

## IN QUESTIONS, WORDS OF COMMON GENDER &c, TO BE USED.
## திணைபால் வழுவாது காத்தல்.

128. வினாவாக்கியங்களில், திணைபற்றிவரும் ஐயத்திணை அத்திணைகளுக்குப் பொதுவாகிய சொல்லினாலும்; பால்பற்றிவரும் ஐயத்தினை அப்பால்களுக்குப் பொதுவாகிய சொல்லினாலுங்கூறுவர்.

உ—ம்.

குற்றியோ மனுடனோ அங்கு தோன்றுகிற உரு.
ஆண்மகனோ பெண்மகளோ அங்கு தோன்றுகிறவர்.
ஒன்றோ பலவோ அங்குவந்த குதிரை.

உரு என்பது குற்றிக்கும் மனுடனுக்கும் பொதுச்சொல்லாகவும்; தோன்றுகிறவர் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுச்சொல்லாகவும்; குதிரை என்பது, ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுச் சொல்லாகவும் வந்தமைகாண்க.

## ANOMALY: THE PRESENT EXPRESSES ANYTHING SUBSISTING IN THE THREE TENSES.

## கால வழுவமைதி.

129. முக்காலத்திலுஞ் செயல் இடைவிடாமல் ஒரேவிதமாய் நடக்கின்ற பொருள்கள், நிகழ்காலத்தாற் கூறப்படும்.

உ—ம்.

அவனியைத் தாங்கி அரசிருக்கின்றார்கள்'
தெய்வம் இருக்கிறது.

தீச்சுடும், தண்ணீர் குளிரும், குருவி பறக்கும், நாய் குரைக்குமென வருங்காலத்தாலுங்கூறுவர்.

---

## INTERGHANCE OF TENSES.

## இதுவுமது.

130. வாக்கியாங்கங்களில் நின்ற காலங்கள், விரைவினுந் தெளிவினும் இயல்பினும், மூன்றுகாலங்களும் ஏற்குமிடத்தில், ஒருகால மற்றொரு காலமாகச் சொல்லப் பெறும்.

உ—ம்.

| | |
|---|---|
| ஒருவன் வருவதற்கு முன் வந்துவிட்டேன் என்பதில், | (விரைவினால் எதிர்காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.) |
| எறும்பு முட்டைகொண்டு திட்டையேறினால் மழைபெய்தது என்பதில், | (தெளிவினால் எதிர்காலத்துக்கு இறந்த காலம் வந்தது.) |
| முன் அவன் இங்கே வருவான் என்பதில், | (இயல்பினால் இறந்தகாலத்துக்கு எதிர்காலம் வந்தது.) |

மேலும் இவ்வீட்டிலிருந்தால் மோசம்போனாய் என்று ஈறுதியினால் எதிர்காலத்துக்கு இறந்த காலம் வந்தது.

## SIX DIFFERENT KINDS OF QUESTIONS.

## வினாவழாநிலை.

131. வினாவாக்கியங்களில் அறிவினா, அறியாவினா, ஐயுறல் வினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினாவெனவரும் ஆறு வகை வினாக்களும் வழாநிலையாகக் கொள்ளப்படும்.

உ—ம்.

| | |
|---|---|
| இச்சூத்திரத்துக்குப் பொருள்யாது? | (இது ஆசிரியன் மாணாக்கனை நோக்கிக் கேட்பதால், அறிவினா.) |
| அவ்வூருக்குப்போகும் வழியாது? | (இது அறியாமல் வினாவுதலால், அறியாவினா.) |
| குற்றியோ, மனுடனோ? | (இது சந்தேகத்தில் வினாவுதலால், ஐயுறல் வினா.) |
| எள்ளுண்டோ, நெல்லுண்டோ? | (இதுகொள்ளுதல் பொருட்டு வினாவுதலால், கொளல்வினா.) |
| உனக்கு வஸ்திரமில்லையா? | (இது கொடுத்தற்பொருட்டு வினாவுதலால், கொடை வினா.) |
| சாத்தா உண்டாயா? | (இது உண்ணென்னும் ஏவுதற்பொருட்டாதலால், ஏவல் வினா.) |

## DIFFERENT MODES OF ANSWERING.

## விடைவழாநிலையும் வழுவமைதியும்.

132. வினாவுக்கு விடையாக வரும் வாக்கியங்களில், சுட்டு விடை, மறைவிடை, நேர்விடை, ஏவல் விடை, வினாதல்விடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடையென எட்டு வகைப்பொருளையுடையனவாய் வரும்.

(1) கருவூருக்கு வழியாதெனின் ... இது என்பது சுட்டுவிடை.
(2) கொற்றா உண்பாயோவெனின்... உண்ணேன் என்பது மறைவிடை.
(3) ...................................... உண்பேன் என்பது நேர்விடை.
(4) ...................................... நீ உண் என்பது ஏவல் விடை.

(5) ...... ............................... உண்பேனோ என்பது வினவுதல் (விடை.

(6) ... ............................... வயிறு குத்துகிறது என்பது உற்ற (துரைத்தல் விடை.

(7) ......... ............ .......... வயிறு வலிக்கும் என்பது உறுவது (கூறல் விடை.

(8) .................................. அதை உண்பேன் என்பது இன (மொழி விடை.

இவ்வெட்டு வகை விடையுள் முதல் மூன்றும் வெளிப்படைவிடை; அவை செவ்வனிறையென்றுங் கூறப்படும். செவ்வனிறையென்பதற்கு, நேரான விடையென்றருத்தம். மற்றை ஐந்தும் குறிப்பாக விடைப் பொருளைத் தருதலால், குறிப்பு விடைகளாம். வெளிப்படை விடையை வழாநிலையாகவும், குறிப்பு விடையை வழுவமைதியாகவுங் கொள்ளத்தகும். இனிச் சொல்லால் நேர்தல், சொற்றொகுத்திறுத்தல், சொல்லாதிறுத்தல் எனச்சில விடைகளும் வரும். அவை வருமாறு:—நாகா உண்பாயோ வெனின், பசிக்கிறது பொழுதும் போயிற்று என விடைகூறி உண்பேன் என்னும் நேர்விடைப் பொருள் தோன்றவருவது சொல்லால் நேர்தல்.

பயறுளதோவெனின், உழுந்துந்துவரையுமல்லதில்லையென விடை கூறி, வினவுளர்ச்சிக்கிடமின்றிச்சொற்களைத்திரட்டிக் கூறுவது, சொற்றொகுத்திறுத்தல். சாத்தா உண்பாயோவெனின், பேசாதிருந்து உடம்படலால், விடைப்பொருள் தோன்றச்செய்வது சொல்லாதிறுத்தல். இவற்றுள் சொல்லால் நேர்தலும் சொற்றொகுத்திறுத்தலும் தொடர் வாக்கிய விடைகளாய் வந்தன. இவை யாவும் குறிப்பு விடைகளாகி வழுவமைதியாக நிற்குமெனக் காண்க.

இறுத்தல்=விடைகொடுத்தல்.

---

## ABOUT THE POSITION OF THE DEMONSTRATIVE PRONOUNS WITH REGARD TO OTHER WORDS.

## சுட்டைப்பற்றிய மரபு வழுவமைதியும் வழாநிலையும்.

---

133. வழக்கிடத்துவரும் இணைநிலைத் தொடர் வாக்கியத்துள்,

பெயர்ப்பொருளைச் சுட்டிவருஞ் சுட்டானது, அப்பொருளுக்குப்பின்வரும். செய்யுளிடத்தென்றால் ஏற்குமிடம்பற்றிப்பின் வருவதன்றி முன்னும் வரப்பெறும்.

உ—ம்

நம்பிவந்தான், அவனுக்குச்சோறிடுக.
மாடு வந்தது, அதற்குப்புல்லிடுக.
வந்தான் நம்பி, அவனுக்குச்சோறிடுக.

(இவற்றுள் நம்பி, மாடு என்னும்பெயர்ப்பொருளைப் பின்னே நின்று சுட்டிவந்தது.)

அவன் அணங்கு நோய்செய்தான் ஆயிழாய்வேலன், விறன்மிகுதார்ச் சேந்தன் பேர் வாழ்த்தி.

(இதில் சேந்தன் என்னும் பெயர்ப்பொருளை முன்னே நின்று சுட்டி வந்தது.)

சேந்தன் அணங்கு நோய் செய்தான்; அவன் பேர் வாழ்த்தியெனப் பின்னே நின்று சுட்டவேண்டியது, முன்னே நின்று சுட்டியதென்க.—இவ்வுதாரணங்களுள் பின்வருதல் வழாநிலையும், முன் வருதல் வழுவமைதியுமாம்.

அவன் வந்தான், நம்பிக்குச் சோறிடுகவென வழக்கிடத்துச் சுட்டுப்பெயரை முன் வைத்துக் கூறின், அது ஒரு பொருண்மேல் இருபெயர்வந்ததாகாமல், அவன் வேறு, நம்பிவேறாய் முடிதலின் வழுவேயாமென்க. இனிச் சாத்தன் வந்தான், அது நம்மரசனுக்கு உவப்பாயிறறு; தந்தை வந்தான் அதனைமைந்தன் அறிந்தான் எனவரும் இணைநிலைத் தொடருள், வாக்கியப்பொருளைச் சுட்டிவருமிடத்தும் இவ்வாறே கொள்க.

---

## DIFFERENT MODES OF EXPRESSING CAUSE AND EFFECT.

## காரண காரிய வழூவாக் காப்பும் வழூவமைதியும்.

---

134. காரணத்தால் தன் குணம் வேறுபட்ட செயற்கைப் பொருளைப்பற்றிக்கூறும் ஏதுகாரியத்தொடர்வாக்கியத்துள் காரணவாக்கியமுன்வர, காரியவாக்கியம் ஆக்கச்சொற்பயனிலைபெற்றும்

பெறுமலும்வரும். காரணவாக்கியந்தொக்கிநிற்க, காரியவாக்கியம் ஆக்கச்சொற் பயனிலை பெற்றும் பெறுமலும் வரும்.

உ—ம்.

| | |
|---|---|
| எருப்பெய்து இளங்களை பிடுங்கி நீர்கட்டவிட்டமையால், பயிர் நன்றாயின......................<br>பயிர் நல்லன...................... | (இவை காரண வாக்கியமுன்வர, காரிய வாக்கியம் ஆக்கச்சொற் பயனிலை பெற்றும் பெறுமலும் வந்தது.) |
| பயிர் நல்ல வாயின..............<br>பயிர் நல்லன...................... | (இவை காரண வாக்கியந் தொக்கிநிற்க, காரிய வாக்கியம் ஆக்கச்சொற் பயனிலை பெற்றும் பெறுமலும் வந்தன.) |

இவற்றுள் காரணவாக்கியமுன்வர, காரியவாக்கியம் ஆக்கச்சொற் பயனிலைபெற்றுவருவது ஒன்றும் வழுவாக் காத்தலும். மற்றவை வழுவமைதியுமாம்.

இனி பால் வெளிது, பயிர் பசியது, மயிர்கரிது எனக்காரணத்தால் தன் குணம் வேறுபடாத இயற்கைப்பொருளை,அதன் தன்மை கூறுமிடத்து ஏதுவும் ஆக்கச்சொற் பயனிலையுமின்றி, குறிப்புவினைமுற்றாற்செயற்படுத்திக்கூறுதலும் வழுவமைதியேயாமெனக் கொள்க.

---

## A NOUN OF DIFFERENT SHADES OF MEANINGS SHOULD HAVE A VERB THAT MAY AGREE WITH ALL.

## மரபு வழாநிலை.

---

135. வாக்கியங்களில் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்கள் சேர்ந்து பொதுச்சொல்லாய்நிற்குந்தனி அங்கங்களும், வெவ்வேறு வினைக்குரியபொருள்கள் பல அடுக்கிவரும் அடுக்கங்களும், அவற்றுள் ஒன்றுக்குரிய சிறப்பு வினையை வேண்டாமல், எல்லாவற்றிற்குமுரிய பொதுவினையை வேண்டும்.

உ—ம்.

| | |
|---|---|
| அணி அணிந்தார்..... | (அணி என்பது கட்டுவன கவிப்பனவற்றிற்குப் பொதுவாதலால், அப்பொதுச்சொல் நின்று அணிந்தார் என்னும் பொதுவினைகொண்டது.) |

| | |
|---|---|
| வாத்தியம் இயம்பினர். | (வாத்தியம் கொட்டுவன ஊதுவனவற்றிற்குப்பொதுவதால், அப்பொதுச்சொல் நின்று இயம்பினர் என்னும் பொதுவினை கொண்டது.) |
| வாளும் வேலும் வழங்கப்பட்டன; பாலும் சோறும் நீரும் புசித்தார்; குழையும் அணைநாணும் அணிந்தார். | (வேறு வேறு வினைகளுக்குரியபொருள்கள் அடுக்கி, ஒரு பொது வினைகொண்டன.) |

இங்கேகூறிய வேறு வினைப் பலபொருள் அடுக்கி ஒருவினை கொள்ளுதல், சிறப்பு இழிவு கருதிவராமல், ஒத்தநிலையில் அடுக்கி ஒருவினை கொள்ளு மரபு கூறுதலால், முந்திய (125) விதியோடு மாறுபடாதென்க.

---

## WORDS IN APPOSITION MAY HAVE A COMMON VERB OR EACH ITS OWN.

### மரபு வழாநிலையும் வழுவமைதியும்

---

136. வாக்கியாங்கங்களில் ஒரு பொருள்மேல் பல பெயர் வந்து அடுக்கி, இறுதியில் ஒரு வினைகொண்டு முடிவதும், சிலவிடத்துத் தனித்தனி வினைகொண்டு முடிவதும் உண்டு. அப்படி முடியுமிடத்து தொடர் வாக்கியமாகக் கொள்ளாமல், ஒரு பொருள்மேல் முடிவுபெற்ற தனிவாக்கியமாகவே கொள்ளப்படும்.

உ—ம்

| | |
|---|---|
| கல்வியிற் பெரியோர், புலவர் பெருமானர், கவிச்சக்கரவர்த்தியார், கம்பர் வந்தார். | (ஒருவினைகொண்டு முடிந்தன.) |
| கல்வியிற் பெரியோர் வந்தார்; புலவர் பெருமானர் வந்தார்; கவிச்சக்கரவர்த்தியார் கம்பர் வந்தார். | (தனித்தனி வினைகொண்டு முடிந்தன.) |

இங்கே கல்வியிற் பெருமையும், புலவரில் மேன்மையும், கவிக்கரசத்தன்மையும் உடையவர் கம்பராதலால், ஒரு பொருள்மேல் பலபெயர் வந்தனவென்க. இஃது தெளிவாய்த் தோன்றுதவிடத்து,இவ்வாறுன முடிபு கூறுதல் பொருந்தாது. பெயர்தோறும் ஒரு வினைகொண்டு முடிவதும் காதல் முதலியன பற்றியவாதலால், ஒரு வினை வந்ததையே ஒக்குமென்க. ஒரு வினை முடிபு வழாநிலையும், தனித்தனி முடிபு வழுவமைதியுமாம். இனிக்கல்வியிற் பெரியோர் எழுதினர்; புலவர் பெருமானர் உரை இயற்றினர்; கவிச்

சக்கரவர்த்தியார் வாசித்தார்; கம்பர் பொருள் கூறினர்; என வேறு வினை கொடுப்பில், பொருள் வேறுபடுமாதலால், முதல் வந்தவினையே பெயர்தோறும் வரவேண்டுமெனக் கொள்க.

இன்னும் "வையைக் கிழவன் வயங்குதார் மாணகலம், தையலாய் நீயின்று நல்கினை; நல்காயேற், கூடலார்கோவோடு நீயும்படுதியே,—நாடறியக் கௌவைபொருங்கு" எனவரும் வெண்பாவில், தையலாய் வையைக் கிழவனைக் கூடினை; கூடாயேல், கூடலார் கோவோடு நீயும் பழிச்சொல்லைப் பெறுவாய் என, வேறு வேறு வினைகொண்டு முடிந்து பிரிவுள்ளதாயினும், வையை யாற்றிற்குரியவனும், கூடல் என்னும பதியிலுள்ளாருக்கு இறைவனும், ஒருவனேயெனத் தெளிவுற நிற்றலால், ஒரு பொருள்மேல் பல பெயர்வந்து பிரிவிலதாகும்; ஆயினும், அக்கூடலார் கோவெனச்சுட்டவேண்டி வருதலால், இவ்விடத்துத் தனி வாக்கியமாகக் கொள்ளாமல், தொடர் வாக்கியமாகவே கொள்ளப்படும்.

---

## WORDS REPEATED.
## வழுவாக்காப்பும் வழுவமைதியும்.

---

137. வாக்கியாங்கங்களில் அசைநிலைபற்றியும், விரைவு, கோபம், சந்தோஷம், பயம் முதலிய பொருணிலைபற்றியும், இசைநிறைபற்றியும், ஒரு சொல் இரண்டு மூன்று நான்கு வரை முறையாக வடுக்கும். அடுக்குமிடத்துத் தொடர் வாக்கியமாகக் கொள்ளாமல், தனி வாக்கியமாகவே கொள்ளப்படும்.

உ—ம்.

அன்றே அன்றே............ (அசைநிலை.)
வந்தது வந்தது கூற்று..... (விரைவு.)
விடு விடு ................. (கோபம்.)
உண்ணுக உண்ணுக.......... (சந்தோஷம்.)
பாம்பு பாம்பு . .............. (பயம்.)
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ. } (இசை நிறை.)

ஒரு சொல்லைப்பலகாற் கூறுவது வழுவாயினும், இவ்விடங்களிலாகுமென்பதினால் வழுவமைதியும், இரண்டு மூன்று நான்குக்கு மேல் அடுக்குதல் கூடாதென எல்லை கொடுத்தலால், வழுவாக்காப்பும் ஆயின.

---

## REDUPLICATED WORDS MUST NOT BE DIVIDED.

### மரபுவழா நிலை.

138. வாக்கியங்களில் இசைபற்றியும், குறிப்புப்பற்றியும், பண்பு பற்றியும் வரும் இரட்டைச்சொற்களை, அவ்விரட்டித்தலில் நின்று தனித்தொலியாச்சொல்லுகளாகக் கொள்ளப்படும்.

உ—ம்.

வயிறு....... மொடுமொடுத்தது.
அவர்கள் ... மொறுமொறுத்தார்கள்.
பொழுது ... கறுகறுத்தது.

மொடுத்தது மொடுத்தது என, ஒரு சொல் முழுவதும் இருமுறை வாராமையால் அடுக்கல்ல. இவைகளை இரட்டித்துக்கூறுதலே மரபாதலின் மரபுவழாநிலையாயிற்று.

## COMPOUND WORDS CAPABLE SOMETIMES OF TWO FOLD DIVISION AND INTERPRETATION.

### மரபுவழாக் காப்பு.

139. எழுத்தினது தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டு வரும் தொடர்மொழிகள் வாக்கியங்களில் வந்து, வாக்கியாங்கங்களும் அதன் கருத்தும் ஐயப்பட நின்றவிடத்து, குறித்த பொருள் விளங்க அத்தொடரில் நின்ற சொற்களினிறுதியும் முதலும் தோன்றும்படி இசையறுத்துக் கூறப்படும்.

உ—ம்.

இஃது—உயிர்மெய்—அன்று.
இஃது—உயிர், —— மெய்யன்று.
இஃது—உயிர்—மெய்—அன்று.=(உயிருமெய்யுமன்று.)

இது உயிர்மெய்யன்று என்னுந் தொடரை இசையறுத்துக்கூறு விடில், தனி வாக்கியத்திற்குந் தொடர் வாக்கியத்திற்கும் பொதுப்பட நின்று, வாக்கியாங்கங்களும் பொருளு மயங்குதலின் வழுவாம். ஆதலால் இசையறுத்துக் கூறுதலே மரபு என்பதாயிற்று. செம்பொன்பதின்றொடி;

ஐயமிட்டார் கெட்டார்; குறும்பரம்பு கொண்டார்; எனவருந் தொடர்களும், இத்தன்மையனவேயாம்.

---

## THE FIRST WORD OF A COMPOUND WORD, MAY BE EITHER COMMON OR PECULIAR TO THAT WORD.

## மரபு வழுவாக்காப்பும் அதன் வழுவமைதியும்.

---

140. வாக்கியங்களில் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் அடைகளடுத்து வரத்தக்க மொழிகள், இனமுள்ளனவன்றி இனமில்லனவுமாம்.

### I.

உ—ம்.

1. நெய்க்குடம். ... (பொருளடை.)
 (இனம்; பாற்குடம்.)..............
2. குளநெல். ....... (இடவடை.)
 (வயல் நெல் )............ . ......
3. கார்த்திகை விளக்கு (காலவடை.)
 (ஐப்பசி விளக்கு.).................
4. பூமரம். ............ (சினையடை.)
 (காய்மரம்.) ......................
5. செந்தாமரை. ......(குணவடை.)
 (வெண்டாமரை).............. ....
6. ஊன்றுகோல்......(தொழிலடை.)
 (தாங்குகோல்).

} இவை இனம்பற்றிவந்த அடைமொழிகள்.

### II.

1 உப்பளம் .........(பொருளடை.)
 (இனமில்லை.) .......................
2. ஊர்ச்சபை.........(இடவடை.)
3. நாளரும்பு. .........(காலவடை.)
4. இலைமரம்.......... (சினையடை.)
5, செங்காவி.......... (குணவடை.)

} இவை இனமின்றி வந்த அடைமொழிகள்.

நெய்க்குப் பால் இனமாய் நிற்றல்பற்றி நெய்க்குடம் என்பதில்,குடம் இனம்பற்றிவந்த அடைசேர்மொழியாயும்; உப்பளம் என்பதில், உப்புக்கினமாய் வருவதொன்றில்லையாதலால், அளம் இனமின்றிவந்த அடைசேர்மொழியாயும் நின்றது. மற்ற உதாரணங்கட்கு மிப்படியேகாண்க. இனமுள்ளனவற்றிற்கு அடையின்றிக்கூறின், குறித்தபொருள் விளங்காமற்

பொதுமையினிற்கும்; இனமில்லனவற்றிற்கு அடையின்றிக்கூறினும், பொருள்விளங்கி அவ்வடைப்பொருளைத்தானே தந்து நிற்கும. இவற்றுள், இனமுள்ளவற்றிற்கு அடைகொடுத்துக்கூறல் மரபு வழாநிலையும் இனமில்லனவற்றிற்கு அடைகொடுத்துக்கூறுதல் மரபுவழுவமைதியுமாம்.

---

## SUCH EPITHETS MAY SUGGEST THE OPPOSITE.

## மரபு வழுவாமற் காத்தல்.

---

141. வாக்கியங்களில்வரும் மேற்கூறிய அடைமொழிகள். இனத்தைத்தருதலேயன்றி இனமில்லாததையுந்தரும்.

உ—ம்.

அறஞ்செய்தான் சுவர்க்கம் புகுவான்.
(இதில் மறஞ்செய்தான் நரகம் புகுவான் என இனத்தைத் தந்தது.)
மேலைச்சேரிச்சேவல் துரத்திற்று.
(இதில் கீழச்சேரிச்சேவல் துரத்துண்டது என இனத்தைத் தந்ததுமன்றி, அச்சேவலுடையார்க்குவெற்றியாயிற்றென இனமில்லாததையுந்தந்தது.)

இனி, இனத்தைத் தராமல், இனமில்லாததைத் தருவனவும் உண்டு. அவை வருமாறு: பெய்முகிலனையானெனின், பெய்யாமுகிலென்னும்உவமையினத்தைத்தராமல், கைமாறு கருதாத பெருங்கொடையாளன் என்னும் இனமல்லதனைத் தந்தது.

காலையெழுந்து கருத்திற் செல்வான், கோழிகூவிற்றெனின், மற்றப் பறவைகள் கூவுகில என்னும் கருத்து அவனுக்கில்லையாதலால், இனத்தைத் தராதொழிந்து பொழுது விடிந்ததென்னும் இனமில்லாததைத் தந்தது. கோழிகூவிற்று என்பதில், கோழியென்னும் எழுவாய் வேற்றுமையை அடைமொழியாகக் கொள்ளலாமோவெனில், பொருளிடங் காலமுதலியவை பற்றி மற்ற வேற்றுமைகளை அடைமொழிகளாகக்கொள்வதுபோல, எழுவாய்வேற்றுமையும் அடைமொழியாகக் கொள்ளப்படும் தொடர்களை விசேஷண விசேஷியமெனக் கொள்ளுமுறையாலென்க.

---

## AN EQUIVOCAL WORD DETERMINED BY THE CONTEXT; IF NOT, ONE ADJUNCT MUST BE ADDED.

## மரபு வழா நிலை.

142. வாக்கியங்கங்களில்வரும் பல பொருளொருசொல் குறித்த பொருளை விளக்கும் வினை சார்பு இனம் இடம் என்பவைகளைப் பொருந்திப்பொருள் விளங்க நிற்குமாயின், அதற்கு அடைமொழி கொடாது கூறலாகும். பொருள் விளங்காதாயின், சிறப்படை கொடுத்துக் கூறப்படும்.

உ—ம்.

| | |
|---|---|
| மாப்பூத்தது.......... | (இதில் மாவென்னும் பல பொருளொரு சொல் பூத்ததென்னும் வினையால் மரமென விளங்கிற்று.) |
| மா வீழ்மலர்.............. | (இதில் மா மலரின் வீழ் சார்பால், வண்டென விளங்கிற்று) |
| காலாள் கரி மா இரதம் நாலங்கம். | (இதில் மா காலாள்முதலிய இனத்தால், குதிரை என விளங்கிற்று.) |
| மாவை மார்பிடத்துத் தாங்கிய திருமால். | (இதில் மா மார்பு என்னுமிடத்தால் திருமகள் என விளங்கிற்று.) |

(இவற்றில் குறித்த பொருள் வினைமுதலியவற்றால் விளங்கி நின்றமையால், அடைகொடாது கூறப்பட்டன.)

| | |
|---|---|
| பாய் மாவைக்கொண்டு வா. | (இதில் பாய் என்னும் அடையால், மா குதிரை என விளங்கிற்று.) |
| தீன்மாவைக் கொண்டு வா. | (இதில் தீன் என்னும் அடையால், உணவு மாவென விளங்கிற்று.) |
| ஆன் கன்றுக்கு நீரூட்டு. | (இதில் ஆன் என்னும் அடையால் கன்று பசுவின் கன்றென விளங்கிற்று.) |
| பூங்கன்றுக்கு நீரூட்டு. | (இதில் பூவென்னும் அடையால், கன்று இளஞ்செடியென விளங்கிற்று.) |

மாவைக்கொண்டு வா; கன்றுக்கு நீரூட்டு எனக்கூறின், வினையைப் பொருந்தியும் குறித்த பொருள் விளங்காமையால், அது விளங்கும்படி அடைகொடுத்துக் கூறப்பட்டது.

## WORDS THAT SUGGEST AN IDEA.

## மரபு வழுவமைதி.

143. வாக்கியங்களில் வெளிப்படையாலன்றிக் குறிப்பா லுணரப்படுந் தொடர்மொழிகளுஞ் சிலவுளவாம்.

உ—ம்.

| | |
|---|---|
| செஞ்செவியர்.............. | (செவியெல்லாம் செம்பொன் அணிந்தவர் என்பது குறிப்பு.) |
| வெள்ளொக்கல்............... | (குற்றமற்ற சுற்றத்தினர் என்பது குறிப்பு.) |
| குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கை. | (பெருவாழ்க்கையென்பது குறிப்பு.) |

அறிபவர் மனது வருத்தப்படாமல் கூறுவது மரபாதலால், இது மரபு வழுவமைதியாயிற்று.

## ANOMALY: PERSONIFICATION.

## மரபு வழுவமைதி.

144. கேளாதனவற்றைக்கேட்பனபோலவும், பேசாதனவற்றைப் பேசுவனபோலவும், நடவாதனவற்றை நடப்பனபோலவும், இவையன்றி வேறு செய்யாதனவற்றைச் செய்வனபோலவும், அஃறிணையிடத்திலும் வாக்கியம் கூறப்படும்.

உ—ம்.

| | |
|---|---|
| இரவெல்லாம் நின்றுயால் ஈர்ங் கதிர்த் திங்காள். | (இது கேட்பதுபோலுரைக்கப்பட்டது.) |
| மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும் தேய்தலுமுடைமை யைத்திங்கள் செப்புமால். | (இது பேசுவதுபோலுரைக்கப்பட்டது.) |
| இவ்வழியவ்வூருக்குப்போகும். இவ்வரசனாணை யெங்குஞ் செல்லும். | (இவை நடப்பனபோலுரைக்கப்பட்டன.) |
| தன்னெஞ்சே தன்னைச்சுடும்... தேன்தேவர்க்கீயுமலை காட. ... | (இவை செய்வனபோலுரைக்கப்பட்டன.) |

உயர்திணை, அம்மரபுடைய உயர்திணையை நோக்கிக் கூறுதல் மரபு. இங்கே அம்மரபில்லாத அஃறிணையை நோக்கிக் கூறுதலால், மரபு வழு

வமைதியாயின.

## IN POETICAL AND RHETORICAL FIGURE CLASSES ARE COMPOUNDED.

## மரபு வழுவமைதி.

145. உவம உருவக வாக்கியங்களில் திணைகள்பிறழ்ந்து வருதலும், முதல் சினை பிறழ்ந்துவருதலும் உளவாம்.

உ—ம்.

| | |
|---|---|
| மல்லன் மலையனையமாதவனை. | (இவ்வுவமையில் உயர்திணையோடு அஃறிணை பிறழ்ந்துவந்தது.) |
| நெல், கல்வி சேர்மாந்தரின் இறைஞ்சிக்காய்த்தவே. | (இவ்வுவமையில் அஃறிணையோடு உயர்திணை பிறழ்ந்துவந்தது.) |
| கயல்போலுங் கண்...... | (இவ்வுவமையில் சினை முதலோடு பிறழ்ந்து வந்தது ) |
| தளிர்போலுமேனி | (இவ்வுவமையில் முதல் சினையோடுபிறழ்ந்துவந்தது.) |
| மன்னர் மடங்கல். ... | (இவ்வுருவகத்தில் உயர்திணை அஃறிணையோடு பிறழ்ந்துவந்தது.) |
| நகரச்செல்வி. ......... | (இவ்வுருவகத்தில் அஃறிணை உயர்திணையோடு பிறழ்ந்துவந்தது.) |
| முகமதி. .............. | (இவ்வுருவகத்தில் சினை முதலோடு பிறழ்ந்தது.) |
| மந்திரி ராசாக்களுக்குக் கண். | (இவ்வுருவகத்தில் முதல் சினையோடு பிறழ்ந்தது.) |

இன்னும் உவமை உருவகங்களில் இவன் பாரதியனையான், இவன் பாரதியெனப் பால்மயங்கக் கூறுதலும்; கயலினது பிறழ்ச்சிபோலுங் கண்ணினது பிறழ்ச்சியெனச்சொல்லின் முடிவின் அப்பொருள் முடியாது, கயற்கண் எனக் குறைவுபடக்கூறுதலும்; செங்கோல் கொடுங்கோல் வீரக்கழல் சினவேல் என, ஒரு பொருளின் குணத்தை மற்றொருபொருள்மேல் வைத்துக்கூறுதலும்; ஈந்தான் என்பதை அருளினான் என மற்றொருவினையாற்கூறுதலும்; வேந்து அரசு என உயர்திணைப்பொருளை, அஃறிணை வாய்ப்பாட்டாற்கூறுதலும்; இவைபோல்வன பிறவும் வழுவமைதியாக் கொள்க. எழுத்தையுஞ் சொல்லையும் யாப்பிலக்கணக்கத்துள் அசையுஞ் சீருமுதலியவாகக்கொள்வதுபோல்; வழுவமைதிகளிற் சிலவும், குறிப்புமொழிகளும், அலங்காரவிலக்கணத்துள் பல அலங்காரங்களாகக் கொள்ளப்படும்.

# PART IV. APPENDIX.

# அநுபந்தம்.

## METHODS OF ANALYSIS & PARSING: SIX STEPS TO THE COMPLETE ANALYSIS & PARSING OF A PASSAGE.

## இலக்கணங் கூறியல்.

146. வாக்கியங்களுக்கிலக்கணங்கூறுமிடத்து வாக்கியப் பகுப்பிலக்கணம், வாக்கியாங்கப் பகுப்பிலக்கணம், சொற்றனி யிலக்கணம், சொற்றொடர்பிலக்கணம், சொற்புணர்ப்பிலக்கணம், சொல்லுறுப்பிலக்கணம் என ஆறுவகையால் இலக்கணங்கூறப்படும்.

இலக்கணங்கூறலாவது இலக்கணங்களை முறையானே சொல்லுதல். இவ்வநுபந்தத்தில் மேற்கோள்களை உபயோகிக்குமிடத்து, இந்நூலிலிருந்து எடுத்துக்காட்டுபவைகளை இத்தனையாம் விதியென்றும், மற்றநூலிலிருந்து எடுத்துக்காட்டுபவைகளை இன்னநூலிலுள்ள சூத்திரமென்றுங் கூறலாகும்.

## I. ANALYSIS SHEWING KIND OF A SENTENCE.

## வாக்கியப்பகுப்பிலக்கணம்.

147. தனி வாக்கியங்களையும் தொடர் வாக்கியங்களையும் எடுத்துக்கொண்டு, பிண்டமாக அவைகளுக்கிலக்கணங் கூறுவதே, வாக்கியப் பகுப்பிலக்கணங்கூறலாகும்.

### (1) THE SIMPLE SENTENCE.

### தனிவாக்கியத்திற்கு இலக்கணங் கூறல்.

148. தனிவாக்கியத்திற்கு இலக்கணங் கூறுமிடத்துப்பிரயோக வகையாலும் பொருணிலை வகையாலும் தனிநிலையங்கத் தனி வாக்கியம், விரிநிலையங்கத் தனிவாக்கியமெனக் கூறுவது.

பிரயோக வகையாவது, தந்தொழிலிறுதியுந் தம்மினாகிய தொழிலிறுதியும் பற்றிவருவது. (84) வது விதிகாண்க. பொருணிலையாவது, உடம்பாடெதிர்மறைபற்றி வினைநிலையுரைத்தல் முதலியனவாய் வருவது. (6)வது விதி காண்க.

உ—ம்.

1. ராமன் சென்றான்.

(தந்தொழிற்பிரயோகத்தில், உடம்பாடுபற்றி வினைநிலையுரைத்தலாய் வந்த தனிநிலையங்கத் தனிவாக்கியம்.)

2. நாகன் விரைவாய் ஓடினான்.

(தந்தொழிற்பிரயோகத்தில், உடம்பாடுபற்றி வினைநிலையுரைத்தலாய் வந்த விரிநிலையங்கத்த னிவாக்கியம்.)

3. மரம் வெட்டப்பட்டது.

(தம்மினாகிய தொழில் பிரயோகத்தில், உடம்பாடுபற்றி வினைநிலையுரைத்தலாய்வந்த தனிநிலையங்கத்தனிவாக்கியம்.)

4. இவ்வுயிர் நீங்கியமான் அம்பால் எய்யப்பட்டது.

(தம்மினாகிய தொழிற் பிரயோகத்தில், உடம்பாடுபற்றி வினைநிலையுரைத்தலாய்வந்த விரிநிலையங்கத்தனிவாக்கியம்.)

5. சாத்தா விரைந்துசெல்.

(தந்தொழிற் பிரயோகத்தில், உடம்பாடுபற்றி ஏவல் காட்டலாய் வந்த விரிநிலையங்கத்தனி வாக்கியம்.)

6. இது பெரிய சோலையன்று.

(எதிர்மறைப்பற்றிப்பெயர்ப்பயனாய்வந்த விரிநிலையங்கத் தனி வாக்கியம்.)

7. இப்புன்செய் பெரிய நன்செய்யாயிற்று.

(தந்தொழிற் பிரயோகத்தில், உடம்பாடுபற்றி வினைநிலையுரைத்தலாய் வந்த விரிநிலையங்கத்தனிவாக்கியம்.)

---

## (2) COMBINED SENTENCES.

## தொடர்வாக்கியத்திற்கிலக்கணங் கூறல்.

---

149. ஒன்றித்தொடர்வாக்கியம், ஒன்றாத்தொடர் வாக்கியம்,

அடுக்குத்தொடர்வாக்கியம் எனவரும் மூவகைத்தொடர் வாக்கியங்களுள், ஒவ்வொன்றையுந்தொடர்பிரித்து இலக்கணங்கூறுவதே தொடர் வாக்கியத்திற்கிலக்கணங்கூறலாம்.

---

## A. COMPLEX SENTENCE.
## ஒன்றித்தொடர் வாக்கியத்திற்கிலக்கணங் கூறல்.

---

150. பிரதான வாக்கியத்தை அப்பிரதான வாக்கியம் வேற்றுமைப்பொருள் முடிபாகவாவது, அடைமொழிப்பொருள் முடிபாகவாவது, தொடர்ந்து வருமிலக்கணத்தைக்கூறுவதே ஒன்றித்தொடர் வாக்கியத்திற்கிலக்கணங்கூறலாம். இத்தொடருள் அப்பிரதான வாக்கியத்தின் முடிபுநிலையை அவாய்நிலையெனவும் பிரதானவாக்கியத்தின் முடிபு நிலையை பூரணநிலையெனவுங் கூறலாகும்.

உ—ம்.

(1)

அவன் விருப்போடு கொடுத்ததை நான்
களிப்போடு பெற்றுக்கொண்டேன்.

| | |
|---|---|
| 1. அவன் விருப்போடு கொடுத்ததை | 2–க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. நான் களிப்போடு பெற்றுக்கொண்டேன் | 1–க்குப் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், அப்பிரதானத்தினது கொடுத்தான் என்னு முற்றுப் பயனிலை, கொடுத்ததையெனவினையாலணையும் பெயர்ப்பயனாக மாறி ஐயுருபேற்றுச்செயப்படுபொருள் முடிபாய், பிரதானத்தின் பயனிலையைச் சார்ந்து வந்தது. இங்கே வந்த அப்பிரதானத்தின் திரிபுக்கும், இனிவரும் அப்பிரதானங்களின் திரிபுக்கும் (48) வது விதியைக் காண்க.

(2)

அவர்கள் இங்கே வந்து காரியத்தை அறிவித்தார்கள்.

| | |
|---|---|
| 1. அவர்கள் இங்கே வந்து ... | 2–க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. காரியத்தை அறிவித்தார்கள். | 1–க்குப் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், அப்பிரதானத்தினது வந்தார்கள் என்னும் முற்றுப் பயனிலை வந்து என வினையெச்சமாகத்திரிந்து, தொழில் அடைமொழிப்பொருள் முடிபாய், தன் கருத்தா முடிபில் வரும் பிரதானத்தின் பயனிலையைச் சார்ந்து வந்தது.

(3)

நீர் வருவீரென்றால் நான் கொடுப்பேன்.

| | |
|---|---|
| 1. நீர் வருவீரென்றால், | 2-க்கு அப்பிரதானம் அவாய் நிலை, |
| 2. நான் கொடுப்பேன். | 1-க்குப் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், அப்பிரதானத்தின் வருவீரென்னும் முற்றுப் பயனிலை, என்றால என்னும் வினையெச்ச இடைச்சொற்பெற்று, தொழிலடை மொழிப் பொருள் முடிபாய், பிறகருத்தா முடிபில் வரும் பிரதானத்தின் பயனிலையைச் சார்ந்து வந்ததென்க.

(4)

சாத்தன் வந்தபிறகு கொற்றன் சாப்பிட்டான்.

| | |
|---|---|
| 1. சாத்தன் வந்தபிறகு, ...... | 2-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. கொற்றன் சாப்பிட்டான். | 1-க்குப் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், அப்பிரதானத்தின் வந்தான் என்னும் முற்றுப்பயனிலை, பெயரெச்சத் திரிபாய் பிறகு என்னும் பெயரிடைச் சொற்பெற்று, வருங் கால அடைமொழிப்பொருள் முடிபாய், பிரதானத்தின் பயனிலையைச் சார்ந்து வந்தது.

(5)

நான் கண்ட சொப்பனம் பயங்கரமானது.

| | |
|---|---|
| 1. நான் கண்ட.................. | 2-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. சொப்பனம் பயங்கரமானது. | 1-க்குப் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், அப்பிரதானத்தின் கண்டேன் என்னு முற்றுப பயனிலை கண்ட என்னும் பெயரெச்சமாகத்திரிந்து, தொழிலடைமொழிப் பொருள் முடிபாய், பிரதானத்தின் எழுவாயைச் சார்ந்து வந்தது.

(6)

கொற்றன் கட்டினவீட்டைச்சாத்தன் இடித்தான்.

| | |
|---|---|
| 1. கொற்றன் கட்டின............... | 2-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. வீட்டைச் சாத்தன் இடித்தான். | 1-க்குப் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், அப்பிரதானத்தின் கட்டினான் என்னும் முற்றுப் பயனிலை கட்டின என்னும் பெயரெச்சமாகத் திரிந்து, தொழிலடை மொழிப் பொருள் முடிபாய், பிரதானத்தின் செயப்படுபொருளைச் சார்ந்து வந்தது.

(7)

அவ்வதிகாரி கட்டளையிட்டபடி நீர் செய்யாமையால், உமக்கு இவ்வளவு நஷ்டம் நேரிட்டது.

| | |
|---|---|
| 1. அவ்வதிகாரி கட்டளையிட்டபடி... | 2-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. நீர் செய்யாமையால். .............. | 3-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 3. உமக்கிவ்வளவு நஷ்டம் நேரிட்டது | 2-க்கு பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், 2-க்கு அப்பிரதானத்தின் கட்டளையிட்டார் என்னுமுற்றுப் பயனிலை கட்டளையிட்ட என்னும் பெயரெச்சமாகத்திரிந்து, படியென்னும் பெயரிடைச்சொற்பெற்று, குணவடைப்பொருள் முடிபாய், 3-க்கு அப்பிரதானத்தின் பயனிலையைச்சார்ந்தும்; 3-க்கு அப்பிரதானத்தின் செய்யீர் என்னும் முற்றுப்பயனிலை, செய்யாமை என்னும் வினையாலணையும் பெயர்த்திரிபாய் மூன்றாம்வேற்றுமையுருபேற்று, ஏதுப்பொருள்முடிபாய் பிரதானத்தின் பயனிலையைச்சார்ந்தும் வந்தது.

(8)

நான் சொன்னதை நீர் கவனியாமல், இந்தத்தொல்லையில் தலையிட்டுக் கொண்டு சங்கடப்படுவதற்காக, நான் நிரம்பவும் விசனப்படுகிறேன்.

| | |
|---|---|
| 1. நான் சொன்னதை........... | 2-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. நீர் கவனியாமல்............... | 3-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 3. (நீர்) இந்தத் தொல்லையில் தலையிட்டுக்கொண்டு. | 4-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 4. (நீர்) சங்கடப்படுவதற்காக.... | 5-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 5. நான் நிரம்பவும் விசனப்படுகிறேன். | 4-க்குப் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், 2-க்கு அப்பிரதானத்தின் சொன்னேன் என்னுமுற்றுப் பயனிலை, சொன்னது என்னும் வினையாலணையும்பெயராகத்திரிந்து, இரண்டாவதனுருபேற்றுச் செயப்படுபொருள் முடிபாய், 3-க்கு அப்பிரதானத்தின் பயனிலையைச்சார்ந்தும்; 3-க்கு அப்பிரதானத்தின் கவனியீர் என்னும் முற்றுப்பயனிலை, கவனியாமல் என்னும் வினையெச்சமாகத்திரிந்து, தொழில் அடைமொழிப்பொருள் முடிபாய், 4-க்கு அப்பிரதானத்தின் பயனிலையைச் சார்ந்தும்; 4-க்கு அப்பிரதானத்தின் தலையிட்டுக்கொண்டீர் என்னும் முற்றுப் பயனிலை, தலையிட்டுக்கொண்டு என்னும் வினையெச்சமாகத்திரிந்து, தொழிலடை மொழிப்பொருள் முடிபாய், 5-க்கு அப்பிரதானத்தின் பயனிலையைச்சார்ந்தும்; 5-க்கு அப்பிரதானத்தின் சங்கடப்பட்டீர் என்னுமுற்றுப்பயனிலை, சங்கடப்படுவது என்னும் வினையாலணையும் பெயராகத்திரிந்து, நான்காவதன் உருபேற்று நிமித்தப்பொருள் முடிபாய் பிரதானத்தின் பயனிலையைச்சார்ந்தும் வந்தது.

(9)

ராமன் சொன்ன யோசனையை நல்லதென்று ஒப்புக்கொண்டு, கொற்றன் சொன்ன யோசனையைச் சாத்தன் தள்ளிப்போட்டான்.

| | |
|---|---|
| 1. ராமன் சொன்ன.............. | 2-க்கு அப்பிரதானம் அவாய்நிலை. |
| 2. யோசனையை நல்லதென்று ஒப்புக்கொண்டு. | 4-க்கு அப்பிரதானம் அவாய்நிலை. |
| 3. கொற்றன் சொன்ன....... | 4-க்கு அப்பிரதானம் அவாய்நிலை. |
| 4. யோசனையைச் சாத்தன் தள்ளிப்போட்டான். | 2-க்கும், 3-க்கும் பிரதானம் பூரண நிலை. |

இவற்றுள், 2-க்கு அப்பிரதானத்தினது சொன்னான் என்னும் முற்றுப் பயனிலை, சொன்ன என்னும் பெயரெச்சமாகத்திரிந்து, தொழிலடைப்பொருள் முடிபாய், 4-க்கு அப்பிரதானமாகிய 2-னுடைய செயப்படுபொருளைச் சார்ந்தும்; 4-க்கு 2-ஆகிய அப்பிரதானத்தின் ஒப்புக்கொண்டான் என்னு முற்றுப் பயனிலை, ஒப்புக்கொண்டு என்னும் வினையெச்சமாகத் திரிந்து, 4-ஆகிய பிரதானத்தின் பயனிலையைச்சார்ந்தும்; 4-க்கு 3-ஆகிய அப்பிரதானத்தின் சொன்னான் என்னும் முற்றுப் பயனிலை, சொன்ன என்னும் பெயரெச்சமாகத் திரிந்து, 4-ஆகிய பிரதானத்தின் செயப்படு பொருளைச் சார்ந்தும் வந்தது.

மேலே "நல்லது என்று" வருவதற்கு இது என்னும் ஓரெழுவாய் கொடுத்து அதையும் ஓர் அப்பிரதான வாக்கியமாகக்கொள்ளலாகாதோவெனில் கொடுப்பினும் எழுவாய்த் தொடர் மொழியடையாய்க் கொள்ளலாமேயன்றி, வாக்கியமாகக் கொள்ளற்குரிய சிறப்பன்றென்க.

(10)

நான் உமக்கு அந்தப்புஸ்தகம் தருவதாக வாக்குக்கொடுத்திருந்தேன். குறித்தநாளில் வராததினாலே மற்றொருவருக்குக்கொடுத்துவிட்டேன்.

| | |
|---|---|
| 1. நான் உமக்கந்தப்புஸ்தகம் தருவதாக வாக்குக்கொடுத்திருந்தேன். | 2-க்கு உபசிரோஷ்டம் அவாந்தரநிலை. |
| 2. (நீர்) குறித்தநாளில் வராததினாலே. | 3-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 3. நான் மற்றொருவருக்குக் கொடுத்துவிட்டேன். | 2-க்குப் பிரதானம் பூரணநிலை. |

இவற்றுள், 1. 2-க்கு மறைநிலைப் பொருளுபசிரோஷ்டமாய்ப் பயனிலை திரியாது நின்றும், 3-க்கு 2-ஆகிய அப்பிரதானத்தின் வாரீர் என்னும் முற்றுப் பயனிலை, வராதது என்னும் வினையாலணையும் பெயராகத் திரிந்து, மூன்றாவதன் உருபேற்று ஏதுப்பொருள் முடிபாய், 3-வது பிரதானத்தின் பயநிலையைச் சார்ந்தும் வந்தது. அவாந்தர நிலையைப்பற்றிப் பின்வரும் விதியிற் காண்க.

---

## B. COMPOUND SENTENCE.

### 1. ஒன்றுத்தொடர் வாக்கியத்திற்கிலக்கணங் கூறல்.

---

151. சிரோஷ்டவாக்கியம் உபசிரோஷ்டத்தின் பயனிலைப்பொரு

ருளையாவது, எழுவாய்ப்பொருளையாவது, துணைநிலைப்பொருளையா வது, அடைமொழிப்பொருளையாவது, தனக்கு எழுவாயாகவேனும் துணைநிலையாகவேனும் அடைமொழியாகவேனும் சுட்டி, இணைநிலை, சமநிலை, எதிர்நிலை, மறைநிலை, பிரிநிலை, ஏதுகாரியநிலை, வினாவிடை நிலையாய்த் தொடர்ந்துவரும் இலக்கணத்தைக் கூறுவது, ஒன்றுத் தொடர்வாக்கியத்திற்கிலக்கணங்கூறலாம்.

இத்தொடரில் உபசிரோஷ்டவாக்கியத்தின் முடிந்தநிலையை அவாந்தர நிலையெனவும், சிரோஷ்டவாக்கியத்தின் முடிந்தநிலையைப்பூரணநிலையென வுங்கூறிக்கொள்க.

(1)

சற்குணன் நல்ல புத்திசொன்னான்;
சங்கரன் அதை அசட்டைபண்ணிவிட்டான்.

| | | |
|---|---|---|
| 1. | சற்குணன் நல்ல புத்திசொன்னான். | 2-க்கு உபசிரோஷ்டம் அவாந்தரநிலை. |
| 2. | சங்கரன் அதை அசட்டைபண்ணிவிட்டான். | 1-க்கு சிரோஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரோஷ்டம் உபசிரோஷ்டத்தின் பயனிலைப்பொருளைத் தனக்குச் செயப்படுபொருளாய் அகச்சுட்டாலிணைத்து வந்த இணைநிலைத்தொடர் வாக்கியமாம்.

பயனிலையைச்சுட்டுமிடத்து, எழுவாயுஞ்சேர்த்துச்சுட்டுமென்பதை (62) விதியிற்காண்க.

(2)

திருடன் அகப்பட்டுக்கொண்டான்; அத்திருடனை இனித்தப்பவிடார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | திருடன் அகப்பட்டுக்கொண்டான். | 2-க்கு உபசிரோஷ்டம் அவாந்தரநிலை. |
| 2. | அத்திருடனை இனித்தப்பவிடார்கள். | 1-க்கு சிரோஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரோஷ்டம் உபசிரோஷ்டத்தின் எழுவாய்ப்பொருளை, தனக்குச் செயப்படுபொருளாய் புறச்சுட்டாலிணைத்து வந்த இணைநிலைத்தொடர் வாக்கியமாம்.

(3)

என் தகப்பனார் வந்தார்; அவர் வந்தது எனக்குச் சந்தோஷம்.

| | |
|---|---|
| 1. என் தகப்பனார் வந்தார்........ | 2-க்கு உபசிரோஷ்டம் அவாந்தரநிலை. |
| 2. அவர் வந்தது எனக்குச்சந்தோஷம். | 1-க்கு சிரோஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரேஷ்டம் உபசிரேஷ்டத்தின் பயனிலைப்பொருளை, தனக்கு எழுவாய்ப்பொருளாய் வாக்கியச்சுட்டாலிணைத்து வந்த இணைநிலைத் தொடர்.

(4)

மாணிக்கம் பாடினன்; அதுபோல வரதனும் பாடினன்.

| | |
|---|---|
| 1. மாணிக்கம் பாடினன்............ | 2-க்கு உபசிரேஷ்டம் அவாந்தரநிலை. |
| 2. அதுபோல வரதனும் பாடினன். | 1-க்கு சிரேஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரேஷ்டம் உபசிரேஷ்டத்தோடு ஒப்புப்பற்றிய சமநிலைத் தொடர் வாக்கியமாம்.

(5)

தமையன் போனன்; தம்பி போகவில்லை.

| | |
|---|---|
| 1. தமையன் போனன்............. | 2-க்கு உபசிரேஷ்டம் அவாந்தரநிலை. |
| 2. தம்பி போகவில்லை.............. | 1-க்கு சிரேஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரேஷ்டம் உபசிரேஷ்டத்தை மறுத்துவரத் தொடர்ந்த மறைநிலைத்தொடர் வாக்கியமாம்.

(6)

நாங்களிருவரும் கூடிப்பேசிக்கொண்டிருந்தோம்; அப்பால் அவர் வடக்கே திரும்பினர்; உடனே நான் தெற்கே திரும்பிவிட்டேன்.

| | |
|---|---|
| 1. நாங்களிருவரும் கூடிப் பேசிக்கொண்டிருந்தோம். | 2-க்கு உபசிரேஷ்டம் அவாந்தரநிலை. |
| 2. அப்பால் அவர் வடக்கே திரும்பினர். | 3-க்கு உபசிரேஷ்டம் அவாந்தரநிலை. |
| 3. உடனே நான் தெற்கே திரும்பிவிட்டேன். | 2-க்கு சிரேஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரேஷ்டம் தன்னினத் தொடருபசிரேஷ்டத்தோடு இடம்பற்றிய சமநிலைத்தொடர் வாக்கியமாம்.

(7)

நான் என்ன புத்திசொன்னலுங் கேட்கிறதில்லை; ஆகையால் அவன் கெட்டுப்போவான்.

| | |
|---|---|
| 1. நான் என்ன புத்திசொன்னலும். | 2-க்கு அப்பிரதானம் அவாய்நிலை. |
| 2. (அவன்) கேட்கிறதில்லை........ | 3-க்கு உபசிரேஷ்டம் அவாந்தரநிலை. |
| 3. ஆகையால் அவன் கெட்டுப் போவான். | 2-க்கு சிரேஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரேஷ்டம் காரியமாகவும், வேற்றினத் தொடருபசிரேஷ்டம் ஏதுவாகவும் தொடர்ந்த ஏதுகாரிய நிலைத்தொடர் வாக்கியம்.

நீர் வந்தால் தந்திருப்பேன்; நீர் வரவில்லை, ஆகையால் மற்றொருவர் கேட்டார்; அவருக்கு நான் கொடுத்துவிட்டேன்.

| | |
|---|---|
| 1. நீர் வந்தால்...................... | 2-க்கு அப்பிரதானம் அவாய் நிலை. |
| 2. (நான்) தந்திருப்பேன்.......... | 3-க்கு உபசிரோஷ்டம் அவாந்தரநிலை. |
| 3. நீர் வரவில்லை.... .............. | 4-க்கு உபசிரோஷ்டம் அவாந்தரநிலை. |
| 4. ஆகையால் மற்றொருவர் கேட்டார். | 5-க்கு உபசிரோஷ்டம் அவாந்தரநிலை. |
| 5. அவருக்கு நான் கொடுத்து விட்டேன். | 4-க்கு சிரோஷ்டம் பூரணநிலை. |

இவற்றுள், சிரோஷ்டம் வேற்றினத் தொடருப சிரோஷ்டத்தின் எழுவாய்ப் பொருளைத் தனக்குத் துணைநிலைப் பொருளாக, அகச் சுட்டாலிணைத்து வந்த இணைநிலைத் தொடர் வாக்கியமாம்.

---

## C. CONTRACTED COMPOUND SENTENCE.

## அடுக்குத்தொடர் வாக்கியத்திற் கிலக்கணங்கூறல்.

---

152. தனிநிலையாகவும் விரிநிலையாகவும் வாக்கிய நிலையாகவும் நின்ற அ ங்கள், உம்மை முதலிய எண்ணிடைச் சொற்கள் தொக்கியும விரிந்தும் நிற்க, தொகைபெற்றேனும் பெறுமல்லேனும அடுக்கித் தொடர்வதும், அடுக்குநிலையங்களே பின்னுமிணைந்தடுக்கித்தொடர்வதும், இவ்வங்கங்கள் யாவும் கலந்தடுக்கித் தொடர்வதுமான விலக்கணத்தைக் கூறலே அடுக்குத்தொடர் வாக்கியத்திற்கிலக்கணங் கூறலாம்.

(1)

சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் பூமிக்குப்பிரகாசமுள்ள வஸ்துக்கள்.

இவற்றுள், எழுவாயங்கம் உம்மென்னும் எண்ணிடைச் சொல் விரிந்து நிற்க, தொகை பெறுமல் தனிநிலையாய் அடுக்கிவந்த அடுக்குத்தொடர் வாக்கியமாம்.

(2)

உபாத்தியார், மாணிக்கம் சுந்தரம் வரதன் ராமனுகிய நால்வரையுங் கூப்பிட்டார்.

இவற்றுள், செயப்படு பொருளங்கம் எண்ணிடைச் சொற்கள் தொக்கவருஞ் செவ்வெண்ணாய் நிற்க, தொகைபெற்று தனிநிலையாயடுக்கி வந்த அடுக்குத்தொடர் வாக்கியமாம்.

இங்கே மாணிக்கமாகிய ஒருவன், சுந்தரமாகிய ஒருவன், வரதனாகிய ஒருவன், ராமனாகிய ஒருவன் என்பதே கருத்து. (72) விதி பார்க்க.

(3)

ராமன் வில்லையெடுத்தான், வளைத்தான், எய்தான்.

இவற்றுள், பயனிலை யங்கங்கள் எண்ணிடைச் சொற்கள் தொக்க வருஞ் செவ்வெண்ணாய் நிற்க, தொகை பெறாது தனிநிலையாய் அடுக்கி வந்த அடுக்குத் தொடர் வாக்கியமாம்.

(4)

அந்த ராஜா சிறந்த கீர்த்தியையும்; மிகுந்த கனத்தையும் பெற்றவர்.

இவற்றுள், துணை நிலை யங்கங்கள் உம்மென்னும் எண்ணிடைச் சொல் விரிந்து நிற்க, தொகைபெறாது விரிநிலையாயடுக்கி வந்த அடுக்குத் தொடர் வாக்கியமாம்.

(5)

ராமன் கடன்கொடுத்தான் என்பதும், கடன்வாங்கினான் என்பதும் மெய்யல்ல.

இவற்றுள், வாக்கிய நிலையாக வந்த எழுவாயங்கங்கள் உம்மென்னும் எண்ணிடைச் சொல் விரிந்து நிற்க, தொகைபெறாமல் அடுக்கிவந்த அடுக்குத்தொடர் வாக்கியமாம்.

ராமன் கடன்கொடுத்தான் என்பதும், கடன் வாங்கினானென்பதுமாகியவிரண்டுமெய்யல்லவெனவரில், தொகைபெற்றுவந்ததாகக் கொள்க.

(6)

சாத்தன் தன் தோட்டத்தில் தென்னைமரம் புன்னை மரங்களையும், மாமரம் வாழை மரங்களையும் வளர்த்தான்.

இவற்றுள், அடுக்குநிலையாக வந்த துணை நிலையங்கங்களே பின்னும் இணைந்தடுக்கி, உம்மென்னும் எண்ணிடைச்சொல் விரிந்து நிற்க, தொகைபெறாது வந்த அடுக்குத்தொடர் வாக்கியமாம்.

(7)

கொற்றன் தகப்பனையும் அவன்கூடப்பிறந்தபெரியதகப்பனையும் மாமன் மச்சினனையுங் கண்டான்.

இவற்றுள், துணைநிலையங்கம் தனிநிலையாகவும், விரிநிலையாகவும், அடுக்குநிலையாகவும் கலந்தடுக்கி, உம்மென்னும் எண்ணிடைச்சொல் விரிந்து நிற்க, தொகைபெறுதுவந்த கலப்பங்க அடுக்குத்தொடர் வாக்கியமாம்.

(8)

வீமன்என, விஜையன்என, நகுலன்என, சகாதேவன்என, தர்மன்என ஐவர் வந்தார்.

இவற்றுள், எழுவாயங்கங்கள் எனவென்னும் எண்ணிடைச்சொல் விரிந்துநிற்க, தொகைபெற்று தனிநிலையாயடுக்கிவந்த அடுதகுததொடர் வாக்கியமாம்.

---

## II. ANALYSIS SHOWING PARTS OF SENTENCE.

## வாக்கியாங்கப் பகுப்பிலக்கணம்.

153. தனித்தும் தொடர்ந்தும்வரும் வாக்கியங்களை நிறுத்தி தனிநிலையாகவும், விரிநிலையாகவும், வாக்கியநிலையாகவும், அடுக்குநிலையாகவும் வரும் எழுவாயங்கம் பயனிலை யங்கம் துணைநிலையங்கம் அடைமொழியங்கம் என்பவைகளைப்பிரித்திலக்கணங் கூறுவதே வாக்கியாங்கப்பகுப்பிலக்கணமாம்.

### 1. SIMPLE SENTENCE.

### தனிவாக்கியாங்கப்பிரிப்பிலக்கணம்.

(1)

வேடன் மானை அம்பால் எய்தான்.

| அடைமொழி | எழுவாய், பயனிலை, துணை நிலை. |
|---|---|
| 0 | வேடன் ...எழுவாய், வினைமுதல், தனி. |
| 0 | மானை ......செயப்படு பொருள், அழித்தல், தனி. |
| 0 | அம்பால் ...கருவிப்பொருள், துணைக்கருவி, தனி. |
| 0 | எய்தான் } பயனிலை, முற்று, வினைநிலையுணாத்தல், துணைநிலை இரண்டுடைத் தனி. |

(2)

அந்த மரம் மிகவும் பெரிதாய் வளர்ந்திருக்கிறது.

| அடைமொழி. | எழுவாய், பயனிலை, துணைநிலை. |
|---|---|
| அந்த...பொருளடை, சுட்டு, தனி. | மரம்...எழுவாய், வினைமுதல், விரி. |
| மிகவும் பெரிதாய் } குணவடை, வடிவு, விரி. | வளர்ந்திருக்கிறது. } பயனிலை, முற்று, வினைநிலையுரைத்தல், துணைநிலையில்லாவிரி. |

## 2. COMPLEX SENTENCE.

## ஒன்றித்தொடர்வாக்கியாங்கப்பிரிப்பிலக்கணம்.

(1)

ராமன் நல்லகுணசாலியாயிருக்கிறபடியால், அவனை யாவரும் அன்பாய் நேசிக்கிறார்கள்.

1. ராமன் நல்ல குணசாலியாயிருக்கிறபடியால்,
2. யாவரும் அவனை அன்பாய் நேசிக்கிறார்கள்.

| அடைமொழி. | எழுவாய், பயனிலை, துணைநிலை. |
|---|---|
| 0 | 1. ராமன்...எழுவாய், வினைமுதல், தனி. |
| நல்லகுணசாலியாய் } குணவடை, குறிப்பு, விரி. | இருக்கிறபடியால் } பயனிலை, வேற்றுமைத்திரிபு, கருவிப்பொருள், துணைநிலையில்லாவிரி. |
| 0 | 2. யாவரும்......எழுவாய், வினைமுதல், தனி. |
| 0 | அவனை...........செயப்படுபொருள், விஷயம், தனி. |
| அன்பாய்...குணவடை, குறிப்பு, தனி. | நேசிக்கிறார்கள். } பயனிலை, முற்று, வினைநிலையுரைத்தல், துணைப்பொருளுடைவிரி. |

(2)

அவனுக்கு மிகுந்த செல்வங் கிடைத்திருந்தும், அதை அநுபவியாமல் ஏழை காலந் தள்ளுகிறதைப்போலக் காலந் தள்ளுகிறான்.

1. அவனுக்கு மிகுந்த செல்வங்கிடைத்திருந்தும்,
2. அதை அநுபவியாமல்,
3. ஏழை காலந் தள்ளுகிறதைப்போல,
4. காலந் தள்ளுகிறான்.

| அடைமொழி. | எழுவாய், பயனிலை, துணைநிலை. |
|---|---|
| 0 | 1. அவனுக்கு...கோடற்பொருள், தனி. |
| மிகுந்த...........குணவடை, குறிப்பு, தனி. | செல்வம்......எழுவாய், வினைமுதல், விரி. |
| 0 | கிடைத்திருந்தும் } பயனிலை, எச்சத்திரிபு, துணைநிலையுடைத்தனி. |
| 0 | 2. (அவன்)......எழுவாய், தொகைநிலை, சுட்டு, வினைமுதல். |
| 0 | அதை...........செயப்படுபொருள், அடைதல், தனி. |
| 0 | 3. ஏழை...எழுவாய், வினைமுதல், தனி. |
| 0 | காலந் தள்ளுகிறதைப்போல } பயனிலை, வினையாலணையும்பெயர்த்திரிபு, துணைநிலையில்லாத்தனி. |
| 0 | 4. (அவன்)......எழுவாய், தொகைநிலை சுட்டு, வினைமுதல், தனி. |
| 0 | காலந் தள்ளுகிறான் } பயனிலை, முற்று, வினைநிலையுரைத்தல், துணைநிலையில்லாத் தனி. |

கோடற்பொருள் எழுவாய்ப் பொருளைப் பார்க்கிலும் உயர்வாதலால், அது முதலில் நின்றது. (99) விதியைக் காண்க.

ஏழை காலந்தள்ளுகிறதைப்போலவென்பது ஏழையைப்போலவெனப் பயனிலை தொக்கியவிடத்து, எழுவாய் செயப்படுபொருளாக மாறிச் சுருங்கியும் வரும். (102) விதி.

---

## 3. COMPOUND SENTENCE.

## ஒன்றுத்தொடர்வாக்கியாங்கப்பிரிப் பிலக்கணம்.

நீயும் நானும் போய், அவனைக்கண்டுபேசுவோம்; அப்போது நம்முடைய பேச்சுக்கிணங்குவார்.

1. நீயும் நானும் போய்,
2. அவனைக் கண்டுபேசுவோம்;
3. அப்போது நம்முடைய பேச்சுக்கிணங்குவார்.

| அடைமொழி. | எழுவாய், பயனிலை, துணைநிலை. |
|---|---|
| o | 1. நீயும் நானும் ......எழுவாய், அடுக்கு, வினைமுதல், தனி. |
| o | போய் ........பயனிலை, எச்சத்திரிபு, துணைநிலையில்லாத்தனி. |
| o | 2. (நீயும் நானும்) எழுவாய், தொகைநிலை. |
| o | அவரை......செ—ன், அடைதல், தனி. |
| o | கண்டுபேசுவோம் } பயனிலை, முற்று, வினைநிலையுணர்த்தல், துணைநிலையுடைத்தனி. |
| நம்முடைய...... குணவடை. பண்புத் தற்கிழமை, தனி, | பேச்சுக்கு... நட்புப்பொருள், விரி. |
| o | (அவர்)......எழுவாய், தொகைநிலை, சுட்டு, வினைமுதல். |
| அப்போது .......காலவடை, நிகழ்வு, தனி. | இணங்குவார் } பயனிலை, முற்று, வினைநிலையுணர்த்தல், துணைநிலையுடை விரி. |

அப்போது அங்கே என்னும் ஆக்கத் தொடர்மொழிகளை அடையாக்காமல், துணைநிலையில் ஒன்றாகவும் அமைக்கலாம்.

நீயும் நானும் என அடுக்குத்தொடர் வாக்கியாங்கத்தை இங்கே காட்டினபடியால், அதற்குதாரணங்கள் வேறு கூறவில்லை.

## III. PARSING OF WORDS.

## சொற்றணியிலக்கணம்.

154. சொற்றணி இலக்கணமென்பது ஒரு மொழி இலக்கணமெனவும், தொடர்மொழி இலக்கணமெனவும் இரண்டு வகைப்படும்.

## 1. OF SIMPLE WORDS.

## ஒருமொழியிலக்கணம்.

155. வாக்கியாங்கங்களிலுள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் ஒவ்வொன்றாக நிறுத்தி, மூவிட்த்திலுஞ்

சிறப்புவகை பொதுவகை பற்றி தன்னையும், இருதிணையைம்பாற் பொருளையும் கூறுதலே, ஒருமொழி இலக்கணங்கூறலாம்.

மூவிடமென்பது சொற்கள் நிகழ்ச்சிக்குரிய தானமாகிய தன்மை முன்னிலை படர்க்கை.

பெயர்வினைகளைச் சார்ந்துநிற்கும் இடைச்சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும், தன்னையும் இருதிணையைம்பாற் பொருளையும் உணர்த்தும் இலக்கணம் அவசியமின்மையால், அவ்விருவகைச்சொற்களுக்கும் அதைவிட்டு பொருளொக்கம்பற்றி மாத்திரமே இலக்கணங் கூறப்படும்.

மேற்கூறியபடி சிறப்புவகை பொதுவகை பற்றி தன்னையும் இருதிணையைம்பாற் பொருளையுமுணர்த்துமெனவே.

சிறப்புவகைபற்றி தன்னையுணர்த்தல், பொதுவகைபற்றி தன்னையுணர்த்தல், சிறப்புவகைபற்றி இருதிணையைம்பாற்பொருளையுணர்த்தல், பொதுவகைபற்றி இருதிணையைம்பாற் பொருளையுணர்த்தல் எனநால்வகையாய் வரும்.

---

## 1
## சிறப்புவகைபற்றித்தன்னையுணர்த்தல்.

156. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என உணர்த்துவதே சிறப்புவகைபற்றித்தன்னையுணர்த்தலாம்.

---

## 2
## பொதுவகைபற்றித்தன்னையுணர்த்தல்.

157. இயற்சொல் திரிசொல் என ஈரியல்பினையுடைத்தாய், இயல்பு வழக்கையாவது, தகுதிவழக்கையாவதுபொருந்தி, வெளிப்படைச்சொல்லாயும், குறிப்புச்சொல்லாயும், பகாப்பதமாயும், பகுபதமாயும்வரும் ஒருமொழியென உணர்த்தலே பொதுவகைபற்றித் தன்னையுணர்த்தலாம்.

## 3
## சிறப்புவகைபற்றி இருதிணையைம்பாற்பொருளை உணர்த்தல்.

158. உயர்திணை யாண்பால், உயர்திணைப் பெண்பால், உயர் திணைப் பலர்பால், அஃறிணையொன்றன்பால், அஃறிணைப்பலவின் பால்என உணர்த்தலே சிறப்புவகைபற்றி இருதிணையைம்பாற் பொருளை உணர்த்தலாம்.

## 4
## பொதுவகைபற்றி இருதிணையைம்பாற்பொருளை உணர்த்தல்.

159. இருதிணையைம்பாலில் சிலபலவற்றை பொதுவாய்உண ர்த்தலே பொதுவகைபற்றி இருதிணையைம்பாற் பொருளை உண ர்த்தலாம்.

எனவே எல்லாச் சொற்களும் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல், தன்மைச்சொல், முன்னிலைச்சொல், படர்க்கைச்சொல், மூவிடச்சொல், இயற்சொல், திரிசொல், இயல்பு வழக்குச்சொல், தகுதிவ ழக்குச்சொல், வெளிப்படைச்சொல், குறிப்புச்சொல், பகாப்பதச்சொல், பகு பதச்சொல், ஒருசொல் எனமுன்பு தன்னை உணர்த்தி, பின்பு உயர்திணைப் பொருள், அஃறிணைப்பொருள், ஆண்பாற் பொருள், பெண்பாற் பொருள், பலர்பாற் பொருள், ஒன்றன்பாற் பொருள், பலவின்பாற் பொருள், திணை ப்பொதுப் பொருள், பாற்பொதுப் பொருள், திணைபாற்பொதுப்பொருள் எனப் பொருள்களை விளக்குமென்க.

இவற்றுடன் திசைச்சொல்லையும் வடசொல்லையுஞ் சேர்க்குமிடத்து, பெயர்வினைகளுக்கொப்ப நின்று, தன்னையும் பொருளையும் விளக்கிய அளவே இலக்கணம் பெறப்படும்.

## சொற்கள் மூவிடங்களினின்று தன்னையும் இரு திணையைம்பாற் பொருளையுமுணர்த்தும் விதம்.

160. மேற்கூறியவாறு தன்னையும் இருதிணையைம்பாற்பொருளையுமுணர்த்துஞ்சொற்கள் படர்க்கையிடத்தினின்று தன்னை உணர்த்தியவிடத்து திணைபாற்பொருளை சிறப்புவகையாகவும் பொதுவகையாகவும் உணர்த்துமெனவும்; மற்றை ஈரிடத்திலும் நின்று தன்னை உணர்த்தியவிடத்து திணைபாற்பொருளைப் பொதுவகையாகவே உணர்த்துமெனவுங்காண்க.

---

## A. OF NOUNS.

## பெயர்க்கு இலக்கணங்கூறுமுறை.

161. பெயரானது சிறப்புவகைபற்றித்தன்னை உணர்த்துமிடத்து, முதனிலை வகை நாமநிலைவகை கடைநிலைவகை தானநிலை வகை என நால்வகை நிலையாலும் உணர்த்தும்.

முதனிலை வகையாவது பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் சுட்டு வினா முதலிய பகுதியடியாகக்கொண்டு பிரிக்கப்பட்டிருக்கும் வகை. நாமநிலைவகையாவது இடுகுறியும் காரணக்குறியும் மரபையும் ஆக்கத்தையும் தொடர்ந்து பொதுப்பெயர் சிறப்புப்பெயர் என நாமம்பற்றிப் பிரிக்கப்பட்டிருக்கும் வகை. கடைநிலை வகையாவது இறுதியில் நிற்கும் வேற்றுமைகளைக்கொண்டு பிரிக்கப்பட்டிருக்கும் வகை. தானநிலை வகையாவது தன்மை முன்னிலை படர்க்கையாகிய மூவிடம்பற்றிப்பிரிக்கப்பட்டிருக்கும் வகை.*

---

*இனி உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெயர் என வருவது இருதிணையைம்பாற்பொருளைப்பற்றிவரும் பொருணிலைவகையென்னப்படும். இவ்வுயர்திணைப்பெயரையும் அஃறிணைப்பெயரையும் சிறப்புப் பெயர் எனவும் விரவுப்பெயரை பொதுப்பெயரெனவும் இயற்பெயரெனவுங் கொண்டு, பொதுப்பெயர் சிறப்புப்பெயர் அல்லது இயற்பெயர் சிறப்புப் பெயர் எனக்கூறுவதுமுண்டு. இவை சிறப்புவகைபற்றிப் பொருளை உணர்த்தல் பொதுவகைபற்றிப் பொருளை உணர்த்தலென்னும் இலக்கணங்களுக்

தன்மை முன்னிலை படர்க்கை எல்லாச்சொற்களுக்கும் பொதுவாயினும், பெயர்ச்சொல்லுக்கு தன்மைப்பெயர் முன்னிலைப்பெயர் படர்க்கைப்பெயரென இடம்பற்றிய பிரிவுள்ளமையானும், நால்வகைச்சொற்களின் இலக்கணங்கூறலுக்கும் ஆதாரமாகிய நிலைக்களனாதலாலும், தன்மை முன்னிலை படர்க்கையை சிறப்புவகையிலும் சேர்த்து தானநிலைவகையென்னப்பட்டது.

---

குள் அடங்குமாகையால், அப்பிரிவுகள் இலக்கணங்கூறலுக்காக வகுக்கப்பட்டிலவென்க.

அன்றியும் மரமெனத்தொகைபற்றியும் பனையெனவகைபற்றியும் பொதுப்பெயர் சிறப்புப்பெயர் எனவரும் வகை, நாமநிலைவகையுளடங்கியது காண்க. வினைமுதற்பொருட்பெயர், செயப்படுபொருட்பெயர், கருவிப்பொருட்பெயர் எனவும்; முதற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் எனவும் வரும் வகைகள் முதனிலை வகையுளடங்குமென்க.

இப்படியாகவே, பெயருக்குத் தன்னை உணர்த்தும் சிறப்புவகை பொதுவகை, இருதிணை யைம்பாற் பொருளையுணர்த்தும் சிறப்புவகை பொதுவகையுண்டென்றும்; அப்பெயர் மூவிடங்களிலும் பொருளிடங்காலமாதிய அடிபற்றி இடுகுறியுங் காரணக்குறியுமாய், மரபு ஆக்கம் என்பவைகளைத்தொடர்ந்து தொகையும் வகையும்பற்றிய பொதுப்பெயரும் சிறப்புப்பெயருமாக நின்று வேற்றுமைபெற்றுவருவதே சிறப்புவகையில் தன்னையுணர்த்துவதெனவும்; இயற்சொல் திரிசொல் இயல்பு வழக்குச்சொல் தகுதி வழக்குச்சொல் வெளிப்படைச்சொல் குறிப்புச்சொல் பகுபதச்சொல் பகாப்பதச்சொல் ஒருமொழியென உணர்த்துவதே பொதுவகையில் தன்னை உணர்த்துவதெனவும்; திணைபால்களைத் தனித்தனியுணர்த்தலே சிறப்புவகையில் இருதிணையைம்பாற் பொருளையுணர்த்தலெனவும்; திணை பால்களைச் சிலபலவற்றிற்குப் பொதுப்பட உணர்த்தலே பொதுவகையில் இருதிணையைம்பாற் பொருளை உணர்த்தலெனவும்; தொகுத்து உணர்ந்துகொள்க. முன்னூல்களில் பல இலக்கணிகள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு நோக்கம் பற்றிச் சொல்லுகளுக்குத் தமக்கிசைய ஒவ்வொருவகையை வகுத்துவைத்தனர். பின்னூல்களாகிய நன்னூல் முதலிய பன்னூல்களிலோ அவைகளை அங்கங்கே திரட்டிக்கூறியிருக்கின்றனர். ஆகையால் இக்காலத்தில் அவற்றுள் எந்தவகையைப்பிடித்து எந்த முறையாயிலக்கணங்கூறவேண்டுமென்று இலக்கணங்கூறப்புகுதுவோர் மயக்கங்கொள்ளாதபடி, பெயருக்கும் இனிவரும் வினைக்கும் முதனிலைவகை, நாமநிலைவகை முதலிய சில முறைகளை ஏற்படுத்தியதென்க. தன்னையும் பொருளையும் உணர்த்தும் என்னும்

## பெயர்ச்சொல் மூவிடத்திலும் தன்னையும் இருதிணை யைம்பாற்பொருளையும் உணர்த்தும் தன்மை.

162. இனி தன்னையும் இருதிணையைம்பாற்பொருளையும் உணர்த்துஞ்சொற்கள், படர்க்கையிடத்தினின்று தன்னை உணர்த்தியவிடத்து, திணைபாற்பொருளை சிறப்புவகையாகவும் பொதுவகையாகவும் உணர்த்துமென்பது பொதுவிதியாதலால், அப்பொதுவிதிப்படி பெயர்ச்சொல்லும் படர்க்கையிடத்தில் நின்று சிறப்புவகை பற்றித் தன்னை உணர்த்தியவிடத்து, இருதிணையைம்பாற்பொருளை சிறப்புவகையும் பொதுவகையுமாகிய இரண்டையும் உணர்த்துமெனவும்; மற்ற தன்மை முன்னிலையிடங்களிலோ பொதுவகையாகிய ஒன்றை மாத்திரமே உணர்த்துமெனவுங்கொள்க. இனிக் கூறப்படும் வினைகளுக்கும் இவ்வாறே.

1-வது.

மேற்கூறிய முறையே படர்க்கையிடத்தில் சிறப்புவகை பொதுவகைபற்றித் தன்னை உணர்த்தி, இருதிணையைம்பாற்பொருளைச் சிறப்புவகைபற்றி உணர்த்தும் பெயருக்கு இலக்கணங்கூறு முறை.

பொன்னன் நல்லன். இவ்வாக்கியத்தில்

$பொன்னன்... ஒருமொழி, பொருளால் வந்த காரணவாக்கச்சிறப்புப் பெயர், இயற்சொல், இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப்பகுபதம், உயர்திணையாண்பாற்படர்க்கை, வினைமுதற் பொருளுடை முதலாம் வேற்றுமையெனக்கூறுக.

---

விதிக்கு "இருதிணை யைம்பாற்பொருளையும் தன்னையும்" என்றுகூறிய நன்னூல் சூத்திர விதியே ஆதாரமென்க.

$பொன்னன்... (பொருளால் வந்த) (காரணவாக்கச்சிறப்புப்பெயர்) (வினைமுதற்பொருளுடை முதலாம் வேற்றுமை) (இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகுபத ஒருமொழி) (படர்க்கை) (உயர்திணையாண்பால்)

இவற்றுள், பொருளால் வந்த என்பது முதனிலை வகையும், காரணவாக்கச் சிறப்புப்பெயர் என்பது நாமநிலை வகையும், வினைமுதற் பொரு

2-வது.

படர்க்கையிடத்தில் சிறப்புவகை பொதுவகைபற்றி தன்னை உணர்த்தி, இருதிணையைம்பாற் பொருளைப்பொதுவகை பற்றி உணர்த்தும் பெயர்களுக்கிலக்கணங் கூறுமுறை.

| | | |
|---|---|---|
| | வந்தான். | |
| தான் | வந்தாள். | எனவரும் வாக்கியத்தில் |
| | வந்தது. | |

தான்... பொருள் வழியாய் வந்த இடுகுறி மரபுப் பொதுப்பெயர்; இரு திணை முக்கூற்றொருமைப் படர்க்கை.

தாம் வந்தார்கள் வந்தன எனவரில் இருதிணை இருகூற்றுப் பன்மையெனக்கூறுக. தான் வந்தாய் தாங்கள் வந்தீர்கள் என முன்னிலை வினை

---

ருடை முதலாம் வேற்றுமையென்பது, கடைநிலை வகையுமாகிய சிறப்புவகை பற்றித் தன்னை உணர்த்தும் வகை; இயற்சொல் என்பது முதல் ஒருமொழி என்பதுவரை, பொதுவகைபற்றித் தன்னை உணர்த்தும் வகை; படர்க்கையென்பது தானநிலை வகை; உயர்திணையாண்பால் என்பது, சிறப்புவகைபற்றி இருதிணையைம்பாற் பொருளை உணர்த்தும் வகை. பொதுவகைப்பற்றி இருதிணையைம்பாற் பொருளை உணர்த்தும் வகையோடு நால்வகை கூறவேண்டுவதாயினும், இருதிணையைம்பாற் பொருளை உணர்த்துஞ் சிறப்புவகை கூறியவிடத்து மேற்படி பொதுவகையும், பொதுவகை கூறியவிடத்து மேற்படி சிறப்புவகையும், ஒரே சொல்லினிடத்து உடன்கூறப்பெறுவாகையால், அவற்றுள் ஒன்று நீங்க ஒரு சொல்லுக்கு முப்பகுப்பிலக்கணமாத்திரமே பெறப்படுமென்றறிக.

இலக்கணங் கூறும் நடையும் மேலே கூறிய வகைகளைப்பற்றி வருமுறைப்படி கூறவேண்டுமென்பதில்லை; இசைந்தபடி முன்பின்னாக மாற்றிக்கொள்ளலாம்.

இப்படி ஒவ்வொரு சொல்லுக்கும் தன்னை உணர்த்தும் பொதுவிலக்கணமுழுவதுங்கூறுவதாயின் நுட்பமுறையென்னப்படும். ஆகையால் அதை விட்டுவிட்டு மற்றை யிலக்கணங்களைக்கூறுவதும் அவசியமானவிடத்து, அப்பொதுவிலக்கணத்தில் இரண்டொன்றைச் சேர்த்துக்கூறுவதும் சாதாரண முறையென்னப்படும். ஆகவே இனி இங்கே காட்டப்படுஞ் சொல்லுகளுக்கு எல்லா இலக்கணங்களையும் விரியக்கூறாமல், சாதாரண முறையை எடுத்துக்கொண்டு மற்றைச் சொற்களினின்று வேறுபடுத்துவதற்குறிய விசேஷ இலக்கணமாத்திரமே கூறப்படும். அவன் எவன் என

களைக்கொள்ளுமாயின், படர்க்கைமுன்னிலையிடம் பற்றி வந்த வழுவமைதியெனக் கூறுக.

இப்பெயர்கள் பொருட்பெயர்கள்வழி வந்தமையால் பொருள் வழியாய் வந்தவெனக் கூறப்பட்டது. இனிவரும் யான் யூம் நீ நீர் என்பவைகளுக்குமிப்படியே.

ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால் என ஐம்பாலில் மூன்று கூறு ஒருமையும் இரண்டு கூறு பன்மையுமாதலால், இருதிணை முக்கூற்றொருமை இருதிணை இருகூற்றுப்பன்மையென வந்தன. முக்கூற்றொருமையை முப்பாலொருமையென்றும், இருகூற்றுப் பன்மையை இருபாற் பன்மையென்றுங் கூறலாகும்.

வில்லி { இவன். இவள். இது. } எனவரும் வாக்கியத்தில்

வில்லி... பொருளால் வந்த காரணவாக்கச் சிறப்புப்பெயர்; இருதிணை முக்கூற்றொருமைப் படர்க்கை.

வில்லிகள் இவர்கள் இவைகளெனவரில், இருதிணை இருகூற்றுப் பன்மையென்க.

நொண்டி { இவன். இவள். இது. } எனவரும் வாக்கியத்தில்

நொண்டி... தொழிலால் வந்த காரணவாக்கச்சிறப்புப்பெயர்; இருதிணை முக்கூற்றொருமைப்படர்க்கை.

நொண்டிகள் இவர்கள் இவைகளெனவரில் இருதிணை இருகூற்றுப் பன்மையென்க. இகரவிகுதி பெண்பாலுக்கன்றி இருதிணை ஒருமைக்கும், கள்விகுதி பலவின்பாலுக்கன்றி இருதிணைப் பன்மைக்கும் வந்தனவறிக.

தந்தை { இவன். இது. } எனவரும் வாக்கியத்தில்

தந்தை... முறைப்பொருளால்வந்த காரண மரபுச்சிறப்புப்பெயர்; இருதிணை யாணொருமைப் படர்க்கை.

தாய் இவள் இதுவெனவரில், இடுகுறி மரபுச்சிறப்புப்பெயர்; இருதிணைப்பெண்ணொருமைப்படர்க்கை யென்க. தந்தை தாய் என்பவற்றின் பன்மைகளை, இருதிணை ஆண்பன்மைப் படர்க்கை, பெண்பன்மைப் படர்க்கையெனக் கூறுக.

ஆண் இவன் இது; சாத்தன் இவன் இது; பெண் இவள் இது; சாத்தி

---

வரும் பெயர்களுக்கு சுட்டுப்பொருளில் வினைப்பொருளில் வந்த காரணவாக்கச்சிறப்புப்பெயர் எனக்கூறி, மற்றும் இலக்கணங்களையுங்கூறிக்கொள்க.

இவள் இது எனவரில், ஆண்பெண் என்பவை சாதிபற்றிய வடிவுக்குண வியல்பாய்வந்த இடுகுறி மரபுப் பொதுப்பெயரும், சாத்தன் சாத்தி என்பவை பொருளியல்பாய்வந்த இடுகுறி மரபுப்பெயருமாய், ஆணொருமைப்படர்க்கை பெண்ணொருமைப் படர்க்கையென்றும்; இவற்றின் பன்மைகளை ஆண்பன்மைப்படர்க்கை பெண்பன்மைப் படர்க்கையென்றுங்கொள்க.

யானை வந்தது. வந்தன. } எனவரும் வாக்கியத்தில்

யானை... பொருளியல்பாய் வந்த இடுகுறி மரபுச்சிறப்புப்பெயர்; அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை.

அலரி பூத்தது. பூத்தன. } எனவரும் வாக்கியத்தில்

அலரி... தொழிலால் வந்த காரண மரபுச்சிறப்புப்பெயர்; அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை.

இகரவிகுதி இங்கே வினைமுதற் பொருளை உணர்த்தி வந்தது.

புளி காய்த்தது. காய்த்தன. } எனவரும் வாக்கியத்தில்

புளி... குணவாகுபெயராய்வந்த காரணவாககச்சிறப்புப்பெயர்; அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை.

திருவள்ளுவர் இது. இவை. } எனவரும் வாக்கியத்தில்

திருவள்ளுவர்... கர்த்தாவாகு பெயராகிய காரணவாக்கச் சிறப்புப்பெயர்; அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை.

இது குறிப்புச்சொல்லாகையால் அஃறிணையென வந்தது வழுவமைதியன்று. அஃறிணைப் பொதுப்பாலை அஃறிணை இருபாலென்றும், பால்பகா அஃறிணையென்றும் கூறலாகும்.

இவ்வஃறிணைப் பொதுப்பெயர்களில் கள்விகுதி சேருமாயின், பொது நீங்கிச் சிறப்பாகுமென்க.

ஆள் இவன். இவள். } எனவரும் வாக்கியத்தில்

ஆள்... பொருளியல்பாய் வந்த இடுகுறி மரபு பொதுப்பெயர்; உயர்திணை இருபாலொருமைப்படர்க்கை. கள்விகுதி சேர்ந்தால் பொதுநீங்கிப் பலர்பாலாம்.

ஊமை இவன் இவள்; பேதை இவன் இவள் எனவரும் குணப்பெயர்களுமிப்படியே. ஊமையிது பேதையிதுவென அஃறிணையொருமைக்கும் வந்தால் இருதிணை முக்கூற்றொருமையாம். ஒருவர் என்பது ஆடவருக்கும்

பெண்டிர்க்கும் பொதுவாகிய பலர்பால் முடிவுபெறுமாகையால் பலர்பால் முடிவுடை உயர்திணை யொருமைப்படர்க்கையெனக்கொள்க. வேந்து உயர்ந்தது, தெய்வம் சிறிற்று எனவரில் அஃறிணை முடிவுடை உயர்திணைப் படர்க்கைப்பெயரெனவும்; சூரியன் உதித்தான் உதித்தது எனவரில் பெண் பானீங்கிருதிணை யொருமைப் படர்க்கைப்பெயரெனவும் கொள்க.

3—வது.

**தன்மை** முன்னிலையிடங்களில் சிறப்புவகை பொதுவகை பற்றித்தன்னை உணர்த்தி இருதிணையைம்பாற் பொருளை பொது வாய் உணர்த்தும் பெயர்களுக்கிலக்கணங் கூறுமுறை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நான் | மகன். மகள். பூதம். | நாம் | மக்கள். பூதங்கள். | நீ | மகன். மகள். பூதம். | நீர் | மக்கள். பூதங்கள். |

எனவரும் வாக்கியங்களில நான், நாம், நீ, நீர் என்பவைகளுக்கு தான், தாம் என்பவைகளுக்கொத்த இலக்கணங்கூறி, தன்மை முன்னிலையென மாற்றிக்கொள்க. இனி மனுஷர் எல்லாம், மிருகங்களெல்லாம், நாங்களெல்லாம், நீங்களெல்லாம், அவர்கள் எல்லாம், அவைகளெல்லாம் எனவருவதில், எல்லாம் என்பது இருதிணை மூவிடப் பன்மைப் பெயரெனவும்; எல்லாரும் எனவரில் பலவினீங்கிய இருதிணை மூவிடப் பன்மைப் பெயரெனவுங் கூறுக.

வந்தான், சொன்னான், வந்தேன், சொன்னேன், வந்தாய், சொன்னாய் எனவரும் வினையாலணையுங் காரணவாக்கப்பெயர் மூவிடத்திலும் வருமாகையால், இருதிணையைம்பாற் பொருளை அந்தந்த இடத்துக்குத்தக்கபடி மேலே கூறியவாறு கூறியமைத்துக்கொள்க.

---

## B. OF VERBS.

## வினைக்கு இலக்கணங் கூறுமுறை.

163. **வினையானது** சிறப்பு வகைபற்றித்தன்னை உணர்த்து மிடத்து தோன்றல்வகை, முதனிலைவகை, இடைநிலைவகை, எதிர் நிலைவகை, இறுதிநிலைவகை, தானநிலைவகையென ஆறுவகை நிலையாலும் உணர்த்தும்.

தோன்றல்வகையாவது, தெரிநிலையுங் குறிப்புமாகக் காணப்படும் பிரிதானவகை, முதனிலை வகையாவது செயப்படு பொருள் குன்றியதும்,

செயப்படு பொருள் குன்றாததும், பிறவினையுமாய் நின்று, செய்வினையும், செயப்பாட்டு வினையுமாகிய பகுதி வேறுபாட்டாலாகும்வகை. இடைநிலை வகையாவது, காலவேறுபாட்டாலாகும்வகை. எதிர்நிலைவகையாவது, உடன்பாடும் எதிர்மறையுமாய்வரும்வகை. இறுதிநிலைவகையாவது, முற்றாகவும், எச்சமாகவும்வரும்வகை. தானநிலைவகையாவது, மூவிடம்பற்றிவரும் வகை. ஆகவே வினைக்கும் தன்னைஉணர்த்துஞ் சிறப்புவகை, பொதுவகையும்; இருதிணையைம்பாற்பொருளைஉணர்த்துஞ் சிறப்புவகை பொதுவகையுமாகிய நால்வகை உண்டென்றும் செயப்படுபொருள்குன்றியதும் குன்றாததும், பிறவினையுமாகிய செய்வினை செயப்பாட்டுவினையாய்வரும் தெரிநிலையும், குறிப்புமாக, காலவேறுபாட்டோடு, விதியாயாவது, மறையாயாவது, முற்றாகவும், எச்சமாகவும்வருவதே தன்னைஉணர்த்துஞ் சிறப்புவகையென்றும்; மற்றை மூவகையும் பெயருக்குக்கூறியவாறே இதற்கும் பொருந்துமெனவுங் கொள்க.

சிறப்புவினை, பொதுவினை, திணை பாற் பொருளை உணர்த்தும் வகையுளடங்குமென்க.

## 1–வது.

படர்க்கையிடத்தில், சிறப்புவகை பொதுவகைபற்றித்தன்னை உணர்த்தி, இருதிணையைம்பாற்பொருளை சிறப்புவகைபற்றி உணர்த்தும் வினைகளுக்கிலக்கணங் கூறுமுறை.

### (1) தெரிநிலை.

ஓடினன் சாத்தன், எனவரும் வாக்கியத்தில்

§ஓடினன், ஒருமொழி, செயப்படு பொருள் குன்றிய தன் வினையில் செய்வினையாய்வந்த இறந்தகாலங்காட்டும் உயர்திணையாண்பாற்படர்க்கை, தெரிநிலைவிதியியல்பு வினைமுற்று, இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகுபதம் எனக்கூறவேண்டும்.

---

§ஓடினன்... (தெரிநிலை) (செயப்படு பொருள் குன்றிய தன்வினையில் செய்வினையாய் வந்த) (இறந்த காலங் காட்டும்) (விதி) (இயல்பு வினைமுற்று) (இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகுபத ஒருமொழி) (படர்க்கை) (உயர்திணை யாண்பால்)

இவற்றுள், தெரிநிலையென்பது, தோன்றல் வகையும்; செயப்படு பொருள் குன்றிய தன் வினையில் செய்வினையாய் வந்த என்பது, முதனிலை வகையும்; இறந்த காலங் காட்டுமென்பது, இடைநிலை வகையும்; விதி என்

விதி என்பது உடன்பாட்டைக்குறிக்கும். இயல்புவினைமுற்று ஐம்பால் விகுதிகாட்டும் வினைமுற்று.

வெட்டினான் எனவரில், செயப்படுபொருள்குன்றாத் தன்வினையில் செய்வினையாய் வந்ததென்றும்; ஓட்டினான் எனவரில், செயப்படுபொருள் குன்றிய தன்வினை வழிப்பிறவினை யாகிச் செய்வினையாய் வந்ததென்றும்; வெட்டுவித்தான் எனவரில், செயப்படுபொருள்குன்றாத தன்வினை வழிப்பிறவினையாகிச் செய்வினையாய்வந்ததென்றும்; வெட்டப்பட்டான் எனவரில், செயப்படுபொருள்குன்றாத தன்வினையாகிய செய்வினைமேல் செயப்பாட்டுவினையாய் வந்ததென்றும்; ஓட்டப்பட்டான் எனவரில், செயப்படுபொருள்குன்றிய தன்வினை வழிப்பிறவினையாகிய செய்வினைமேற் செயப்பாட்டுவினையாய் வந்ததென்றும்; வெட்டுவிக்கப்பட்டான் எனவரில், செயப்படுபொருள் குன்றாத தன்வினை வழிப்பிறவினையாகிய செய்வினைமேற் செயப்பாட்டுவினையாக வந்ததென்றுங்கூறிக்கொள்க.

மற்றப்பால்களும் காலங்களு மாறிவருமிடத்தும், இப்படியே கண்டு கூறிக்கொள்க. மறைவினையெனின், முக்காலத்துக்கும் பொதுவானவெனக்கூறுக. நடக்கின்றிலன், நடந்திலன், நடப்பதிலன் என மறை வரில், காலந் தனித்தனியாகவேகூறுக. இனிவரும் வினைகளுக்குமிப்படியே.

செயப்படுபொருள் குன்றியவினை பிறவினையாலன்றி, அதன்மேல் செயப்பாட்டுவினைவராது.

இப்படியாகவே செயப்படுபொருள் குன்றியவினையும், குன்றாவினையும் தன்வினையாகநிற்க, அதன் வழிப்பிறவினைவருமென்றும்; தன்வினையும் பிறவினையுஞ் செய்வினையாகநிற்க, அதன்வழிச் செயப்பாட்டுவினை வருமென்றும்; செயப்படுபொருள்குன்றியவினையுஞ், செயப்படுபொருள்குன்றாவினையும், இபற்கைப்பகுதியுடையவென்றும்; பிறவினையுஞ் செயப்பாட்டுவினையும், செயற்கைப்பகுதியுடையவென்றும்; பிறவினைக்கெதிரியதாய்த்தன்வினையெனவும், செயப்பாட்டுவினைக்கெதிரியதாய்ச் செய்வினையெனவும் வந்தாலும், அத்தன்வினையுஞ் செய்வினையும் வேறு வேறு வகை வினைகளாகாமல், செயப்படுபொருள்குன்றியவினையுங் குன்றாதவினையுமே தன்வினையெனவும்; அத்

---

பது, எதிர்நிலை வகையும்; இயல்பு வினைமுற்றுஎன்பது, இறுதி நிலைவகையுமாகிய தன்னைஉணர்த்தும் சிறப்புவகை. இயற்சொல் என்பதுமுதல் ஒருமொழி என்பதுவரை, தன்னையுணர்த்தும் பொதுவகை. படர்க்கை என்பது, தானநிலைவகை. உயர்திணையாண்பால் என்பது, திணைபாற்பொருளை உணர்த்துஞ் சிறப்புவகை.

தன்வினையும் பிறவினையுமே, செய்வினை எனவும்பெயர்பெற்று நின்றமையால், அத்தன் வினையுஞ் செய்வினையும் நீங்கப் பகுதிவகையால் செயப்படுபொருள்குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை, பிறவினை, செயப்பாட்டு வினையென நால்வகை மாத்திரமே உண்டென்றுங்கொள்க. இன்னும் இவ்வினை வகைகளைத் தொகுத்துச் செய்வினை செயப்பாட்டு வினையென இரண்டு வகை மாத்திரமே உண்டெனக்கொண்டு, அவற்றுள் ஒன்றாகிய செய்வினையுள்ளே தன் வினை பிறவினையும்; தன்வினையுள்ளே செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள்குன்றாத வினையும், பகுதி வகையாக விரியுமெனக்கொள்வதும், ஓர் முறையாம். செய்வினையைத்தந் தொழிலென்றும், செயப்பாட்டு வினையைத் தம்மினாகிய தொழிலென்றும், தன் வினையை இயற்றப்படும் வினையென்றும், பிறவினையை ஏவப்படும் வினையென்றும், ஓரேவல்வினை, ஈரேவல் வினையென்றுங்கூறுவர்.

பலகால் பல இலக்கணிகள் வகுத்த இவ்வினை வகைகள் பல உண்டாயிருப்பினும், நன்னூலார் அவ்வகைகள் யாவற்றையும் அவ்வாறே வகுத்துக் கூறப்புகின் மயங்குமென்பதினால், உடன்பாடெதிர் மறைபற்றி தெரிநிலையுங் குறிப்புமாகிய தோன்றல் வகை ஒன்றை மாத்திரமே முக்கியவகையாகவெடுத்துக்கொண்டு, செயப்படுபொருள் குன்றியவினையையும், குன்றாவினையையும் "செய்பொருளாறுந் தருவது வினையே" என்பதனாலும்; பிறவினையை, "செய்யென் வினைவழி, விப்பி தனிவரில்–செய்வியென்னேவல் இணையின் ஈரேவல்" என்பதனாலும்; செயப்பாட்டு வினையை, "தம்மினாகிய தொழின்மொழிவரினே" என்பதனாலும், உணர்த்தி இவையெல்லாம் பகுதி வேறுபாட்டாலாகும் வினைகளாககொண்டனர்.

இப்படிப் பலவகையாய் வரும் எல்லாவற்றையுஞ் சேர்த்து இலக்கணக் கூறப் புகுதுவோர் மயக்கங்கொள்ளாதபடி, தோன்றல் வகை முதனிலை வகைமுதலிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதென்க. இனிக் கூறப்படும் வினைகட்குச் சாதாரண முறை ஒன்றையே உபயோகிக்கலாகும்.

## (2) குறிப்பு

இவன் இப்போது பொன்னன் என்னும் வாக்கியத்தில்,

பொன்னன்... பொன், என்னும்பொருட் பெயரடியாய்ப்பிறந்த, செயப்படு பொருள் குன்றாத, நிகழ்காலங்காட்டும், உயர்திணையாண்பாற் படர்க்கை, உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்று.

முன்னே பொன்னன் எனவரில், இறந்த காலங் காட்டுமெனவும்; இனிப் பொன்னன் எனவரில், எதிர்காலங் காட்டுமெனவும் கூறிக்கொள்க.

பொன்னனிலன் எனவரில், மறைக்குறிப்பு வினைமுற்றாம். பொன்

னன் ஆயினன் எனவரில், ஆக்கவினைக் குறிப்பாம். இன்னும் இடப்பெயரடி, காலப்பெயரடி முதலியவற்றால் மற்றைப் பால் காலங்களில் வருவனவற்றிற்கும் இப்படியே கூறிக்கொள்க.

2-வது.

படர்க்கையில் சிறப்புவகையினும், பொதுவகையினும், தன்னை உணர்த்தி, இருதிணையைம்பாற் பொருளை பொதுவகைபற்றி உணர்த்தும் வினைகளுக்கு இலக்கணங்கூறுமுறை.

(1) தெரிநிலை.

| | | |
|---|---|---|
| புலம்பும் | அவன். அவள். அது. அவை. | எனவரும் வாக்கியத்தில், |

புலம்பும்... எதிர்காலங்காட்டும், செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பொதுத்திணை, பலர்பால் நீங்கிய நாற்பாற்படர்க்கைத் தெரிநிலை இயல்புவினைமுற்று.

நிகழ்காலங் காட்டுமெனவுங்கூறலாம்.

(2) குறிப்பு.

| | | |
|---|---|---|
| யார் | அவன். அவள். அவர்கள். | எனவரும் வாக்கியத்தில், |

யார்... முக்காலத்துக்கும் பொதுவான, உயர்திணை முப்பாற்படர்க்கை, வினைக்குறிப்பு வினைமுற்று.

என்ன? அது, அவை எனவரில் அஃறிணை இருபாற்படர்க்கையெனக்கூறுக.

என்னவென்பது, எவன் என்பதின் மரூஉ. என், என், என்னை எனவும் வரும். நான் யார், நீ யார், நானென்ன, நீயென்ன எனத் தன்மை முன்னிலை இடங்களில்வரில் புதியன புகுதலாய், மூவிடம்பற்றிவந்தமையுங்காண்க.

3-வது.

தன்மை முன்னிலை இடங்களில் சிறப்புவகை பொதுவகை பற்றித் தன்னை உணர்த்தி, இருதிணையைம்பாற்பொருளை பொதுவகையினுணர்த்தும் வினைகளுக்கு இலக்கணங்கூறுமுறை.

## (1) தெரிநிலை.

வந்தேன் யான் என்னும் வாக்கியத்தில்,

வந்தேன்... இறந்த காலங்காட்டும் இருதிணை முக்கூற்றொருமைத் தன்மைத் தெரிநிலை இயல்பு வினைமுற்று.

வந்தோம், எனப்பன்மையாகில், இருதிணை இருகூற்றுப் பன்மையெனக்கூறுக.

நானும், நீயும், அவனும் வந்தோம் எனவரில், வந்தோம் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையெனக்கூறுக.

மற்றை முன்னிலைபடர்க்கை இடங்களை உட்படுத்திநின்றமையால், உளப்பாட்டுத் தன்மையென்னப்பட்டது.

வந்தாய் நீ என்னும் வாக்கியத்தில்,

வந்தாய்... இறந்தகாலங்காட்டும் இருதிணை முப்பாலொருமை முன்னிலைத்தெரிநிலை இயல்பு வினைமுற்று.

வந்தீர் எனப்பன்மையாகில், இருதிணை இருகூற்றுப்பன்மை முன்னிலையெனக்கூறுக.

நீயும் அவனும் வந்தீர் எனவரில், வந்தீர், உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றாம்; படர்க்கை இடத்தை மாத்திரமுட்படுத்தும்.

வா நீ, வாருங்கள் நீங்கள், எனவருவதில்: வா, வாருங்கள், என்பவற்றிற்கு முன்னிலைவினைக்குரிய இலக்கணங்களைக்கூறி, ஏவல் வினைமுற்றெனமுடித்துக்கொள்க.

இவை யெதிர்காலத்துக்கேயன்றி, இறந்தகால நிகழ்காலங்களுக்கு வாரா.

## (2) குறிப்பு.

| | |
|---|---|
| குழையினேன் யான். | குழையினாய் நீ. |
| குழையினோம் யாம். | குழையினீர் நீர். |

எனவரும் வாக்கியங்களில், குழையினேன், குழையினோம், குழையினாய், குழையினீர் என்பவைகளுக்குத் தன்மை முன்னிலை வினைகளுக்கொத்த இலக்கணங்கூறி, பொருட் பெயரடியாகப்பிறந்த குறிப்பு வினைமுற்றெனமுடித்துக்கொள்க.

இனி வாழ்க, வாழிய, எனவரும் வியங்கோள்வினைமுற்றுகளும்; வேண்டும், படும், கூடும், ஆகும் எனவரும் தெரிநிலை வினைமுற்றுகளும்; உண்டு, இல்லை எனவரும் குறிப்பு வினைமுற்றுகளும்; செய்த, செய்கின்ற, செய்யும் எனவரும் தெரிநிலைப்பெயரெச்சங்களும்; செய்து, செய, செயின் எனவரும் தெரிநிலைவினையெச்சங்களும்; பொன்ன, கருவூரிய, வருஷத்திய,

முகத்த, வெளுத்த, ஊண எனவரும் குறிப்புப்பெயரெச்சங்களும்; மெல்ல, பைய எனவரும் குறிப்பு வினையெச்சங்களும்; இவற்றின் எதிர்மறைகளும்; திணை பாலிடங்களுக்குப் பொதுவாகவே வருமாகையால், இருதிணையைம் பால் மூவிடமெனக்கூறி மற்றை இலக்கணமுங்கொள்க. எச்சங்களுக்கு இன்ன வாய்ப்பாட்டெச்சமெனவுங்காட்டுக.

வாழக்கடவன், வாழ்வானாக, வாழக்கடவேன், வாழ்வேனாக, வாழக் கடவாய், வாழ்வாயாக என வியங்கோள் மூவிடங்களிலும், திணை பாலிடங் களுக்குத் தனித்தனி வரில், அந்தந்த இடத்து வினைமுற்றுகளுக்கொத்த இலக்கணங் கூறி, சிறப்புவியங்கோள் வினைமுற்றென முடித்துக்கொள்க.

வாழட்டும், செய்யட்டும் என்பது மூவிடப் பொதுவியங்கோளாயினும், நீ வரட்டுமென்று காத்திருந்தேன், நீங்கள் வரட்டுமென்று காத்திருந்தேன், என இடையில் வரும் அப்பிரதானங்களிலன்றி, பிரதான வாக்கியங்களிலாவது, தனிவாக்கியங்களிலாவது, முன்னிலை ஒருமை முடிவுக்கும் பன்மை முடிவுக்கும் வாரா.

---

## C. CONJUNCTIONS AND PREPOSITIONS.

## இடைச்சொல்லுக்கிலக்கணங் கூறுமுறை.

---

161. இடைச்சொற்களை நிறுத்தி, அவை தனித்தியலின்றி குறியுருபாகவேனும், சொல்லுருபாகவேனும், வேற்றுமையுருபு, விகுதியுருபு, இடைநிலையுருபு, சாரியையுருபு, ஒப்புருபு, தத்தம் பொருளுருபு எனவரும் ஆறு வகையுருபுகளிலொன்றாய் அவற்றிற்குரிய பொருள்களோடு, பெயர் வினைகளுக்குப் பின்னாகவேனும் முன்னாகவேனும், அகத்தும், புறத்தும், ஒன்றாயினும் பலவாயினும் வரும் தன்மையைக் கூறுவதே, இடைச்சொற்களுக்கிலக்கணங் கூறுமுறையாம்.

உ—ம்.

செய்+த்+ஆன்=செய்தான் இதில்,

ஆன்... ஆண்பாற் பொருள் தரும் விகுதிச்குறியுருபாய், வினையின் பின் னொன்றிய அகத்துறுப் பிடைச்சொல்.

த்...... இறந்த காலப் பொருள் தரும் இடைநிலைக் குறியுருபாய், வினை யின் பின்னொன்றிய அகத்துறுப் பிடைச்சொல்.

மரம்+அத்து+ஐ=மரத்தை இதில்,

ஐ...... செயப்படுபொருள் தரும் 2-ம் வேற்றுமைக்குறியுருபாய், பெயர்ப் பின்னொன்றிய புறத்துறுப் பிடைச்சொல்.

அத்து........ இசைதற் பொருள் தருஞ் சாரியைக் குறியுருபாய், பெயர்ப் பின்னொன்றிய புறத்துறுப் பிடைச்சொல்.

ஓ ஓ பெரியன். இதில்,

ஓ ஓ ......... தத்தம் பொருளுருபில் உயர்வு சிறப்புப்பொருள் தருங் குறி யுருபாய், பெயரின் முன்னொன்றிய புறத்துறுப் பிடைச் சொல்.

வருதற்கும் உரியன். இதில்,

உம்........... தத்தம் பொருளுருபில் எதிர்மறைப்பொருள் தரும் குறியுரு பாய், பெயர்ப்பின்னொன்றிய புறத்துறுப் பிடைச்சொல்.

நீயும் கேண் மதி அத்தை. இதில்,

மதி அத்தை... தத்தம்பொருளுருபில் முன்னிலை அசைத்தற் பொருள் தரு ம் குறியுருபாய், வினையின் பின்பலவொன்றிய புறத்துறுப் பிடைச்சொற்களாம்.

இனிப் போகேன். இதில்,

இனி......... தத்தம் பொருளுருபில் எதிர்வுப் பொருள் தரும் குறியுரு பாய், வினையின் முன்னொன்றிய புறத்துறுப் பிடைச்சொல்.

நல்ல குலம் என்று, இதில்,

என்று......... தத்தம் பொருளுருபில் பெயர்ப்பொருள் தரும் தெரிநிலை வினையெச்சச் சொல்லுருபாய், பெயர்ப்பின்னொன்றிய புறத் துறுப் பிடைச்சொல்.

கற்றனம் என்று, என வினையின் பின்னொன்றிவரில் வினைப்பொருட ரும் எனக் கூறுக.

அவன் வந்தபோது, இதில்,

போது...... தத்தம் பொருளுருபில் ஏழாம் வேற்றுமைப் பெயர்ச்சொல் லுருபாய், வினையின் பின்னொன்றிய புறத்துறுப்பிடைச் சொல்.

அம்மா பெரிது. இதில்,

அம்மா...... தத்தம் பொருளுருபில் அதிசயப் பொருள் தரும் எட்டாம் வேற்றுமை பெயர்ச்சொல்லுருபாய், வினையின் முன்னொ ன்றிய புறத்துறுப் பிடைச்சொல்.

நானல்ல அவன. இதில்,

அல்ல...... தத்தம் பொருளுருபில் பிரிநிலைப்பொருள் தரும் மறைச்

குறிப்பு வினைமுற்றுச் சொல்லுருபாய், பெயரின் பின்ஞென்றிய புறத்துறப் பிடைச்சொல்.

---

## D. OF ADVERBS AND ADJECTIVES.

## உரிச்சொல்லுக்கு இலக்கணங்கூறுமுறை.

---

165. உரிச்சொற்களை நிறுத்தி அவை குறிப்பும், குணமும், இசையுமாகிய பண்புப்பொருளையுடையனவாய், பெயர் வினைகளை நீங்காது செய்யுட்கேயுரியதாய் வருந்தன்மையைக் கூறுவதே, உரிச்சொல்லுக்கிலக்கணங் கூறுமுறையாம்.

உ—ம்.

மழவிடைப்பவனி வந்தனரோ. இதில்,

மழவு... இளமையென்னும் குறிப்புப்பண்பை உணர்த்தி, பெயரைச்சார்ந்துவந்த உரிச்சொல்.

சாற்றுங்கொல், சாலச்சிரித்து. இதில்,

சால... மிகுதியென்னும் குறிப்புப்பண்பை உணர்த்தி, வினையைச்சார்ந்துவந்த உரிச்சொல்.

வார்கையான் இதில்,

வார்... நெடுமையென்னும் வடிவுக்குணப்பண்பை உணர்த்தி, பெயரைச் சார்ந்துவந்த உரிச்சொல்.

கடிமலர் இதில்,

கடி... நறுகந்தமென்னும் வாசனைக்குணப்பண்பை உணர்த்தி, பெயரைச் சார்ந்துவந்த உரிச்சொல்.

குளிறு வார்முரசம். இதில்,

குளிறு...ஒலிக்குமென்னும் இசைப்பண்பை உணர்த்தி, பெயரைச்சார்ந்து வந்த உரிச்சொல்.

பெயரைச் சார்ந்துவந்த உரிச்சொல், வினையைச்சார்ந்துவந்த உரிச்சொல் எனக்கூறுவதுந்தவிர, புதியன புகுதல் பற்றிப் பெயருரிச்சொல், வினையுரிச்சொல்லெனவுங்கூறலாகும்.

## 2. OF COMPOUND WORDS.

## தொடர்மொழி யிலக்கணம்.

166. தொகை நிலையாகவேனும் தொகா நிலையாகவேனும் ஆக்கத்தொடரும் அமைப்புத்தொடருமாகப் பெயரிறுதியாகவும் வினையிறுதியாகவும் நிற்குஞ்சொற்களை, முதலில் நிற்குஞ்சொல்லுடன் இணைவுதோன்றக் கூறுதலே தொடர்மொழிக்கிலக்கணங்கூறலாம்.

படைத்தலைவன் வந்தான். இதில்,

படைத்தலைவன்... நான்காம் வேற்றுமைத் தொகைநிலை யாக்கற்றொடர்மொழி, சிறப்புக்குணத்தால் வந்த காரணவாக்கச் சிறப்புப்பெயர், இயற்சொல்லிலணக்கண முடையதாகிய இயல்பு வழக்கு, வெளிப்படைப்பகுபதம், உய. திணை யாண்பாற்படர்க்கை, வினைமுதற்பொருளுடை முதலாம்வேற்றுமை.

கைக்குடை முறிந்தது. இதில்,

கைக்குடை......... ஏழாம்வேற்றுமை உருபும் பயனுந்தொக்கிய தொகை நிலை அமைப்புத்தொடர்மொழி, காரணமரபுச்சிறப்புப் பெயர், அஃறிணை இருபாற்படர்க்கை, வினைமுதற் பொருளுடை முதலாம்வேற்றுமை.

அரசன் காப்பாற்றினான். இதில்,

காப்பாற்றினான்.... இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலை யாக்கற்றொடர்மொழி வினைச்சொல், செயப்படுபொருள் குன்றாத தன்வினையில் செய்வினையாய்வந்த இறந்தகாலங்காட்டும் உயர்திணை யாண்பாற்படர்க்கைத் தெரிநிலை விதி இயல்பு வினைமுற்று.

கொற்றனைக் காலை முறித்தான். இதில்,

காலை முறித்தான்... இரண்டாம்வேற்றுமைத் தொகாநிலை யமைப்புத்தொடர்மொழி வினைச்சொல், செயப்படுபொருள் குன்றாத தன்வினையில் செய்வினையாய்வந்த இறந்தகாலங்காட்டும் உயர்திணை யாண்பாற்படர்க்கைத் தெரிநிலை விதி இயல்பு வினைமுற்று.

தொகாநிலையில், ஆக்கற்றொடர் அமைப்புத்தொடர் அருகிவருமென்க.

அவன் படித்திருக்கிறான் என இடைவினைமுடிவில்வரில்,

-படித்திருக்கிறான்..இறந்தகால வினையெச்சத் தொகாநிலை யமைப்புத்தொடர்மொழி வினைச்சொல், செயப்படுபொருள்குன்றாத தன்வினையில் செய்வினையாய்வந்த நிகழ்காலங்காட்டும் உயர்திணை யாண்பாற் படர்க்கைத்தெரிநிலை, விதி, இயல்புவினைமுற்றெனக் கூறுக.

இரு என்பது முடிந்ததை முற்றினதாகக் காட்டினமையால், முற்றுப்பொருளில்வந்த இடை, படியாதிருக்கின்றான் எனவரில், முடியாததை முற்றினதாகக் காட்டிவந்ததென்றும்; எழுந்திருந்தான் என்பதில், ஒருவினைப்பொருளே பொருளாகவந்ததென்றுங்கொள்க. படித்துவருகிறான் என்பதில் வா, நிகழ்வுப்பொருள்தரும் இடைச்சொல்லாய் நின்றதெனக்கொள்க. மற்றவைகளையுமிப்படியே காண்க. இப்படிப்பட்ட இடைவினைத்தொடர்களில், செயப்படுபொருள் குன்றியதையுங், குன்றாததையும், முதல்மொழி நோக்கியேகொள்க.

இவை யாவுந் தொடர்மொழியாயினும், ஒருமொழித்தன்மைப்பட்டு வாக்கியங்களில் தனிச்சொல்லைப்போல அங்கங்களாகவருகின்றமையால், அவைகளைப்பிரியாமல், இவ்வாறு இறுதியில்நின்றசொல்லை, முதலில் நிற்குஞ்சொல்லோடு தொடராலிணைத்துக்கொண்டு,பெயரிறுதிக்குப் பெயர்க்கொத்த இலக்கணமும், வினையிறுதிக்கு வினைக்கொத்த இலக்கணமுமே கூறவேண்டும். அப்போது இருமொழியுஞ் சேர்க்கப்பட்டொரு மொழிபோலிலக்கணம் பெறும்.

## IV. CONSTRUCTION.

## சொற்றொடர்பிலக்கணம்.

167. தனிமொழியாகவுந் தொடர்மொழியாகவும் வாக்கியாங்கங்களில் நின்ற சொற்கள், தொகைநிலையும் தொகாநிலையுமாய்நின்று, தாங்கொள்ளுஞ்சொல்லை ஈற்றிலேனும் முதலிலேனும், இடைப்பிறவால் பொருந்தியாவது பொருந்தாமலாவது, தனித்தும் அடுக்கியும் ஏற்றுவருமிலக்கணத்தைக் கூறுதலே,சொற்றொடர்பிலக்கணங் கூறுமுறையாம்.

ஆக்கத்தொடரும், அமைப்புத்தொடரும், ஒருமொழியைப்போலிலக்க

ணம்பெறுமென முந்திக்கூறிப்போந்தமையால், இங்கே சொற்றொடர்பென்பது அங்கத்தொடரை யெனக்கொள்க.

### 1-வது. தனிவாக்கியச்சொற்றொடர்பிலக்கணம்,

உ—ம்.

(1)


சாத்தன் வந்தான்; என்பதில்,

சாத்தன்......எழுவாய்த் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, வந்தான் என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

வந்தான்......முற்றுத்தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, சாத்தன் என்னுஞ்சொல்லை முதலிலேகொண்டது.

வந்தான் சாத்தன் எனவரில், வந்தான் என்னுஞ் சொல் சாத்தன்என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டதெனவும், சாத்தன் என்னுஞ் சொல் வந்தான் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டதெனவுங் கூறிக்கொள்க. ஈற்றிலும் முதலிலுஞ் சொற்களைக் கொள்ளுமென்பதற்கு(120)விதியைப்பார்க்க.

இப்படியாகவே, எழுவாயும் பயனிலையுமாகிய இரண்டுஞ் சக்கராகாரமாய், ஒன்றின் நுனி ஒன்றின் அடியைப்பிடித்துத் தொடர்ந்துவரும் என்பதாயிற்று.



இச்சக்கரத்துள் அவ்வாறு வருவதைக்காண்க.

தொகாநிலைத்தொடர்களில், வேற்றுமைத் தொகாநிலைதவிர, மற்றத் தொடர்களில் தொகாநிலையென உடன்கூறுவதை விட்டுவிடலாம். தொகைநிலையெனில் எல்லாவற்றிற்கும் அதைவிடாது கூறவேண்டியது.

தழுவுதொடர் தழாத்தொடர் என்பதை சந்திவிதிக்கேயன்றி, இங்கே கூறலாகாது; அதைச் சந்திவிதியிடத்துக்காண்க.

(2)

சாத்தன் மாட்டை அடித்தான்: என்பதில்,

சாத்தன்......எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல் பொருந்த அடித்தான் என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

மாட்டை... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, எழுவாய்கொண்ட அடித்தான் என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

அடித்தான்... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, சாத்தன் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

(3)

எடுத்தான் வில்லை ராமன்: என்பதில்,

எடுத்தான்... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த ராமன் என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

வில்லை... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, எழுவாய்கொண்ட எடுத்தான் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

ராமன்......... எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, எடுத்தான் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

(4)

ராமன் எடுத்தான் வில்லை: என்பதில்,

ராமன்......... எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, எடுத்தான் என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

எடுத்தான்... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, ராமன் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

வில்லை...... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, எழுவாய்கொண்ட எடுத்தான் என்னுஞ்சொல்லை முதலில் கொண்டது.

(5)

வேடன் மானை அம்பால் எய்தான்: என்பதில்,

வேடன்...... எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த எய்தான் என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

மானை...... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, எழுவாய்கொண்ட எய்தான் என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

அம்பால்...... வேற்றுமைத் தொகாநிலைத் தொடராய், இடைப்பிறவரல்

பொருந்தாது, எழுவாய் கொண்ட எய்தான் என்னுஞ் சொல்லை ஈற்றிலேகொண்டது.

எய்தான்...... வினைமுற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, வேடன் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

(6)

வந்தான் அவ்வூருக்குப்போன சாத்தன்: என்பதில்,

வந்தான்...... வினைமுற்றுத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, செய்பவனாகிய சாத்தன் என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

அவ்வூருக்கு...வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, சாத்தன் என்னுஞ்செய்பவனைக்கொண்ட போன என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

போன.........பெயரெச்சத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, சாத்தன் என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

சாத்தன்...... எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, வந்தான் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

(7)

வந்த சாத்தனைக்கண்டேன்: என்பதில்,

வந்த......... பெயரெச்சத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, சாத்தனையென்னுஞ் செயப்படு பொருட்சொல்லை ஈற்றிற்கொண்டது.

சாத்தனை...... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, நான் என்னுந் தொகைநிலை எழுவாய்கொண்ட கண்டேன் என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

கண்டேன்... வினைமுற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, தொகைநிலை எழுவாயாகிய நான் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

(8)

அந்தணரோ வாழ்க: என்பதில்,

அந்தணரோ... விளித்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, நீர் என்னுந் தொகைநிலை எழுவாய்கொண்ட வாழ்க என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

வாழ்க......... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, நீர் என்

னுந்தொகைநிலை எழுவாய்கொண்ட சொல்லை முதலிற்கொண்டது.

## 2-வது. ஒன்றித்தொடர் வாக்கியச் சொற்றொடர்பிலக்கணம்.

உ—ம்.

(1)

சாத்தன் கொடுத்ததைக் கொற்றன் வாங்கினன்: என்பதில்,

சாத்தன்...... எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்ாது, கொடுத்ததையென்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

கொடுத்ததை வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, வாங்கினன் என்னும் பிறகருத்தா வினைச்சொல்லை ஈற்றிற்கொண்டது.

இச்செயப்படுபொருள் வினையாலணையும் பெயராகையால், வினையெச்சம்போல, தன்கருத்தா வினை, பிறகருத்தா வினையைக்கொண்டு நிற்கும். (56) விதியைப் பார்க்க.

கொற்றன்... எழுவாய்த் தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, வாங்கினன் என்னுஞ் சொல்லை, ஈற்றிற்கொண்டது.

வாங்கினன்... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, கொற்றன் என்னுஞ் சொல்லை முதலிற் கொண்டது.

(2)

தூதன் வந்து காரியத்தைத் தெளிவாய் அறிவித்தான்: என்பதில்,

தூதன்........ எழுவாய்த் தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, அறிவித்தான் என்னுஞ் சொல்லை ஈற்றிற் கொண்டது.

வந்து......... வினையெச்சத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்த தன் கருத்தா கொண்ட அறிவித்தான் என்னுஞ் சொல்லை, ஈற்றிற் கொண்டது.

காரியத்தை... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, எழுவாய்கொண்ட அறிவித்தான் என்னுஞ்சொல்லை ஈற்றிற் கொண்டது.

தெளிவாய்... வினையெச்சத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, தன் கருத்தா கொண்ட அறிவித்தான் என்னுஞ் சொல்லை ஈற்றிற் கொண்டது.

அறிவித்தான்: வினைமுற்றுத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்ாது, தூதன் என்னுஞ் சொல்லை முதலிற் கொண்டது.

ஒன்றித்தொடர் வாக்கியத்தில் பயனிலையடுக்குமிடத்து, கடைசி முற்றுத் தவிர மற்றவை எச்சமாய் திரியுமென்பது விதியாகையால், தூதன் வந்தான் அறிவித்தான் என்பது, தூதன் வந்து அறிவித்தான் என வந்தது. (69) விதியைப் பார்க்க. தூதன் வந்து என்பது விசேஷணப் பொருளில் வந்த அப்பிரதான வாக்கியமாம். (56) விதியைப் பார்க்க. தூதன் வந்து என்னும் எச்சமுடிபை அப்பிரதான முடிபாய்க் கொண்டதுபோல தூதன் தெளிவாய் என்னும் எச்சமுடிபையும், அப்பிரதான முடிவாகக் கொள்ளலாகாதோவெனில், தூதன் வந்தான் அறிவித்தான் என்பதுபோல, தூதன் தெளிவானன் அறிவித்தான் என அப்பிரதான முடிபிற்குரிய பொருட் சிறப்பின்மையால், அவன் விரைவாய் வந்தான் என்பதில், விரைவாயென்பது, தனிவிசேஷணமானாற்போலத் தெளிவாயென்பதுந் தனிவிசேஷணமேயெனக்கொள்க.

பயனிலை ஒவ்வொன்றுஞ் செய்பவனைக் கொள்ளவேண்டுவதாகவே, இங்கே வந்து என்னுஞ் எச்சப்பயனிலை செய்பவனைக் கொள்ளாது முற்றைக் கொள்ளவேண்டுவது என்னவெனில், தன்கருத்தா வினையைக் கொண்டதென்பதினால் வந்தான் என்னும் முற்று தன் கருத்தாவைக் கொண்டெச்சப்பட்டு, அக்கருத்தாப் பயனிலையாகிய முற்றைத் தன்னெச்சமாக ஈற்றிற் கொண்டதெனக் கொள்க.

இனி, தூதன் என்னுஞ் சொல் எழுவாய்த் தொடராய், வந்து என்னும் எச்சப்பயனிலை கொண்டதெனவும், வந்து என்னும் எச்சப்பயனிலை அறிவித்தான்என்னும் முற்றைக்கொண்டதெனவுங் கூறலாகும். எச்சமடுக்குமாயின், இவ்வாறு கூறலாகாது. தூதன்சொல்ல யான்அறிந்தேன் என வருமிடத்து, தூதன் என்னும் எழுவாய் சொல்லவென்னும் எச்சப்பயனிலையையும், சொல்லவென்னும் எச்சப்பயனிலை தன் கருத்தாவை முதற்கொண்டதோடு ஈற்றிலே அறிந்தேன் என்னும் பிறகருத்தாவின் முற்றுப்பயனிலைச் சொல்லையுங் கொண்டதென்க.

(3)

நீர் வருவீரொன்றால் நன்மையாயிருக்கும்; என்பதில்,

நீர்........................ எழுவாய்த்தொடராய் இடைப்பிறவரல் பொருந்தாது, வருவீரொன்றால் என்னும் அமைப்புத்தொடர் சொல்லை ஈற்றிற்கொண்டது.

வருவீரோன்றால்.........எச்சத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, நன்மையாயிருக்குமென்னும் பிறகருத்தாக்கொண்ட அமைப்புத்தொடர்சொல்லை ஈற்றிற்கொண்டது.

நன்மையாயிருக்கும்.....முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது அதுவென்னுந் தொகைநிலை எழுவாய்ச்சொல்லை முதலிற்கொண்டது.

(4)

தலைசாற்றுங் கொல் சாலச்சிரித்து: என்பதில்,

தலை............எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, சாற்றுங்கொல் என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

சாற்றுங்கொல்: வினைமுற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, தலை என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

சால......... வினையுரிச்சொற்றொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, சிரித்து என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

சிரித்து...... எச்சத்தொடராய், சாற்றும் என்னும் தன் கருத்தா வினைச்சொல்லை முதலிற்கொண்டது.

சாற்றுங்கொல் தலையென்பதை இடைச்சொற்றொடரெனக் கொள்ளலாகாதோவெனில், சாற்றுங்கொல் என்பதில் கொல் என்பதைச் சாற்றுமென்னுஞ்சொல்லுக்கு அதனிறுதியிலுள்ள உம் என்னும் விகுதியுறுப்பைப் போல, ஒருறுப்பாகவே சேர்த்துக்கொண்டு தொடர்கூறவேண்டும். கொல் என்பதை வேறுபிரித்து, கொல் தலை இடைச்சொற்றொடரெனக்கூறின், பொன்னன் வந்தான், பொன்னனைக்கண்டேன் என்னுந்தொடர்களிலும் முதனின்ற சொற்களினிறுதியில் அன்விகுதியுறுப்பிடைச்சொல்லும் ஐவேற்றுமையுருபிடைச்சொல்லுமாய் நிற்கின்றமையால், அவைகளையும் இடைச்சொற்றொடரெனவே கூறவேண்டிவரும். ஆகையால் அவ்வாறு கொள்ளலாகாதென்க. அணங்கு கொல் என்பதை இலக்கணிகள் இடைச்சொற்றொடருக்கு உதாரணங்காட்டினமையால் அதுபோலச் சாற்றுங் கொல் என்பதையும் இடைச்சொற்றொடரெனக் கூறிஞலென்னையெனில், முதலில் நின்ற சொற்பேரால் தொடர்கூறத்தக்கதேயொழிய ஈற்றில் நின்ற சொற்பேரால் தொடர்கூறுவது இலக்கணமன்று. ஆகையால் மற்றக்காரியம் பிறசொற்கள் இந்தச்சத்தம் இனிச்செய்வேன் என இடைச்சொல் முதலில் வந்தொடர்வது மாத்திரமே இடைச்சொற்றொடரெனக்கொள்க.

இனி, சாற்றுங்கொல் தலை, யென்பதில் சாற்றுமென்பதனோடு கொல் என்பதைப் பிளவுபடுத்தி, முச்சொல் இருதொடராக்கிச் சந்திகூறுமிடத்து சாற்றுங்கொல், முற்றுத்தழுவாத்தொடரெனவும், கொல் தலை, இடைத்தழுவாத் தொடரெனவுங்கூறலாகும். இவற்றைப் பற்றிச் சந்தியிலக்கணங் காண்க.

3-வது. ஒன்றுத்தொடர் வாக்கியச் சொற்றொடர்பிலக்கணம்.

உ—ம்.

(1)

அவன் வேலைசெய்யமாட்டான், ஆகையால் அவனை ஏற்றுக்கொள்ள மாட்டேன்: என்பதில்,

அவன்.................... எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, வேலைசெய்யமாட்டான் என்னும் பன்மொழி அமைப்புத் தொடர்சொல்லை ஈற்றிற்கொண்டது.

வேலைசெய்யமாட்டான்... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, அவன் என்னுஞ்சொல்லை முதலிற்கொண்டது.

ஆகையால்................. வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, நான் என்னும் தொகைநிலை எழுவாய்கொண்ட ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்னும் பன்மொழி அமைப்புத் தொடர்சொல்லை ஈற்றிற்கொண்டது.

அவனை..................... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, நான் என்னுந்தொகைநிலை எழுவாய்கொண்ட, ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்னும் பன்மொழி அமைப்புத்தொடர்சொல்லை ஈற்றிற்கொண்டது.

ஏற்றுக்கொள்ளமாட்டேன்...முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, நான் என்னுந்தொகைநிலை எழுவாயை முதலிற்கொண்டது.

(2)

சாத்தன் வந்தான் பேசினான் போய்விட்டான்: என்பதில்,

சாத்தன்...................... எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல் பொரு

ந்தாது, வந்தான் என்னுஞ்சொல்லை ஏற்றிற்கொண்டது.

வந்தான்............ முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, சாத்தன் என்னும் எழுவாய்ச்சொல்லை முதலிற்கொண்டது.

பேசினன்............ முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, சாத்தன் என்னும் எழுவாய்ச் சொல்லைமுதலிற் கொண்டது.

போய்விட்டான்... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, சாத்தன் என்னுஞ்சொல்லை முதலிற் கொண்டது.

4—வது. அடுக்குத்தொடர் வாக்கியச் சொற்றொடர்பிலக்கணம்.

உ—ம்.

(1)

வீமனும் விஜையனும் வந்தார்கள்: என்பதில்,

வீமனும்.... ..........எழுவாய்த் தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, விஜையன் என்னும் எழுவாய்க்கும் உரித்தான வந்தார்கள் என்னும பன்மை வினையை ஏற்றிற் கொண்டது.

விஜையனும்........ எழுவாய்த் தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, வீமன் என்னும் எழுவாய்க்கும் உரித்தான வந்தார்கள் என்னும் பன்மை வினையை ஏற்றிற் கொண்டது.

வந்தார்கள்........... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, வீமன் என்னுஞ் சொல்லையும், இடைப்பிறவரல் பொருந்த, விஜையன் என்னுஞ் சொல்லையும் முதலிற் கொண்டது.

(2)

களித்த பருத்த யானையைக் கண்டான் அரசன்: என்பதில்,

களித்த............... பெயரெச்சத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, யானையை என்னுஞ் செயப்படுபொருட் பெயர்ச்சொல்லை ஏற்றிற் கொண்டது.

பருத்த................ பெயரெச்சத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, யானையை என்னுஞ் செயப்படுபொருட் பெயர்ச்சொல்லை ஏற்றிற் கொண்டது.

யானையை........... வேற்றுமைத் தொகாநிலைத் தொடராய், இடைப்பிறவரல்பொருந்ாது, அரசன் என்னும் எழுவாய்கொண்ட கண்டான் என்னுஞ்சொல்லை ஈற்றிற்கொண்டது.

கண்டான்........... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, அரசன் என்னும் எழுவாய்ச்சொல்லை ஈற்றிற்கொண்டது.

அரசன்.............. எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, கண்டான் என்னுஞ்சொல்லை முதலிற் கொண்டது.

(3)

சற்குணன் அன்பாயும் தாழ்மையாயும் பேசினன்: என்பதில்,

சற்குணன்.......... எழுவாய்த் தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, பேசினன் என்னுஞ் சொல்லை ஈற்றிற் கொண்டது.

அன்பாயும்.......... வினையெச்சதொடராய், இடைப்பிறவரல் பொருந்த, பேசினன் என்னுந்தன் கருத்தா வினையை ஈற்றிற் கொண்டது.

தாழ்மையாயும்...... வினையெச்சத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, பேசினன் என்னுந் தன் கருத்தா வினையை ஈற்றிற் கொண்டது.

பேசினன்........... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, சற்குணன் என்னுஞ்சொல்லை முதலிற் கொண்டது

அன்பாயும் தாழ்மையாயுமென்பது அன்புமாய்த் தாழ்மையுமாய் எனவும் வரும். அன்புந் தாழ்மையுமாய் எனவரில், அடுக்குத் தொடர்மொழி வினையெச்சமென ஒருமொழிபோலவுங் கொள்ளலாகும். அல்லது பிரித்துஅன்பும் என்பது, இடைப்பிறவரல் பொருந்த, ஆய் என்னுஞ் சொல்லைக் கொண்டதெனவும்; தாழ்மையும் என்பது இடைப்பிறவரல் பொருந்தாது ஆய், என்னுஞ் சொல்லைக் கொண்டதெனவுங் கூறலாகும். ஆயின்இது சுருக்கவழியன்று.

இதுவரை கூறியபிரகாரம், இடைப்பிறவரல் பொருந்துவதற்கு, "உருபு முற்றீரெச்சங்கொள்ளும்.- பெயர்வினை இடைப்பிறவரலுமாமேற்பன." "தத்தமெச்சமொடு சிவணுங் குறிப்பின்—எச்சொல்லாயினும் இடைநிலைவணையார்" என்னுஞ் சூத்திரங்களும், ஈற்றிலும் முதலிலுங்கொள்ளுமென்பதற்கு, " எச்சப்பெயர் வினை எய்து மீற்றினும்" என்னுஞ்சூத்திரமும், ஒரு சொல் கொண்ட சொல்லை மற்றொரு சொல்லும் அடுக்கிக் கொள்வதற்கு, "உருபு பல வடுக்கினும் வினைவெ ஏடுக்கினும் ஒருதம் மெச்சமீறுற

முடியும்.'' என்னுஞ்சூத்திரமும் விதிகளாம். (120, 121) வது உரைவிதிக ளையுங்காண்க. இவ்விதிகளை இவ்வாறிலக்கணங்கூறலில் வேண்டுமிடத்து உபயோகித்துக்கொள்க.

---

## V. CHANGES OF LETTERS IN COMBINATION OF WORDS.

## சொற்புணர்ப்பிலக்கணம்.

---

168. மெய்யையும், உயிரையும், முதலும் ஈறுமாகவுடைய இருபதங்கள், அல்வழியிலும், வேற்றுமை வழியிலும், தழுவுதொ டராயாவது, தழாத்தொடராயாவது பொருந்துமிடத்து, இயல்பாக வேனும் விகாரமாகவேனும் புணரும் புணர்ப்பை விதிப்படிகூறுவ தே, சொற்புணர்ப்பிலக்கணங் கூறுதலாம். இவை சந்தியிலக்கண மெனவுங்கொள்ளப்படும்.

### 1-வது. பதமுன்பதப் புணர்ப்பு.

உ—ம்

(1)

ராமன் வந்தான்.

அல்வழி தழுவுதொடர், இயல்புப் புணர்ப்பு "எண்மூவெழுத்தீற்றெவ் வகை மொழிக்கு-முன்வரும் ஞநமய வக்களியல்பே'' என்னும் சூத்திரவிதி யால், நிலைமொழியீற்றில் நின்ற னகரமெய்ம்முன், வருமொழி முதலில்வந்த வகரமெய்யியல்பாயிற்று.

(2)

சாத்தனேழைகளுக்குத் தருமங் கொடுத்தான.

[illegible]ழைகளுக்கு... அல்வழி *தழாத்தொடரியல்புப் புணர்ப்பு "உடன் மேலுயிர் வந்தொன்று வதியல்பே'' என்னும் சூத்திர விதியால், நிலைமொழியீற்றினின்ற னகரமெய்ம்மேல், வருமொழி முதலில்வந்த வகார உயிரேறி இயல் பாயிற்று.

---

*இவ்வாறு சந்தியிலக்கணத்தில் வருவதைத்தழாத்தொடரெனக்கூறு து கைக்களிறு, பொற்குடம், ஆடகப்பூண், எனவருபவைகளைத் தழாத்தொ டருக்கு உதாரணங்காட்டியிருக்கின்றனரேயெனில், அவை உருபும் பயனுந் தொக்கிய தொகைநிலைத் தழுவுதொடர்களேயன்றி, தழாத் தொடரெனக்

ஏழைகளுக்குத் தருமம்..... வேற்றுமைவழித் தழாத்தொடர், விகாரப் புணர்ப்பு, "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன், க, ச, த, ப மிகும் விதவாதன மன்னே" என்னும் சூத்திரவிதியால், நிலைமொழி ஈற்றினின்ற உகர உயிர்முன், வருமொழி முதலில்வந்த தகர மெய்யிரட்டியது.

தருமங்கொடுத்தான்....வேற்றுமைவழித் தழுவுதொடர், விகாரப் புணர்ப்பு "மவ்வீறொற்றொழிந்துயிரீறொப்பவும், வன்மைக்கினமாய்த்திரிபவுமாகும்" என்னுஞ் சூத்திரவிதியால் நிலைமொழி ஈற்றினின்ற மகரமெய் வருமொழி முதலில் வந்த ககர மெய்க்கினமான ஙகர மெய்யாகத்திரிந்தது.

---

கூறுவது தகுதியன்று. இவை தழாத்தொடரோவெனின், உரைகல், கவிழ்தும்பை, செந்தாமரை, மதிமுகம், தேன்மொழி என்பதில், உரைக்கப்படுவதாகிய கல், கவிழ்ந்த பூவையுடைய தும்பை, சிவந்த பூவையுடைய தாமரை, மதியையொத்த முகம், தேனைப்போலும் இனிமையையுடைய மொழி என உருபும், பயனும் பொருளும் தொக்கிய இவைகள் யாவற்றையுந் தழாத் தொடரெனக் கொள்ளவேண்டுமே; சுனையாழ அம்மிமிதப்ப, மருப்பிற்பரல் என்பதிலும் சொல்லில் அவாய்நிலை என்னும் இலக்கணத்தால் தழுவினும், பொருளில் தகுதியென்னுமிலக்கணமின்மையால், தழுவுதலின்று. இப்படிச் சொல்லில் தழுவு தொடராகிப்பொருளில் தழாத்தொடராய் நிற்பனவற்றைச்செய்யுளில் மொழிமாற்று, கொண்டு கூட்டுமுதலிய அன்வயங்களாற் பொருள்கொள்ள அமையும். (5) விதியைப்பார்க்க. சொல்லில் தழுவுதொடர் என்பதை ஒரு தந்திரத்தால், சுனையாழ்ந்தது அம்மி மிதந்தது எனவரில் தழுவி நின்றமையறிக. மேலுந்தொடரிலக்கணத்தில், இடைப்பிறவரல்களைவிட்டுத் தழுவுஞ்சொல்லோடேயே பொருந்தவைத்துக்கூறுகின்றமையால், அவ்விலக்கணங்கூறுமிடத்துத் தழாத்தொடரெனக் காட்டவேண்டுவதேயில்லை. சந்தியிலக்கணத்தில் நின்றசொல்லோடு அடுத்தசொல்லை நிலைமொழி வருமொழியாகப் பொருத்திக் கூறவேண்டியதால், கொள்ளுஞ் சொல்லோடு பொருந்தியும், இடைப்பிறவரலோடுபொருந்தாமலும் நிற்குமாகையால், இவ்விலக்கணங்கூறுமிடத்து மாத்திரந் தழுவுதொடர், தழாத்தொடரெனக்கூறவேண்டியது. திருட்டாந்தமாக, சாத்தன் பெரிய ஒரு வீட்டைக் கட்டினான், என்னும் வாக்கியத்திற்கு தொடரிலக்கணங்கூறுமிடத்து, சாத்தன் கட்டினான், பெரிய வீட்டை, ஒரு வீட்டை, வீட்டைக் கட்டினான் என இடைப்பிறவரலை விட்டுத், தழுவிய சொல்லோடு கூறப்படும். சந்தியிலக்கணங்கூறுமிடத்து, சாத்தன் பெரிய, பெரிய ஒரு, ஒரு வீட்டை, வீட்டைக் கட்டினான் எனக் கூறப்படும். சாத்தன் என்பதனோடு பெரிய என்பதும்

## 2-வது பதமுன் உருபுப் புணர்ப்பு.

யான் + ஐ — என்னை: என்பதில்,

என்னை.... அல்வழித் தழாத்தொடர் விகாரப் புணர்ப்பு, "யான்யாம், நீ நீர் என் எம் நின் நும் ஆம்" என்னும் சூத்திர விதியால், யான், என் எனத்திரிந்து, "தனிக்குறில் முன்னொற்றுயிர் வரினிரட்டும்" என்னும் சூத்திர விதியால் நிலைமொழியீற்றினின்ற னகரவொற்றுஐயுயிர் வரக்கண்டிரட்டியது.

---

பெரிய என்பதனோடு ஒரு என்பதும் தழுவாமலும்; ஒரு என்பதனோடு வீட்டையென்பதும், வீட்டை என்பதனோடு கட்டினான் எனபதும் தழுவியும்வந்தமை காண்க. இதுபற்றியே, பவணந்தியாசிரியர் தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர் கூறிய பொதுவியலில், தழுவுதொடர், தழாததொடர் கூறாது, அத்தொடர்களை புணர்ப்பு விதிக்கென்று அல்வழிச் சந்தியும் வேற்றுமைச் சந்தியுமாகப் பிரித்துக்கூறிய, உயிரீற்றுப் புணரியலில் "தழுவுதொடர் அடுக்கெனவீரேழே" எனக்கூறினர். தழுவுதொடரென்றமையால், சந்தியிலக்கணத்தில அடுக்கு நீங்கலாகிய பதின்மூன்றும் இடைப்பிறவரலோடு தழாத்தொடராயும் வருமென்னும் பொருளமைய நின்றமைகாண்க. அடுக்குத்தழுவியதுபோலவுந் தழுவாததுபோலவும் நிற்றலால், அவற்றை பதினாலாவது சந்தியாக இறுதியில் நிறுத்தினர். இவ்வாறன, ஆக்கியோனது சிறந்த கருத்தை அறியாமல் உரைகாரர் தழாததொடருக்கு உதாரணமாக வழக்கைவிட்டுப் பொருள்கோட்செய்யுளைத் தேடிவாளா உதாரணங்கூறிமயங்கினர். கைக்களிறு, பொற்குடம், சுனையாழ அம்மி மிதப்ப எனவருவதே தழாத்தொடரெனின் மேற்கூறியவாறு, இடைப்பிறவரலோடு தழுவாமல் வருவதற்கு இலக்கணமெங்கே? இலக்கணக்கொத்தார் கூறியபடி, பொருத்தமில் புணர்ச்சியெனில், அதை நன்னூலார் என் கூறவில்லை? அவர் அப்பொருத்தமில் புணர்ச்சியுள் ஒன்றாகக்காட்டிய, சுனையாழ அம்மி மிதப்பவென்பதை நன்னூலில் உதாரணமாகக் காட்டின உரைகாரர் தழாததொடரெனக் கூறியதென்னை? அவ்விலக்கணக் கொத்தார் தொடர் என்பதை புணர்ச்சி என்னும் வார்த்தையால் கூறினாரேயொழிய வேறல்ல. மேலும் அந்நூலார் சந்தியிலக்கணத்திற்கென்றாவது, தொடரிலக்கணத்திற்கென்றாவது குறியாமல், சொற்பொருத்தமிருந்தும், பொருட்பொருத்தமில்லாததையும், நிலைமாறி நிற்றலையும், பொய்யுரையையும், விகுதிப் பொருத்தமில்லாததையுந் தொகுத்துப் பொதுப்படப் பொருத்தமில் புணர்ச்சியெனக்கூறினர். அவ்வாறு கூறினவரும் "இவ்விருவகையும் ஒருங்கியல் புணர்ச்சி சிலவிடைப் பிறவரலெனத் தெளிந்தனரோ" எனச் சூத்திரங்கூறி வாளான் மருவானை

யான் என்னும் எழுவாயின்மேல் உருபு பொருந்துதலால், அல்வழியில் எழுவாய்த் தழாத்தொடரென்னப்பட்டது. என்னையடித்தான், என மேலே சொற்றொடருமாயின் வேற்றுமைத் தொடரெனக.

தான் + கு = தனக்கு: என்பதில்.

தனக்கு...... அல்வழி தழாதொடர், விகாரப்புணர்ப்பு, "தான் தாம் நாம் முதல் குறுகும்" என்னும் சூத்திர விதியால், தன் என்றாகி, "நான் காறிரட்டல" என்னும் சூத்திர விதியால் அகரச்சாரியை பெற்றவிடத்து, தனிக்குறிலிரட்டாது தன் என நின்று "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்கசதபமிகும்" என்னும் சூத்திர விதியால் அகர உயிரீற்றின்பின்குவ்வுருபில் நின்ற ககரமெய்யிரட்டியது.

3-வது பதமுன் விகுதிப் புணர்ப்பு,

அ + அன் = அவன்: என்பதில்,

அவன்...... அல்வழித் தழாத்தொடர் விகாரப் புணர்ப்பு "ஏனையுயிர் வழி வவ்வும்" என்னுஞ் சூத்திர விதியால், பகுதி அகர உயிர் முன் விகுதி அகர உயிர்வர, வகர உடம்படு மெய்தோன்றியது.

இங்கே, தழாதொடர், இடைத்தழாதொடர் எனக.

---

## VI. ETYMOLOGY OF WORDS.

## சொல்லுறுப்பிலக்கணம்.

---

169. சொற்களைத் தனித்தனி நிறுத்தி, பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரங்களென்னும் உறுப்புகளாலாகிய சம்பந்தங்களைப் பிரித்துக் கூறுதலே சொல்லுறுப்பிலக்கணங்கூறு முறையாம்.

---

மாய வெட்டினுன், அறத்தை அழகுபெறச் செய்தான், என உதாரணங்காட்டி இவைபோல்வனவெல்லாம் ஒருகாற் பொருந்தும் ஒருகாற் பொருந்தாதென்கவென உரையுங் கூறினர். இவ்வாறு பொருந்தியும் பொருந்தாமலும் வருவதையே நன்னூலார் சந்தியிலக்கணத்தில் தழுவுதொடர், தழாத்தொடரெனக்கொண்டனர். இனிப், புணர்ச்சியில் வழிப்புணர்ச்சியென்பதும் அத்தழாத் தொடருளமையுழ். ஆகையால், புணர்ச்சி, தழுவுதொடர்ப்புணர்ச்சி, தழாத்தொடர்ப் புணர்ச்சியென விரண்டேயாமெனக.

| சொற்கள். | 1<br>பகுதி. | 2<br>விகுதி. | 3<br>இடைநிலை. | 4<br>சாரியை. | 5<br>சந்தி. | 6<br>விகாரம். |
|---|---|---|---|---|---|---|
| பொன்னன். | [பொன்]<br>(பொருள்) | பொன் [அன்]<br>(ஆண்பால்) | 0 | 0 | பொன் [ன்] அன்<br>(இரட்டித்தல்) | 0 |
| நடந்தனன். | [நட]<br>(செய்-குன்றிய) | நட [அன்]<br>(ஆண்பால்) | நட த் [அன்]<br>(இறப்பு) | நடத் (அன்) அன்<br>உருபு | நட [த்] த் அன் அன்<br>(தோன்றல்) | நட [ந்] த் அன் அன்<br>[மெலித்தல்] |
| போனார். | [போ]<br>(செய்-குறிய) | போ [ஆர்]<br>(பலர்பால்) | போ [இன்] ஆர்<br>(இறப்பு) | 0<br>0 | போ [இன்] ஆர்<br>இ (கெடுதல்) | |
| சொல்லியது | [சொல்]<br>(செய-குன்றா) | சொல் [து]<br>(ஒன்றன்பால்) | சொல் [இன்] து<br>(இறப்பு) | சொல் இன் [அ]<br>து<br>உருபு | சொல்[ல][இ]ய் அது<br>ல் ய் (தோனறல)<br>ன் (கெடுதல) | 0 |

இவ்வாறு படமுகத்தாற் கூறுவதுமன்றி அடியில்வரைந்த பிரகாரம் வசனரூபமாயுங் கூறலாம். சொல்லியது: இதில் முதல் நின்ற (சொல்) (பகுதி) இறுதியில் நின்ற (து) (விகுதி) இடையில் பகுதியடுக்க இன் என்னுமிடையில் னகர ஒற்றுக்கெட நின்ற இ) (இடைநிலை) விகுதிக்கு முன்னின்ற (அ) (சாரியை) பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் தோன்றிய (ல்) ஒற்றும் இடைநிலைக்கும் சாரியைக்கும் இடையில் தோன்றிய (ய்) ஒற்றும் -சந்தி- ஆக விகாரந் தவிர ஐந்துறுப் பாலமைந்தது. இன்என்பது இடைநிலை. அதில் னகரவொற்றுத் தொகுத்தல் எனவைத்து ஆறுறுப்பால் அமைந்ததெனக் கொள்ளவுந்தகும்.

மேலே காட்டிய போனான் என்னுமுற்று, போந்தான் எனத் தகர இடைநிலை பெற்றும் சொன்னான் என்னுமுற்று, சொற்றான் என றகர இடைநிலை பெற்றும் வரும்.

இறந்தகாலத்துக்கு, இ, ன், ய் இடைநிலையும் உண்டென வைத்து, சொல்லியது, சொன்னது, போயது, எனச் சுருக்கவழி இடைநிலை கொள்ளவுந் தகும்.

இனி, அடிப்பித்தான், செய்வித்தான் எனவரும் பிறவினைகளுக்கு, அடிப்பி, செய்வி பகுதிகளென்க.

அடிக்கப்பட்டான், தள்ளுண்டான், அடிப்பிக்கப்பட்டான் எனவருஞ் செயப்பாட்டு வினைகளுக்கு, அடிக்கப்படு, தள்ளுண்ணு, அடிப்பிக்கப்படு, என்றிவை பகுதிகளென்க. கைகழுவினான், களிப்படைந்தான், படித்துக் கொண்டிருந்தான், ஓடிப்போய்விட்டான் எனவருந் தொடர்மொழி வினைகளுக்கு, கைகழுவு, களிப்படை, படித்துக்கொண்டிரு, என்னுமிவை பகுதிகளென்க. மற்ற உறுப்புகளை மேற்கூறியவாறே காண்க.

வரில், என்பதற்கு, வா, பகுதி, இல், வருங்கால எச்சப்பொருடரும் விகுதி.

வந்தால், என்பதற்கு வாவென்னும் பகுதியடியாய் பிறந்த வந்து என்னும் வினையெச்சப் பகுதி, ஆல் அவ்வெச்சப் பகுதியை எதிர்கால வினையெச்சப்பொருட்படுத்தும் விகுதி.

சென்றக்கால் என்பதற்கு செல் என்னும் பகுதியடியாய்ப் பிறந்த சென்ற என்னும் பெயரொச்சப் பகுதி, கால் அவ்வெச்சப்பகுதியை எதிர்கால வினை யெச்சப்பொருட்படுத்தும் விகுதி.

சென்றக்கடை, கொழுத்தக் கண் எனவருபவைகளுமிவ்வாறே. வந்தாற் கால், போனாற்கால் என விகுதி மேல் விகுதியும் வரும்.

வருவரேல் என்பதற்கு, வாவென்னும் பகுதியடியாய்ப் பிறந்த வருவர் என்னும் முற்றுப்பகுதி, எல் அம்முற்றுப் பகுதியை எதிர்கால வினையெச்சப்பொருட்படுத்தும் விகுதி.

வருவாரானால், செல்வாரொன்றால், வருவாரோயாமாகில் எனவரில், தொடர்மொழி இஸ்டவினையில் அவ்வாறான பகுதி விகுதிகளென்க. இவைகளுக்கிவ்வழி கூறாது வேறு வழி கூறுவதெல்லாம் சுற்றுவழியு மயக்க வழியுமென்க.

இவைகளில், பொன்னன் நடந்தான், போனான் என்னுஞ் சொற்களிலுள்ள பகுதிகள், இயற்கைப் பகுதிகளென்றும் அடிப்பித்தான், செய்வித்

தான், அடிக்கப்பட்டான், தள்ளுண்டான், அடிப்பிக்கப்பட்டான் என்னுஞ் சொற்களிலுள்ள பகுதிகள் செயற்கைப் பகுதிகளென்றும், கைகழுவினான், களிப்படைந்தான், படித்துக்கொண்டிருந்தான் என்னுஞ் சொற்களிலுள்ள பகுதிகள் தொடர்மொழிப் பகுதிகளென்றும், வந்தால் சென்றக்கால் என்னுஞ் சொற்களிலுள்ள பகுதிகள் எச்சப்பகுதிகளென்றும், வருவரேல், செல்வானென்றால் என்னுஞ் சொற்களிலுள்ள பகுதிகள், முற்றுப்பகுதிகளென்றுங் கொள்க.

---

## THREE EXAMPLES OF THE ABOVE 6 STEPS.
## 3 சாதனைகள்.

---

170. மேலே சாதனங்களாகக்கூறிய அறுவகையிலக்கணங்களைக்கொண்டு, இங்கு ஒருங்கே சாதித்துக்காட்டுவதால் சாதனை என்னப்பட்டது.

---

### 1. EXAMPLE.
### சாதனை.

---

தனிவாக்கியம்.

பொன்னன் நன்னூலை விருப்பத்தோடு படித்தான்.

(1) வாக்கியப் பகுப்பிலக்கணம்.

தந்தொழிற் பிரயோகத்தில் உடன்பாடு பற்றி வினைநிலையுரைத்தலாய் வந்த விரிநிலையங்கத் தனிவாக்கியம்.

விருப்பத்தோடென்பது துணைநிலைப்பொருளுக்குரிய சிறப்பின்றி, பயனிலையைச்சார்ந்து அடைமொழிப்பொருளில் வருதலால், விரிநிலையங்கத் தனிவாக்கியமென்னப்பட்டது.

ஓரங்கம் விரிந்தாலும் விரிநிலையங்கத் தனிவாக்கியமே என்னப்படுவதை [45] விதியில் பார்க்க.

(2) வாக்கியாங்கப் பகுப்பிலக்கணம்.

| அடைமொழி | எழுவாய், பயனிலை, துணைநிலை. |
|---|---|
| o | பொன்னன்...எழுவாய், வினைமுதல், தனி. |
| o | நன்னூலை......செய்-ள், வினையம், தனி. |
| விருப்பத்தோடு } உயிர்க்குணவடை, உடனிகழ்வு, தனி. | படித்தான்.....பயனிலை, வினைநிலையுரைத்தல், துணைநிலையொன்றுடை விரி. |

முதலாவதாகிய வாக்கியப் பகுப்பிலக்கணத்தில் கூறப்பட்ட வினைநிலையுரைத்தல், இரண்டாவதாகிய இவ்வாக்கியாங்கப் பகுப்பிலக்கணத்திலுங் காட்டப்பட்டது. இப்படி ஒருவகை இலக்கணத்திலிருந்து மற்றொருவகை இலக்கணத்தில், இரண்டொன்றைக் கொண்டுவந்து காட்டுவது தொடர்ச் சிக்குந் தெளிவுக்குமேயல்லாது, கூறியது கூறலன்றென்க.

### (3) சொற்றணியிலக்கணம்.*

பொன்னன்...... ஒருமொழி, பொருளால் வந்த காரணவாக்கச் சிறப்புப் பெயர், இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகுபதம், உயர்திணை யாண்பாற் படர்க்கை, வினைமுதற் பொருளுடை முதலாம் வேற்றுமை.

நன்னூலை......... பண்புத் தொகைநிலையாக்கற் றொடர்மொழி, உவம ஆகு பெயராய் வந்த காரணவாக்கச் சிறப்புப் பெயர், இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு, குறிப்புப் பகாப்பதம், அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை (இங்கே ஒன்றன்பால்) செயப்படு பொருளுடை இரண்டாம் வேற்றுமை.

---

* சொற்றணியிலக்கணங் கூறுமிடத்து, பொதுச்சொற்களுக்கு சொன்னிலையிலக்கணம், பொருணிலையிலக்கணமென இருவகையிலக்கணங்காட்டப்படும். சொன்னிலையிலக்கணமாவது, ஓர் சொல்லை நிறுத்தி அதற்கு முன் பின் சம்பந்தம் நோக்காது, அச்சொல்லளவிலேயே விகுதிமுதலியவற்றால் விளங்கியவாறு கூறுமிலக்கணமாம்.

பொருணிலையிலக்கணமாவது, ஓர் சொல்லை நிறுத்தி, "பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்—மேல்வரும் சிறப்புப்பெயர் வினைதாமே" என்னுஞ் சூத்திர விதியால் அச்சொல்லளவிலன்றி, முன்பின் சம்பந்தம் நோக்கி விளங்கியதைக் கூறுமிலக்கணமாம். சொன்னிலையிலக்கணத்தோடு பொருணிலையிலக்கணமும் உடன்கூறவேண்டில், அதைக் கட்டுக்குள்ளமைத்துக் காட்டலாகும்.

சொன்னிலையிலக்கணத்தைவிட்டுப் பொருணிலையிலக்கண மாத்திரங் கூறலாகாது. திருட்டாந்தமாக, இருதிணை முப்பாலொருமையாகிய நான் என்னுஞ் சொல்லுக்கு, ஓரிடத்தில் உயர்திணையென்றும், ஓரிடத்தில் அஃறிணையென்றும், ஓரிடத்தில் ஆண்பாலென்றும், ஓரிடத்தில் பெண்பாலென்றும், மற்றோரிடத்தில் ஒன்றன்பாலென்றுங் கூறில், மாணுக்கர் மனது குழப்பங்கொள்ளுமென்க.

விருப்பத்தோடு... ஒருமொழி தொழிலியல்பாய் வந்த இடுகுறிமரபுச்சிறப்புப் பெயர், இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகுபதம், அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை, உடனிகழ்வுப் பொருளுடை மூன்றாம் வேற்றுமை.

படித்தான்......... ஒருமொழி, செயப்படுபொருள் குன்றாத தன்வினையில் செய்வினையாய் வந்த, இறந்தகாலங் காட்டும் உயர்திணையாண்பாற் படர்க்கை, தெரிநிலை விதி யியல்பு வினைமுற்று, இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு, வெளிப்படைப் பகுபதம்.

## (4) சொற்றொடர் பிலக்கணம்.

பொன்னன்...... எழுவாய்த் தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, படித்தான் என்னும் பயனிலைச் சொல்லை ஏற்றிற் கொண்டது.

நன்னூலை......... இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, எழுவாய் கொண்ட படித்தான் என்னும் முற்றுச்சொல்லை ஈற்றிற்கொண்டது.

விருப்பத்தோடு... மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, எழுவாய் கொண்ட படித்தான் என்னும் சொல்லை ஈற்றிற் கொண்டது.

படித்தான்......... முற்றுத்தொடராய் இடைப்பிறவரல் பொருந்தாது, பொன்னன் என்னும் எழுவாய்ச் சொல்லை முதலிற்கொண்டது.

## (5) சொற்புணர்ப்பிலக்கணம்.

### 1-வது பதமுன் பதப்புணர்ப்பு.

பொன்னன......
னன்னூலை.... } அல்வழித் தழாத்தொடர் விகாரப்புணர்ப்பு "குறிலணைவில்லா னணக்கள் வந்த,—நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே" யென்னுஞ் சூத்திர விதியால் நிலைமொழி ஈற்றினகரவொற்றைக் கண்டு, வருமொழி முதலில் வந்த பொது நகரம் சிறப்புனகரமாகத் திரிந்தவிடத்து, அந்நிலைமொழி னகர வொற்றுக் கெட்டது.

நன்னூலை......
விருப்பத்தோடு } வேற்றுமைத் தழாத் தொடரியல்புப் புணர்ப்பு "எண் மூவெழுத்தீற்றெவ்வகை மொழிக்கும் முன்வரும் ஞ ந

மயவக்களியல்பே" என்னும் சூத்திர விதியால் நிலைமொழி யீற்றினின்ற ஐகார உயிர்முன் வருமொழி முதல் வகர மெய்யியல்பாயிற்று.

விருப்பத்தோடு } படித்தான்..... } வேற்றுமைத் தழுவுதொடரியல்புப் புணர்ப்பு "இடைத் தொடராய்தத்தொடரொற்றிடையின்--மிகாநெடிலுயிர்த் தொடர் முன்மிகாவேற்றுமை". என்னும் சூத்திர விதியால், நிலைமொழி யீற்றினின்ற உகர உயிர்முன், வருமொழி முதலில் வந்த பகர மெய்யியல்பாயிற்று.

2-வது பதமுன் உருபுப் புணர்ப்பு.

நன்னூலை......... அல்வழித் தழாத்தொடரியல்புப் புணர்ப்பு "உடன்மேலுயிர் வந்தொன்றுவதியல்பே" என்னும் சூத்திரவிதியால், நிலைமொழி யீற்றினின்ற லகரமெய்ம்மேல், வருமொழி ஐகார உயிரேறியியல்பாயிற்று.

விருப்பத்தோடு... அல்வழித் தழாத்தொடர் விகாரப் புணர்ப்பு "மவ்வீறொற்றொழிந்து" என்னும் விதியால், நிலைமொழி யீற்றினின்ற மகர வொற்றுக்கெட்டு, விருப்ப என நின்று "இதற்கிது சாரியை யெனினளவின்மையின்" என்னுஞ் புறனடைச் சூத்திர விதியால், அத்துச்சாரியை பெற்று, "அத்தினகரம் அகரமுனையில்லை" என்னும் சூத்திர விதியால், அகரவீற்றின்முன் அத்தின் அகரங்கெட, விருப்பத்து என நின்று "உயிர்வரினுக்குறள் மெய்விட்டோடும்" என்னும் சூத்திர விதியால், ஒடுருபின் ஒகார உயிர்முன், அத்தினுகரங்கெட்டு விருப்பத்தோடு என நின்றது.

(6) சொல்லுறுப்பிலக்கணம்.

பொன்னன்...... பெயர்ப்பகுபதம். பொன் (பகுதி) அன் (விகுதி) பகுதி யீற்றினின்ற னகர ஒற்றிரட்டல் (சந்தி) ஆக மூன்றுறுப்பாலமைந்தது.

நன்னூல்......... தொடர்மொழிப் பகாப்பதம்.

விருப்பம்......... பெயர்ப்பகுபதம். விரும்பு (பகுதி) அம் (பண்புவிகுதி) பகுதி ஈற்றின் உகரக் கெடுதலும், மகர வொற்றுப் பகர ஒற்றுனதும் (சந்தி) ஆக மூன்றுறுப்பாலமைந்தது.

அம்விகுதியைப் பகுதிப்பொருள் விகுதியாக்கில் பகாப்பதமெனவுங் கொள்ளலாகும்.

படித்தான்......... வினைப்பகுபதம், படி (பகுதி) ஆன் (விகுதி) இடையில்

தகரவொற்று, (இடைநிலை) பகுதிக்கும் இடைநிலைக்கு மிடையில் தகரவொற்றிரட்டல் (சந்தி) ஆக நாலுறுப்பா லமைந்தது.

சந்திவிதி கூறவேண்டில் சொற்புணர்ப்பிலக்கணத்துக்கு ஒத்த விதி களையே கூறிக்கொள்க.

## 2. EXAMPLE.

### சாதனை.

தொடர் வாக்கியம்.

நீ யதை நன்மையென்றறிந்தாற் செய்யாமல் விடாதே.

(1) வாக்கியப் பகுப்பிலக்கணம்.

| | | |
|---|---|---|
| 1. நீ யதை நன்மையென்றறிந்தால் | 2-க்கு | தொழிலடை மொழிப்பொருண்முடிபு, அப்பிரதானம், அவாய்நிலை. |
| 2. செய்யாமல் விடாதே. | 1-க்கு | பிரதானம் பூரண நிலை. |

(2) வாக்கியாங்கப் பகுப்பிலக்கணம்.

| அடைமொழி. | எழுவாய், பயனிலை, துணைநிலை. |
|---|---|
| 0 | 1. நீ.........எழுவாய் வினைமுதல் தனி. |
| 0 | அதை ...செய-ன், விஷயம், தனி. |
| நன்மை யென்று } குணவடை, குறிப்புப் பண்பு, தனி | அறிந்தால் } பயனிலை, எச்சம், துணைநிலை யொன்றுடை விரி. |
| | 2. நீ......... மேலே கூறியபடி. |
| | செய்யாமல் விடாதே } பயனிலை, முற்று ஏவல், துணைநிலை யொன்றுடை விரி. |

அப்பிரதானத்தின் செயப்படு பொருளாகிய துணைநிலையே பிரதானத் திற்குமுரியது.

(3) சொற்றனியிலக்கணம்.

நீ............ ஒருமொழி, பொருளியல்பாய் வந்த இடுகுறி மரபுச் சிறப்புப் பெயர், இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு, வெளிப்படைப் பகாப்பதம், இருதிணை யொருமை முன்னிலை (இங்கே ஆண் அல்லது பெண்பால்) வினைமுதற் பொருளுடை முதலாம் வேற்றுமை.

அதை...... ஒருமொழி சுட்டால் வந்த காரணவாக்கச் சிறப்புப் பெயர், இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு, வெளிப்படைப் பகுபதம், அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை, செயப்படு பொருளுடை இரண்டாம் வேற்றுமை.

நன்மை யென்று } எழுவாய்த் தொடர்மொழி வினைச்சொல், செய்து என்னும் வாய்பாட்டிறந்த காலத்தெரிநிலை விதி வினையெச்சம் குணப்பொருளில்வந்த இடை, திணை பாலிடங்களுக்குப் பொது (இங்கே முப்பாலொருமை முன்னிலை.)

எச்சங்களுக்கு இவ்வாறு முக்கிய இலக்கணங்கூறுவதே போதும். அவசியங்கண்டவிடத்து மற்ற விலக்கணமுங்கூறிக்கொள்க.

நன்மையென்னுஞ்சொல் அறிந்தால் என்னுஞ்சொல்லைக் கொள்வதற்குத் தகுதியில்லாமையால், என்று என்னுஞ்சொல்லைத் தன்னோடிணைத்து, தன் பொருளையே அதற்குக்கொடுத்துத், தொடர்வினையெச்சமாய் நின்று, அறிந்தால் என்னும் வினைச்சொல்லைக்கொண்டதென்க. நன்மை என்பதையும் என்று என்பதையும் பிரித்திலக்கணங்கூறினும், இவ்வாறாகவே பொருளமையும். நன்மையாக, நன்மையாய் என்பதற்கும் இவ்வகையான இலக்கணமே பொருந்தும்.

செய்யாமல் விடாதே } மறை வினையெச்சத்தொகாநிலை, அமைப்புத்தொடர்மொழி, செயப்படுபொருள் குன்றாத தன்வினையில் செய்வினையாய் வந்த முக்காலப்பொதுவான இருதிணை முக்கூற்றொருமை முன்னிலை தெரிநிலை, ஏவல், வினைமுற்று, இயற்சொல் மரூஉவாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப்பகுபதம்.

விடு, உறுதிப்பொருள், விடாதையென்பது விடாதேயென மரூஉவிற்று. இவ்வாக்கியம், "ஈரெதிர்மறை ஓர் விதிநிலை" யென்னும் மறைமுகப்பிரயோகத்தால், செய் என்னும் விதிநிலையையே உணர்த்திற்று. (96) விதியைப்பார்க்க.

## (4) சொற்றொடர்பிலக்கணம்.

நீ.............. எழுவாய்த்தொடராய் இடைப்பிறவரல் பொருந்த, செய்யாமல் விடாதே என்னும் பயனிலைச்சொல்லை, ஈற்றிலேகொண்டது.

அதை......... இரண்டாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய் இடைப்பிறவரல் பொருந்த, எழுவாய்கொண்ட அறிந்தால் என்னுஞ் சொல்லை ஈற்றிலேகொண்டது.

நன்மை } வினையெச்சத்தொடராய் இடைப்பிறவரல் பொருந்ாது,
யென்று } அறிந்தால் என்னும் தன்கருத்தா வினைச்சொல்லை ஈற்றிலே
கொண்டது.

அறிந்தால்...... வினையெச்சத்தொடராய் இடைப்பிறவரல் பொருந்ாது,
செய்யாமல் விடாதே என்னும் தன்கருத்தா வினைச்சொல்லை
ஈற்றிலேகொண்டது.

செய்யாமல் } வினைமுற்றுத்தொடராய் இடைப்பிறவரல் பொருந்தாது, நீ
விடாதே } யென்னுமெழுவாய்ச் சொல்லை முதலிலேகொண்டது.

## (5) சொற்புணர்ப்பிலக்கணம்.

நீயதை...... அல்வழி, தழாத்தொடர், விகாரப்புணர்ப்பு "இ, ஈ, ஐ வழி யவ்வும்" என்னும் சூத்திரவிதியால் நிலைமொழியீற்று ஈகார உயிர்முன், வருமொழிமுதல் அகர உயிர்வர, யகர உடம்படு மெய் தோன்றியது.

"அதை நன்மையென்று" வேற்றுமைவழித் தழாத்தொடரியல்புப் புணர்ப்பெனவும்; "நன்மையென்றறிந்தால்" என்பதும், "அறிந்தாற் செய் யாமல் விடாதே" என்பதும், அல்வழித் தழுவுதொடர் விகாரப்புணர்ப்பெ னவுங்கொண்டு, மற்ற விதிகளையுமேற்கூறியவாறு கூறிக்கொள்க.

## (6) சொல்லுறுப்பிலக்கணம்.

அது........... அ (சுட்டுப்பகுதி) து ஒனறன்பால் (விகுதி) ஆக ஈருறுப் பால் அமைந்தது.

இது இயற்கைப் பகுதியாம்.

நன்மையென்று என்பதற்கு, நன்மையென், தொடர்மொழிப்பகுதி யென்றும், உ, வினையெச்சவிகுதியென்றும், ற், இறந்தகால விடைநிலை யென்றும்; அறிந்தால் என்பதற்கு, அறிந்து, எச்சப்பகுதியென்றும், ஆல், வருங்கால எச்சவிகுதி என்றும்; செய்யாமல் விடாதே என்பதற்கு, செய் யாமல் விடு, தொடர்மொழிப்பகுதி என்றும், ஆ, எதிர்மறை விகுதி விரித் தல் விகாரம், ஐ, முன்னிலை விகுதியென்றும் ஐ, ஏயானது மருஉவென் றுங்கொண்டு, மற்றுஞ்சந்திவிதிகளையுங்காண்க. இவைகளுக்கு (168) விதி யைப்பார்க்க.

## 3. EXAMPLE.

### சாதனை.

பல கற்றோம் யாமென்று தற்புகழவேண்டா,
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்,
சில கற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார் க்
கச்சாணி யன்னதோர் சொ ல்.

### 1. வாக்கியப் பகுப்பிலக்கணம்.

| | |
|---|---|
| 1. பல கற்றோம் யாமென்று, | 2-க்கு தொழிலடைப் பொருளில் வந்த வேற்றினத் தொடரப் பிரதானம், அவாய் நிலை. |
| 2. தற்புகழவேண்டா. | 1-க்கு பிரதானம் பூரண நிலை. |
| 3. அலர்கதிர் ஞாயிற்றைக் கைக் குடையுங் காக்கும். (அதுபோல) | 4-க்கு தொழில் உவமப்பொருளில் வந்த உபசிரோஷ்டம், அவாந்தர நிலை. |
| 4. சில கற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க் கச்சாணியன்னதோர் சொல். (அதைக்கொண்டு காப்பார்கள் ஆகையால்.) | 1-க்கு ஏதுப்பொருளில் வந்த உபசிரேஷ்டம், அவாந்தர நிலை. |

வாக்கியங்களும், ஈற்றிலுமுதலிலும் எய்தும் என்னும் [12] விதிப்படி 1, 2. வாக்கியங்கள் முதலில் வந்தன.

இங்கே தொழிலுவமப் பொருள், அதைக்கொண்டு காப்பார்கள் என ஏதுப்பொருளில் வந்த உபசிரேஷ்டத்திற்கு, இணைநிலை எஞ்சு தொடராய் வந்த வாக்கியத்தோடு தொனித்தது காண்க.

### 2. வாக்கியாங்கப் பகுப்பிலக்கணம்.

| அடைமொழி. | எழுவாய், பயனிலை, துணை நிலை. |
|---|---|
| 0 | 1. பல......செய-ள் விஷயம் தனி. |
| 0 | கற்றோம்-பயனிலை, வினைநிலையுணர்த்தல், முற்று, துணை நிலையொன்றுடைத்தனி. |
| 0 | யாம்......எழுவாய், வினைமுதல் தனி. |
| 0 | 2. தன்......செய-ள், 2-ம் வேற்.தொகை ஆக்கல், தனி. |
| 0 | புகழவேண்டா பயனிலை, வியங்கோள் வருதல், முற்று, துணை நிலையொன்றுடைத்தனி. |
| 0 | (ஒருவன்) எழுவாய், தொகைநிலை, வினைமுதல் தனி. |

| | |
|---|---|
| அலர்கதிர் (சினையடை) விரி.<br>0<br>0 | 3. ஞாயிற்றை செய-ள்,அழித்தல்,விரி.<br>கைக்குடையும் } எழுவாய், வினைமுதல், தனி.<br>காக்கும் ........பயனிலை, வினைநிலையுரைத்தல்,முற்று, துணைநிலையொன்றுடைத்தனி. |
| சில, பொருளடை, தனி.<br>0<br>பல ....... பொருளடை, தனி.<br>அச்சாணி... } குணவடை,தனி<br>அன்னதுழை } யங்கவடுக்கு. | 4. கற்றூர்கண்ணும் } இடப்பொருள்,பொருளிடம், விரி.<br>உளவாம்...... பயனிலை, வினைநிலையுரைத்தல், துணைநிலை இரண்டுடைத்தனி.<br>கற்றூர்க்கு-- பகைதொடர் பொருள், விரி.<br>சொல் ........ எழுவாய், வினைமுதல், விரி. |

## 3. சொற்றணியிலக்கணம்.

பல...........ஒருமொழி, குணவடியாய்ப் பிறந்த காரணவாக்கப் பொதுப் பெயர், இயற்சொல், இலக்கணமுடையதாகிய இயல்புவழக்கு, வெளிப்படைப் பகாப்பதம், அஃறிணைப் பலவின் பாற் படர்க்கை, செயப்படு பொருளுடை இரண்டாம் வேற்றுமை.

நூலைக் குறித்தலால், குணவாகு பெயரெனினும் பொருந்தும். குறிப்பு வினையாலணையும் பெயரெனவுங் கூறலாகும்.

கற்றேம்.....ஒருமொழி, செயப்படு பொருள் குன்றாத தன்வினையில் செய்வினையாய் வந்த இறந்த காலங் காட்டும் ஒருமை உயர்வினால் வழுவமைதியாய் வந்த இருதிணை இருகூற்றுப் பன்மை: (இங்கே உயர்திணையாண்பால்) தெரிநிலை விதியியல்புவினைமுற்று, இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகுபதம்.

யாம்..........ஒருமொழி, பொருளியலாய் வந்த இடுகுறி மரபுச் சிறப்புப் பெயர், இயற்சொல்லிலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகாப்பதம், ஒருமை உயர்வினால் வழுவமைதியாய் வந்த இருதிணை இருகூற்றுப் பன்மை, (இங்கே உயர்திணையாண்பால்) வினைமுதற் பொருளுடை முதலாம் வேற்றுமை.

என்று.........தத்தம் பொருளுருபில், பெயர்ப்பொருடரும் தெரிநிலை வினையெச்சச் சொல்லுருபாய், பெயர்ப்பின்னொன்றிய புறத்துறுப்பிடைச்சொல்.

தன்..........ஒருமொழி, பொருளியலாய் வந்த இடுகுறி மரபுச் சிறப்புப் பெயர், இயற்சொல்லிலக்கணமுடையதாகிய இயல்பு வழக்கு வெளிப்படைப் பகாப்பதம், இருதிணை ஒருமைப் படர்க்கை, (இங்கே பொதுமை நீங்கிய உயர்திணையாண்பால்) செயப்படு பொருளுடை இரண்டாம் வேற்றுமை.

புகழவேண்டா.. எச்சத் தொகாநிலை, அமைப்புத் தொடர்மொழி வினைச் சொல், செயப்படுபொருள் குன்றாத தன்வினையில் செய்வினையாய் வந்த முக்காலத்துக்கும் பொதுவான இருதிணை ஐம்பால் மூவிடத்து தெரிநிலை மறைவியங்கோள் வினைமுற்று, இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்புவழக்கு வெளிப்படைப் பகுபதம்.

வேண்டு, வியங்கோட் பொருடரு மிடைச்சொல்.

அலர்............ஒருமொழி, வினைச்சொல், செய்த என்னும் வாய்ப்பாட்டு, காலங் கரந்த, தெரிநிலைப் பெயரொச்ச வினைத்தொகை, திணைபாலிடப் பொது.

உள்பொருள், இல்பொருள் எனக் குறிப்புப் பெயரொச்சத்திலும் வினைத்தொகைகளுண்டு.

கதிர்............ஒருமொழி, உவம ஆகு பெயராய் வந்த காரண மரபுச் சிறப்புப்பெயர், இயற்சொல் இலக்கணமுடையதாகிய இயல்பு வழக்குக் குறிப்புப் பகாப்பதம், அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை: (இங்கே பலவின்பால்) செயப்படு பொருளுடை இரண்டாம் வேற்றுமை.

அலர் கதிர், வினைத்தொகைநிலை அமைப்புத் தொடர்மொழியெனவும் வைத்திலக்கணங் கூறலாம்.

ஞாயிற்றை..... ஒருமொழி, இடுகுறி மரபுச் சிறப்புப்பெயர் திரிசொல், இலக்கணமுடையதாகிய இயல்புவழக்கு வெளிப்படைப் பகாப்பதம், அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை: (இங்கே ஒன்றன்பால்) செயப்படு பொருளுடை இரண்டாம் வேற்றுமை.

கைக்குடையும்..ஏழாம் வேற்றுமை யுருபும் பயனுந் தொக்கிய தொகைநிலை யமைப்புத் தொடர்மொழி, காரண மரபுச் சிறப்புப்பெயர், இயற்சொல்லிலக்கணமுடையதாகிய இயல்புவழக்கு வெளிப்படைப் பகாப்பதம், அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை: (இங்கே ஒன்றன்பால்) வினைமுதற் பொருளுடை முதலாம் வேற்றுமை.

உம், தத்தம் பொருளுருபில், குறியுருபாய் இழிவு சிறப்புப்பொருள் தந்து வந்த பெயர்ப்பின்னொன்றிய புறத்துறுப் பிடைச்சொல்.

காக்கும்.........ஒருமொழி, செயப்படுபொருள் குன்றாத தன்வினையில் செய்வினையாய் வந்த எதிர்காலங் காட்டும் பலர்பால் தவிர்ந்த நாற்பால் படர்க்கை வினைமுற்று: (இங்கே பொதுமை நீங்கிய அஃறிணை ஒன்றன்பால்) இயற்சொல்லிலக்கணமுடையதாகிய இயல்புவழக்கு வெளிப்படைப் பகுபதம்.

சில.............மேலே பலவென்பதுக்கொத்த இலக்கணங் கூறுக.

கற்றார் கண் ......ஒருமொழி, தெரிநிலை வினையாலணையுங் காரணவாக்கச் சிறப்புப்பெயர்,இயற்சொல் இலக்கணமுடையதாகிய வியல்புவழக்கு வெளிப்படைப் பகுபதம், உயர்திணைப் பலர்பால் படர்க்கை இடப்பொருளுடை ஏழாம் வேற்றுமை.

உம், மேலே கூறியபடி.

உளவாம்........ஒருமொழி, உண்மையென்னும் பண்படியாகப் பிறந்த செயப்படுபொருள் குன்றாத நிகழ்காலங் காட்டும் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை, ஒருமையிற் பன்மை வந்த வழுவமைதி, உடம்பாட்டுக்குறிப்பு வினைமுற்று, இயற்சொல்லிலக்கணமுடையதாகிய வியல்புவழக்குக் குறிப்புப் பகுபதம்.

ஆம், என்பது, தத்தம்பொருடரும் வினைச்சொல்லுருபாய் இயல்புப்பொருள் தந்துவந்த, வினையின் பின்னொன்றிய புறத்துறுப் பிடைச்சொல்.

உளவென்னும் குறிப்புவினையாலணையும் பெயர், ஆம் என்னும் இடைவினை முற்றைத் தொடர்ந்துவந்த, எழுவாய்த் தொடர்மொழியெனவைத்து இலக்கணங் கூறவும் பெறும்.

பல..............மேலே கூறியபடி

கற்றார்க்கு.......மேலே கூறியபடி கூறி, வேற்றுமையை மாத்திரம் நான்காம் வேற்றுமையென மாற்றிக்கொள்க.

அச்சாணி....... ஏழாம் வேற்றுமை யுருபும் பயனுந் தொக்கிய தொகைநிலையமைப்புத் தொடர்மொழி, இடுகுறி மரபுச் சிறப்புப்பெயர், இயற்சொல்லிலக்கணமுடைய, இயல்புவழக்கு, வெளிப்படைப் பகாப்பதம், அஃறிணைப் பொதுப்பாற் படர்க்கை, (இங்கே ஒன்றன்பால்) செயப்படுபொருளுடை இரண்டாம் வேற்றுமை.

அன்னது.......ஒருமொழி, குறிப்பு வினைப்பெயரோடு நின்ற ஆகியவென்

னும் பெயரொச்சப் பண்புருபுத் தொகை, இருதிணை ஐம்பா ல் மூவிடப்பொது (இங்கே ஒன்றன்பால்).

ஓர்............ ஒருமொழி, எண்பொருட்பெயரோடு நின்ற ஆகிய வென் னும் பெயரொச்சப்பண்புருபுத்தொகை, இருதிணையைம்பால் மூவிடப்பொது: (இங்கே ஒன்றன்பால்).

இவ்விரண்டையும், பண்புத்தொகையெனச் சுருங்கக்கூறலுமாகும்.

சொல்......... ஒருமொழி, ஆகுபெயராய்வந்த காரண மரபுச்சிறப்புப்பெயர் இயற்சொல்லிலக்கணமுடையதாகிய இயல்புவழக்கு, குறிப் புப் பகாப்பதம், அஃறிணைப் பொதுப்பாற்படர்க்கை: (இங் கே ஒன்றன்பால்) வினைமுதற் பொருளுடை முதலாம்வேற் றுமை.

4. *சொற்றொடர்ப்பிலக்கணம்.

பல............ இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராய், இடைப் பிறவரல் பொருந்ாது, எழுவாய்கொண்ட பயனிலைச்சொல் லை ஈற்றிலேகொண்டது.

கற்றோம்...... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்ாது, யாம் என்னும் எழுவாய்ச்சொல்லை ஈற்றிலேகொண்டது.

யாம்............ எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தக் கற்றோம் என்னுஞ்சொல்லை முதலிலும், இடைப்பிறவரல் பொருந் தாது, என்று என்னும் பெயர்ப்பொருளில் வரும் வினை இடைச்சொல்லை ஈற்றிலுங்கொண்டது.

இவ்வாறு ஈற்றிலேகொண்டது, பிரதானத்தின் பயனிலையைக்கொள் வதற்கென்க.

என்று......... வினையெச்சத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்த ஒரு வன் என்னுந்தொகைநிலை எழுவாய்கொண்ட, புகழவேண் டாவென்னும் தன்கருத்தா வினைச்சொல்லை ஈற்றிலேகொ ண்டது.

தன்............ இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராய், இடை ப்பிறவரல் பொருந்தாது, ஒருவன் என்னுந் தொகைநிலை எழுவாய்கொண்ட, புகழவேண்டாவென்னுஞ்சொல்லை ஈற் றிலேகொண்டது.

புகழவேண்டா. வினைமுற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, ஒருவன் என்னுந்தொகைநிலை எழுவாய்ச்சொல்லை முதலி லேகொண்டது.

அலர்....... .. வினைத் தொகைநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, கதிர் என்னும் செய்பவனாகிய சொல்லை ஈற்றிலே கொண்டது.

கதிர்............ இரண்டாம்வேற்றுமை யுருபும் பயனுந்தொக்கிய தொகைநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, ஞாயிற்றை என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

ஞாயிற்றை... இரண்டாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, எழுவாய்கொண்ட காக்குமென்னுஞ் சொல்லை ஈற்றிலேகொண்டது.

கைக்குடையும்.. எழுவாய்த்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, காக்கும் என்னும் பயனிலைச்சொல்லை ஈற்றிலேகொண்டது.

காக்கும்...... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, கைக்குடையும் என்னுஞ்சொல்லை முதலிலேகொண்டது.

சில............ இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்தாது, கற்றூர் கண்ணும் என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

கற்றூர்கண்ணும்...ஏழாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, எழுவாய்கொண்ட, உளவாம் என்னுஞ் சொல்லை ஈற்றிலேகொண்டது.

உளவாம்...... முற்றுத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, சொல் என்னும் எழுவாய்ச்சொல்லை ஈற்றிலேகொண்டது.

பல............ இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, கற்றூர்க்கு என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

கற்றூர்க்கு... வேற்றுமைத் தொகாநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்த, எழுவாய்கொண்ட, உளவாம் என்னுஞ்சொல்லை முதலிலேகொண்டது.

அச்சாணி...... இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, அன்னது என்னுஞ்சொல்லை ஈற்றிலேகொண்டது.

அன்னது...... பண்புத்தொகைநிலைத்தொடராய், இடைப்பிறவரல்பொருந்த, சொல் என்னும் எழுவாய்ச்சொல்லை ஈற்றிலேகொண்டது.

ஓர்..............பண்புத் தொகைநிலைத் தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, சொல் என்னும் எழுவாய்ச் சொல்லை ஈற்றிலே கொண்டது.

சொல்..........எழுவாய்த் தொடராய், இடைப்பிறவரல் பொருந்தாது, உளவாம் என்னும் பயனிலைச்சொல்லை ஈற்றிலேகொண்டது.

5-வது. சொற்புணர்ச்சிலக்கணத்தையும். 6-வது. சொல்லுறுப்பிலக்கணத்தையும், மேலே கூறியவாறு கூறிக்கொள்க.

இலக்கணங் கூறியல் முற்றிற்று.

பல சாதனை கூறிற் பெருகுமென்பதினால், இம்மூன்று சாதனையோடு முடிக்கப்பட்டது.

---

## முகவுரை.

வாக்கியங்கள் தனிவாக்கியம், ஒன்றித்தொடர் வாக்கியம், ஒன்றாத்தொடர் வாக்கியம், அடுக்குத்தொடர் வாக்கியம் என நான்காம். அவற்றின் அங்கங்களும் எழுவாய், பயனிலை, துணைநிலை, அடைமொழியென நான்காம். அவ்வங்கங்களின் வகைகளும் தனிநிலை, விரிநிலை, வாக்கியநிலை, அடுக்குநிலையென நான்காம். அவ்வங்கங்களிற் பயிலுஞ் சொற்களும் வேற்றுமை, வினைமுற்று, பெயரொச்சம், வினையெச்சமென நான்காம். இவைகளுக்காகுஞ் சொற்களும் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காம். இப்படி நந்நான்காய் வருபவற்றையும், இவற்றின் விகற்பங்களையும், இந்நூல் கூறிய வழியே நன்காராய்ந்து, "சொற்றவற்றியலான் மற்றைய பிறவுந்-தெற்றெனவுணர்தல், தெளிவோர் கடனே."

வாக்கியலக்ஷணம் முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 29 | நின்றவிடத்து. சொற்கன் | நின்றவிடத்து சொற்கள் |
| 11 | 29 | பகைதொடர் | பகைத்தொடர் |
| 12 | 18 | கழம்பழம் | களம்பழம் |
| ஷை | 23 | POSSESSER | POSSESSOR |
| 13 | 2 | திரிபீனுக்கத் | திரிபினுக்கத் |
| 14 | 12 | ENTENSION | EXTENSION |
| 40 | 24 | தொரடர் | தொடர் |
| 43 | 11 | தோறுஞசென்று | தோறுஞ்சென்று |
| 49 | 7 | வந்தேன்: | வந்தேன்; |
| 63 | 28 | என்னும் | என்னும் |
| ஷை | 31 | ஒொழுவாய்க்கு | ஓொழுவாய்க்கு |
| 66 | 2 | (பயனிலைபெயரைக்கொண்டது | (பயனிலைபெயரைக்கொண்டது) |
| 76 | 14 | தெளிவினுலும | தெளிவினுலும் |
| 79 | 2 | வருவு | வருவ |
| 81 | 2 | பொதுவதால் | பொதுவாதலால் |
| 83 | 24 | இ°°து | இஃது |
| 85 | 2 | நிற்கும | நிற்கும் |
| 86 | 4 | வ॥க்கியங்கங்களில் | வாக்கியாங்கங்களில் |
| 88 | 32 | யாப்பிலக்கணக்கத்துள் | யாப்பிலக்கணத்துள் |
| 92 | 21 | முற்றுபபயனிலை | முற்றுப்பயனிலை |
| 114 | 19 | செய்ெ ன் | செய்யென் |
| ஷை | 23 | இலக்கணக் | இலக்கணங் |
| 121 | 11 | நிகழ்வப்பொருள் | நிகழ்வுப்பொருள் |
| 123 | 21 | தொகாநிலைததொடராய் | தொகாநிலைத்தொடராய் |
| 132 | 33 | சந்தயிலக்க | சந்தியிலக்க |
| 133 | 15 | சந்தியிலக்கணத்தில | சந்தியிலக்கணத்தில் |

# வாக்கியலக்ஷணத்தின் அட்டவணை.

## I. உறுப்பியல்.


| | விதி. | பக்கம். |
|---|---|---|
| வாக்கியமாவதின்னதென்பது ... ... | 1 | 1 |
| வாக்கியக்கருத்துக்கள் புலப்படுவதற்குக் காரணங்கள் ... | 2 | 2 |
| அவாய்நிலை ... ... ... ... | 3 | 2 |
| தகுதி ... ... ... ... | 4 | 3 |
| அண்மை ... ... ... ... | 5 | 3 |
| வாக்கியக்கருத்துக்கள் முடியும்வகை ... ... | 6 | 5 |
| வாக்கிய உறுப்புகள் ... ... ... | 7 | 6 |
| எழுவாயும் பயனிலையும் ... ... ... | 8 | 6 |
| எழுவாய் பயனிலைகளாகிய உறுப்புகளின் வகுப்புகள் | 9 | 7 |
| தனிநிலை எழுவாய் ... ... ... | 10 | 7 |
| விரிநிலை எழுவாய் ... ... ... | 11 | 8 |
| தனிநிலைப்பயனிலை ... ... ... | 12 | 8 |
| விரிநிலைப்பயனிலை ... ... ... | 13 | 9 |
| பயனிலைத்துணைநிலை ... ... ... | 14 | 9 |
| செயப்படுபொருளாகிய துணைநிலை வருதல் | 15 | 10 |
| கருவிப்பொருளும் அதைச்சார்பொருளுமாகிய துணைநிலை | 16 | 10 |
| கோடற்பொருளும் அதைச்சார்பொருளுமாகிய துணைநிலை | 17 | 11 |
| நீக்கற்பொருளும் அதைச்சார்பொருளுமாகிய துணைநிலை | 18 | 12 |
| கிழமைப்பொருளாகிய துணைநிலை வருதல் ... | 19 | 12 |
| இடப்பொருளாகிய துணைநிலை வருதல் ... ... | 20 | 13 |
| வினிப்பொருளாகிய துணைநிலை வருதல் ... ... | 21 | 14 |
| துணைநிலை பலவருதல் ... ... ... | 22 | 14 |
| துணைநிலைப்பகுப்பு ... ... ... | 23 | 15 |
| தனிநிலைத்துணைநிலை ... ... ... | 24 | 15 |
| விரிநிலைத் துணைநிலை ... ... ... | 25 | 16 |
| அடைமொழி ... ... ... | 26 | 16 |
| அடைமொழிவகை ... ... ... | 27 | 17 |
| பொருளடை ... ... ... | 28 | 17 |
| இடவடை ... ... ... | 29 | 17 |
| காலவடை ... ... ... | 30 | 17 |
| சினையடை ... ... ... | 31 | 18 |

| | விதி. | பக்கம். |
|---|---|---|
| குணவடை ... ... ... | 32 | 18 |
| தொழிலடை ... ... ... | 33 | 18 |
| அடைமொழியின் பகுப்பு ... ... ... | 34 | 19 |
| தனிநிலையடை ... ... ... | 35 | 19 |
| விரிநிலையடை ... ... ... | 36 | 19 |
| வாக்கியநிலையங்கம் ... ... ... | 37 | 20 |
| அடுக்குநிலையங்கம் ... ... ... | 38 | 20 |
| அடுக்குநிலை ஐவகையாமென்பது | 39 | 21 |


## II. வாக்கியவியல்.


| | | |
|---|---|---|
| வாக்கியவகை ... ... ... ... | 40 | 22 |
| தனிவாக்கியம்... ... ... ... | 41 | 22 |
| தனிவாக்கியம் முடியும்விதம்... ... ... | 42 | 22 |
| தனிவாக்கியவகை ... ... ... | 43 | 23 |
| தனிநிலையங்கத் தனிவாக்கியம் ... ... | 44 | 23 |
| விரிநிலையங்கத் தனிவாக்கியம் ... ... | 45 | 23 |
| தொடர்வாக்கியம் ... ... ... | 46 | 24 |
| தொடர் வாக்கியவகை ... ... ... | 47 | 24 |
| ஒன்றித்தொடர் வாக்கியம் ... ... ... | 48 | 25 |
| ஒன்றித்தொடரின் பிரிவு ... ... ... | 49 | 26 |
| வாக்கியநிலை வேற்றுமைப்பொருள் முடிபுத்தொடர் ... | 50 | 26 |
| வாக்கியநிலை வினைமுதற்பொருள் முடிபுத்தொடர் ... | 51 | 27 |
| வாக்கியநிலைத் துணைப்பொருள் முடிபுத்தொடர் ... | 52 | 28 |
| வாக்கியநிலைச் சார்புத்துணைப்பொருள் முடிபுத்தொடர்... | 53 | 29 |
| வாக்கியநிலை அடைமொழிப்பொருள் முடிபுத்தொடர் ... | 54 | 30 |
| வாக்கியநிலைப் பெயரெச்சஅடைமொழி முடிபுத்தொடர்... | 55 | 30 |
| வாக்கியநிலை வினையெச்சஅடைமொழி முடிபுத்தொடர்... | 56 | 31 |
| வாக்கியநிலை அடைமொழி முடிபுத்தொடர் ... | 57 | 33 |
| வாக்கியநிலை அடைமொழிப்பொருள் முடிபின் விதங்கள்... | 58 | 33 |
| அப்பிரதானங்களுக்குரிய சிலபொருட்கள்... ... | 59 | 34 |
| ஒன்றாத்தொடர் வாக்கியம் ... ... ... | 60 | 35 |
| அத்தொடர்வகை ... ... ... | 61 | 35 |
| இணைநிலைத்தொடர் ... ... ... | 62 | 35 |
| சமநிலைத்தொடர் ... ... ... | 63 | 38 |

| | விதி. | பக்கம். |
|---|---|---|
| எதிர்நிலை ... ... ... ... | 64 | 38 |
| மறைநிலை ... ... ... ... | 65 | 39 |
| பிரிநிலை ... ... ... ... | 66 | 39 |
| ஏதுகாரியநிலை... ... ... ... | 67 | 39 |
| வினாவிடைநிலை ... ... ... | 68 | 40 |
| அடுக்குத்தொடர் வாக்கியம் ... ... ... | 69 | 40 |
| வேற்றுமையங்கங்களடுக்கும் விதம் ... ... | 70 | 42 |
| வினையங்கங்களடுக்கும் விதம் ... ... | 73 | 43 |
| அடுக்குத்தொடரின் வகை ... ... ... | 75 | 45 |
| தனிநிலையங்கவடுக்கு ... ... ... | 76 | 45 |
| விரிநிலையங்கவடுக்கு ... ... ... | 77 | 45 |
| வாக்கிய நிலையங்கவடுக்கு ... ... ... | 78 | 46 |
| அடுக்கு நிலையங்கவடுக்கு ... ... ... | 79 | 46 |
| கலப்பங்கவடுக்கு ... ... ... | 80 | 47 |
| அடுக்குத்தொடர் வாக்கியங்கள்தொடர்ந்து ஒன்றித்தொடர் ஒன்றாகதொடராய் வருமென்பது ... ... | 81 | 47 |


## III. பொதுவியல்.


| | விதி. | பக்கம். |
|---|---|---|
| வாக்கியப்பிரயோகம் ... ... ... | 83 | 50 |
| அம்முடிபுவகை ... ... . . | 84 | 50 |
| தந்தொழில்முடிபு ... ... ... | 85 | 50 |
| தந்தொழில்முடிபுவகை ... ... ... | 86 | 50 |
| செயப்படுபொருளிலாப் பயனிலைமுடிபு ... ... | 87 | 51 |
| செயப்படுபொருளுடைப் பயனிலைமுடிபு ... ... | 88 | 51 |
| இயற்றுதற்கர்த்தாச் செயப்படுபொருளுடைமுடிபு ... | 89 | 51 |
| இயற்றுதற்கர்த்தா ஏதுவாற் செயப்படுபொருளுடைமுடிபு | 90 | 52 |
| தம்மினாகிய தொழில்முடிபு ... ... ... | 91 | 52 |
| தம்மினாகிய தொழில்முடிபுவகை ... ... | 92 | 52 |
| இயற்றாக்கர்த்தாப் படுவினைப்பயனிலை முடிபு ... | 93 | 53 |
| இயற்றுங்கர்த்தாப் படுவினைப்பயனிலை முடிபு ... | 94 | 53 |
| துணைநிலை எழுவாய்ப்பிரயோகம் ... ... | 95 | 54 |
| மறைமுக விதிப்பிரயோகம் ... ... ... | 96 | 54 |
| அங்கமாற்றுப்பிரயோகம் ... ... ... | 97 | 55 |
| வாக்கியாங்கநிலை ... ... ... | 98 | 56 |

| | விதி. | பக்கம். |
|---|---|---|
| அங்நிலையின் பேதம் ... ... ... | 99 | 56 |
| வாக்கியாங்கத்தொகை ... ... ... | 100 | 57 |
| தனி வாக்கியாங்கத்தொகை ... ... ... | 101 | 57 |
| ஒன்றித்தொடர் வாக்கியாங்கத்தொகை ... ... | 102 | 59 |
| ஒன்றாத்தொடர் வாக்கியாங்கத்தொகை ... ... | 103 | 61 |
| அடுக்குத்தொடர் வாக்கியாங்கத்தொகை ... ... | 104 | 62 |
| வாக்கிய எச்சங்கள் ... ... ... | 108 | 64 |
| வாக்கியாங்கத்தொடர் முடிபு ... ... | 109 | 65 |
| தனிநிலையங்கம் எழுவாய் பயனிலையின் தொடர்முடிபு ... | 110 | 65 |
| துணை நிலைப்பொருள்களின் தொடர்முடிபு ... | 111 | 66 |
| அடைமொழி பெயரெச்சத்தொடர் முடிபு ... | 112 | 66 |
| அடைமொழி வினையெச்சத்தொடர் முடிபு ... | 113 | 66 |
| அடுக்கு நிலையங்கம் எழுவாயடுக்குத்தொடர் முடிபு ... | 114 | 67 |
| பயனிலையடுக்குத்தொடர் முடிபு ... ... | 115 | 67 |
| துணை நிலையடுக்குத்தொடர் முடிபு ... ... | 116 | 68 |
| அடைமொழியடுக்குத்தொடர் முடிபு ... ... | 117 | 68 |
| இடைப்பிறவரல் ... ... ... | 118 | 69 |
| வாக்கியாங்கங் கொள்ளுஞ்சொல் ... ... | 119 | 70 |
| தனிநிலையங்கங் கொள்ளுஞ்சொல் ஈற்றிலும் முதலிலும் வரும் ... ... ... ... | 120 | 70 |
| அடுக்குநிலையங்கங் கொள்ளுஞ்சொல் ஈற்றிலும் முதலிலும் வரும் ... ... ... ... | 121 | 70 |
| வாக்கியாங்கவழு ... ... ... | 122 | 71 |
| வாக்கியாங்கவழுவமைதி ... ... ... | 123 | 72 |
| திணை வழுவமைதி ... ... ... | 124 | 72 |
| திணை பால் மரபுவழுவமைதி ... ... | 125 | 73 |
| திணை பால் வழுவமைதி ... ... ... | 126 | 74 |
| பாலிடம் வழுவமைதி ... ... ... | 127 | 75 |
| திணை பால் வழுவாதுகாத்தல் ... ... | 128 | 75 |
| காலவழுவமைதி ... ... ... | 129 | 76 |
| இதுவுமது ... ... ... ... | 130 | 76 |
| வினாவழாநிலை ... ... ... ... | 131 | 77 |
| விடைவழாநிலையும் வழுவமைதியும் ... ... | 132 | 77 |
| சுட்டைப்பற்றிய மரபுவழுவமைதியும் வழாநிலையும் ... | 133 | 78 |

| | விதி. | பக்கம். |
|---|---|---|
| காரணகாரிய வழுவாக்காப்பும் வழுவமைதியும் ... | 134 | 79 |
| மரபுவழாநிலை ... ... ... ... | 135 | 80 |
| மரபுவழாநிலையும் வழுவமைதியும் .... ... | 136 | 81 |
| வழுவாக்காப்பும் வழுவமைதியும் ... ... | 137 | 82 |
| மரபுவ்ழாநிலை ... ... ... ... | 138 | 83 |
| மரபுவழாக்காப்பு ... ... ... | 139 | 83 |
| மரபுவழாக்காப்பும் அதன் வழுமைதியும் ... ... | 140 | 84 |
| மரபுவழ்ாவாமற்காத்தல் ... ... ... | 141 | 85 |
| மரபுவழாநிலை ... ... ... ... | 142 | 86 |
| மரபுவழுவமைதி ... ... ... | 143 | 87 |
| மரபுவழுவமைதி ... ... ... | 144 | 87 |
| மரபுவழுவமைதி ... ... ... | 145 | 88 |


## IV. அநுபந்தம்.


| | | |
|---|---|---|
| இலக்கணங்கூறியல் ... ... ... | 146 | 89 |
| வாக்கியப்பகுப்பிலக்கணம் ... ... ... | 147 | 89 |
| தனிவாக்கியத்திற்கு இலக்கணங்கூறல் ... ... | 148 | 89 |
| தொடர்வாக்கியத்திற் கிலக்கணங்கூறல் ... ... | 149 | 90 |
| ஒன்றித்தொடர் வாக்கியத்திற்கிலக்கணங்கூறல் ... | 150 | 91 |
| ஒன்றாத்தொடர் வாக்கியத்திற்கிலக்கணங்கூறல் ... | 151 | 94 |
| அடுக்குத்தொடர் வாக்கியத்திற்கிலக்கணங்கூறல் ... | 152 | 97 |
| வாக்கியாங்கப்பகுப்பிலக்கணம் ... ... | 153 | 99 |
| ஒன்றித்தொடர் வாக்கியாங்கப் பிரிப்பிலக்கணம் ... | ,, | 100 |
| ஒன்றாத்தொடர் வாக்கியாங்கப் பிரிப்பிலக்கணம் ... | ,, | 101 |
| சொற்றனியிலக்கணம் ... ... ... | 154 | 102 |
| ஒருமொழியிலக்கணம் ... ... | 155 | 102 |
| சிறப்புவகைபற்றித் தன்னையுணர்த்தல் ... ... | 156 | 103 |
| பொதுவகைப்கற்றித் தன்னையுணர்த்தல் ... ... | 157 | 103 |
| சிறப்புவகைப்பற்றி இருதிணையைம்பாற்பொருளை உணர்த்தல் .... ... ... ... | 158 | 104 |
| பொதுவகைபற்றி இருதிணையைம்பாற்பொருளை உணர்த்தல் | 159 | 104 |
| சொற்கள் மூவிடங்களினின்று தன்னையும் இருதிணையைம்பாற்பொருளையுமுணர்த்துவிதம் ... ... | 160 | 105 |
| பெயர்க்கு இலக்கணங்கூறுமுறை ... ... | 161 | 105 |

| | விதி. | பக்கம் |
|---|---|---|
| பெயர்ச்சொல் மூவிடத்திலும் தன்னையும் இருதிணையைம் பாற்பொருளையும் உணர்த்தும் தன்மை ... | 162 | 107 |
| வினைக்கு இலக்கணங்கூறுமுறை ... ... | 163 | 111 |
| இடைச்சொல்லுக்கிலக்கணங்கூறுமுறை ... ... | 164 | 117 |
| உரிச்சொல்லுக்கு இலக்கணங்கூறுமுறை... ... | 165 | 119 |
| தொடர்மொழியிலக்கணம் .... ... ... | 166 | 120 |
| சொற்றொடர்பிலக்கணம் ... ... ... | 167 | 121 |
| சொற்புணர்ப்பிலக்கணம் ... ... ... | 168 | 131 |
| சொல்லுறுப்பிலக்கணம் ... ... ... | 169 | 134 |
| சாதனைகள் 1 ... ... ... ... | 170 | 137 |
| சாதனை 2 ... ... ... ... | ,, | 141 |
| சாதனை 3 ... ... ... ... | ,, | 144 |
| முடிவுரை ... ... ... ... | ,, | 150 |


7137a